சீக்ரட் நாவல் இதழ்

# திகில் ரோஜா

## ராஜேஷ் குமார்

1

கன்னியாகுமரி கலர் கலராய் விடிந்து கொண்டிருந்த அந்த காலை நேரத்தில் பேருந்தைவிட்டு இறங்கினாள் விஜயா. சுற்றும் முற்றும் பார்த்து நடைபோட்டாள்.

கையில் லேசாய் கனக்கிற பெட்டி. ராத்திரி பேருந்துப் பயணம் அவளுடைய தூக்கத்தைக் கெடுத்திருக்க, கண்[illegible]ளில் மிளகாயைத் [illegible]தூவியது மாதிரி எரிச்சல். 450 கிலோ மீட்டர் பயணம், அவளுடை[illegible] வயது மென்மையான உடம்பை துவைத்துப் போட்டிருந்தது.

விஜயா நடந்தாள். அந்த காலை நேரத்தில் பேருந்து நிலையம் வெறிச்சோடிப் போயிருக்க, சுசீந்திரம் போகும் பேருந்தில் மட்டும் பயணிகள் கூட்டம் தெரிந்தது. நடத்துனர் படியில் நின்று கத்திக் கொண்டிருந்தார்.

"சுசீந்திரம்... சுசீந்திரம்...!"

விஜயா, பேருந்தை நெருங்கி நடத்துனரிடம் கேட்டாள். "நேசமணி நகருக்குப் போக பஸ் இருக்கா...?"

நடத்துனரின் நெற்றி, ஒரு சுருக்கத்துக்கு உட்பட்டது. "நேசமணி நகரா... அங்கே போக பஸ் வசதி கிடையாதம்மா! ஆட்டோ பிடிச்சுத்தான் போகணும்..."

"இங்கிருந்து எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்...?"

"அதெல்லாம் தெரியாதம்மா... இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாய்க்குள்ளே கேட்பாங்க...!"

விஜயா நடத்துனருக்கு ஒரு நன்றி சொல்லிவிட்டு பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலை நோக்கிப் போனாள். வெளியே விடியற்காலையின் மைகரை இருட்டில் நான்கைந்து ஆட்டோக்கள் தெரிந்தன. பக்கத்து தேநீர் கடையில் பாய்லர் நெருப்பு கணகணவென்று தெரிய, டிரைவர்கள் பெஞ்சில் உட்கார்ந்து கண்ணாடி தம்ளர்களில் தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். விஜயா தயங்கிக் கொண்டு நிற்க, அவர்கள் எழுந்து வந்தார்கள்.

"ஆட்டோ வேணுமாம்மா...?" வயதான டிரைவர் ஒருவர் கேட்டார்.

"ம்..."

"எங்கே போகணும்...?"

"நேசமணி நகர்..."

"இப்படி பொதுவாய் சொன்னா எப்படிம்மா... நேசமணி நகர்ல எந்தப் பகுதி...?" விஜயா தன் கையில் இருந்த பெட்டியைக் கீழே வைத்துவிட்டு பர்ஸை எடுத்து பிரித்து ஒரு காகிதத் துண்டை உருவி அதில் இருந்த முகவரியைப் படித்துவிட்டுச் சொன்னாள்.

"நேசமணி நகர்ல பைரவி தெரு..."

"கிட்டத்தட்ட கடைசிக்குப் போகணும்மா... அம்பது ரூபாய் ஆகும்..."

"ரொம்ப அதிகமா சொல்றீங்களே...?"

"இது அதிகம் இல்லேம்மா... சரியான கட்டணம்தான். நேசமணி நகர், இங்கிருந்து மூணு கிலோ மீட்டர் ஊரை விட்டுத் தள்ளியிருக்கு... வீடுகளும் அதிகம் கிடையாது. இப்பத்தான் ஒவ்வொருத்தரா வீடு கட்டிக்கிட்டு இருக்காங்க... ஆள் நடமா[illegible]ம் அதிகம் இல்லாத இடத்துக்கு சவாரி போனா வரும்போது [illegible] டோவை காலியாத்தான் ஓட்டிக்கிட்டு வரணும்..."

"உட்காருங்கம்மா...!"

ஏறி உட்கார்ந்தாள்.

ஆட்டோ, கடற்கரையை ஒட்டிய சாலையில் ஒரு ஐந்து நிமிட நேரம் பயணித்ததுமே கட்டிடங்கள் காணாமல் போய் ரோட்டின் இரண்டு பக்கமும் சவுக்கு மரத் தோப்புகள் அடர்த்தியாய் வந்தன. அதிகாலை இருட்டு கொஞ்சம் அதிகப்படியாய் தெரிந்தது. மரங்களில் தங்கியிருந்த கடற்பறவைகள் விதவிதமான தொனியில் கத்திக் கொண்டிருந்தன. விஜயாவின் இதயத்தை பயம் மெல்ல பிறாண்டியது.

ஆட்டோ டிரைவரிடம் கேட்டாள்.

"என்ன... ஏரியா இப்படியிருக்கு...?"

"நான்தான் முதலிலேயே சொன்னேனேம்மா... ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத ஏரியான்னு! பணக்காரங்கதான் இந்த இடத்துல பங்களா கட்டுவாங்க..."

ஆட்டோ, முக்கி முனகிக் கொண்டு சிறிது மேடான அந்தத் தெருவில் பயணித்து அழுக்கான அந்த பழைய பங்களாவுக்கு முன்பாய் போய் நின்றது.

"இந்த வீடான்னு பாருங்கம்மா...!"

விஜயா, ஆட்டோவில் இருந்து கீழே இறங்கி காம்பவுண்டு கேட்டின் முகப்பைப் பார்த்தாள்.

'அபி இல்லம்' என்ற எழுத்துக்கள், ஒரு சலவைக் கல்லில் மங்கலாய்த் தெரிந்தது.

"இந்த வீடுதான்...!" என்று சொன்ன விஜயா, பெட்டியை



எடுத்துக் கொண்டு ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை டிரைவரிடம் நீட்டினாள். வாங்கிக் கொண்டு டிரைவர் சிரித்தார்.

விஜயா தயக்கமாய் நடந்துபோய் காம்பவுண்டு கேட்டின் மேல் கையை வைத்து மெல்லத் தள்ளிப் பார்த்தாள்.

சத்தம் காட்டாமல் திறந்து கொண்டது. நாய் ஏதேனும் இருக்குமோ என்கிற பய உணர்வில் எட்டிப் பார்த்தாள்.

போர்டிகோவில் ஒரு பழைய அம்பாசிடர் கார் நின்றிருந்தது. நாய் இருக்கிற மாதிரி தெரியவில்லை. இருந்தால் இந்நேரம் குரல் கொடுத்து இருக்குமே...!

விஜயா, துணிச்சலை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனாள். ஒரு காலத்தில் பங்களாவைச் சுற்றி தோட்டமாய் இருந்த இடம், இப்போது சரியான பராமரிப்பு இல்லாமல் புதர் மண்டிக் கிடந்தது. தண்ணீர் இல்லாத செயற்கைக் குளத்தின் நடுவே குடத்தோடு நின்றிருந்த ஒரு பெண்ணின் சிலை உருக்குலைந்து போயிருந்தது.

கண்களுக்கு யாராவது தட்டுப்படுகிறார்களா என்று பார்த்துக் கொண்டே, விஜயா, போர்டிகோவுக்குள் நுழைந்து காரைச் சுற்றிக் கொண்டு போய் வாசற்படிகளில் ஏறினாள். வேலைப்பாடுகளோடு கூடிய கனமான தேக்குக் கதவு இறுக்கமாய் சாத்தப்பட்டிருக்க, அழைப்பு மணியின் பொத்தானை கண்டுபிடித்து அழுத்தினாள். அது உள்ளே வீரிட்டு அடங்கியது.

முழுதாய் ஒரு நிமிட நேரத்துக்குப் பிறகு அந்த தேக்கு கதவு 'ப்பர்ர்...' என்ற சத்தத்தோடு திறக்க, இரவு நேர பைஜாமா அணிந்த ஒரு இளைஞன் தெரிந்தான். கலைந்த தலை. இறுக்கமான முகம்.

விஜயா கேட்டாள்.

"அபிநயா இருக்காங்களா?"

"நீங்க...?"

"நான் அபிநயாவோட சிநேகிதி விஜயா. கல்லூரியில் ஒண்ணாப் படிச்சவங்க... கோயமுத்தூரிலிருந்து வர்றேன்...!"

"அபிநயா இல்லையே...!"

"எங்கே போயிருக்காங்க...?"

"யோகா, தியானம் சம்பந்தப்பட்ட ஒரு மாநாடு திருவனந்தபுரத்தில் நடக்குது. அதுல கலந்துக்கிறதுக்காக நேத்துக் காலையிலேயே புறப்பட்டுப் போயிட்டா..."

"எப்ப வருவாங்க...?"

"இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு வர்றதா சொல்லிட்டுப் போயிருக்கா..."

"விஜயா, சில விநாடி தயக்கத்துக்குப் பிறகு மெல்லிய குரலில் கேட்டாள். "நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

அந்த இளைஞன் புன்னகைத்தான். "என்னங்க! அபிநயா உங்க சிநேகிதின்னு சொல்றீங்க.. என்னைப் பத்தி அவள் உங்ககிட்ட சொல்லியிருக்கணுமே...!"

"மன்னிக்கணும்! அவள் ஏதும் சொல்லலையே...?"

"அதனால் என்ன... நானே சொல்றேன்... நாங்க ரெண்டு பேரும் அவசர அவசரமா கல்யாணம் பண்ணிக்கிட்டோம்... யாருக்கும் சொல்லக்கூட நேரம் இல்லை..."

"விஜயா திகைத்து, சுவாசிக்க காற்று கிடைக்காமல் திணறினாள். 'அபிநயா கல்யாணம் செய்து கொண்டாள்...! கடைசி வரைக்கும் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே வாழ்ந்து காட்ட முடியும் என்று சவால் விட்டவளாயிற்றே அவள்...?"

"என்ன... மிஸ் விஜயா... உங்க தோழி அபிநயா கல்யாணம் பண்ணிக்கிட்டதை உங்களால நம்ப முடியலையா?"

"ஆமா..."

"உள்ளே வாங்க... ஒரு காப்பி சாப்பிட்டுகிட்டே பேசலாம்..."

அவன் வழிவிட்டு நிற்க - விஜயா, பெட்டியோடு உள்ளே நுழைந்தாள். வரவேற்பறை பழங்கால சோபாக்களோடு தெரிந்தது.

"உட்காருங்க விஜயா...!"

விஜயா, ஒரு சோபாவில் உட்காரும் போதே சுவரில் மாட்டியிருந்த அபிநயாவின் கல்யாணப் புகைப்படம், பார்வைக்குக் கிடைத்தது. கழுத்தில் கனமான ரோஜா மாலைகளோடு தோள்களை இடித்துக் கொண்டு இருவரும் கேமராவைப் பார்த்து எல்லாப் பற்களும் தெரிய சிரித்திருந்தார்கள்.

"என்னால நம்பவே முடியலை...!"

"இதே ஆச்சரியத்தோட என்னையும் தெரிஞ்சுக்குங்க... என் பேரு மோகன். சிவில் இன்ஜினியரிங் படிச்சிருக்கேன். நாகர்கோவிலில் ஒரு கட்டுமான நிறுவனத்தில் வேலை. மூணு மாசத்துக்கு முந்தி யோகா கத்துக்க போனபோது எனக்கும் அபிநயாவுக்கும் பழக்கம் ஏற்பட்டது. பழக்கம் காதலாகி, காதல் கல்யாணத்துல முடிஞ்சபோது எங்களாலேயே நம்ப முடியலை...! சரி... என்ன சாப்பிடறீங்க...?"

"ஒண்ணும் வேண்டாம்...!"

"ரொம்பவும் களைப்பாகத் தெரியறீங்க... காப்பியா... டீயா?"

"காப்பி...!" சொன்ன விஜயா, எழுந்தாள். "சமையலறை எங்கேன்னு சொல்லுங்க... நானே வந்து காப்பி போடறேன்...!"

மோகன் பதற்றமாய் குறுக்கிட்டான். "இல்ல... இல்ல... நீங்க இந்த வீட்டுக்கு வந்த விருந்தாளி... வேலை செய்யக்கூடாது. நான் நல்லா காப்பி போடுவேன். பயப்படாதீங்க..." மோகன்



சொல்லிக் கொண்டே எழுந்து வீட்டின் உள்பக்கம் நோக்கிப் போனான். மறைந்தான்.

விஜயா, சோபாவில் சாய்ந்து கொண்டு மறுபடியும் அபிநயாவின் கல்யாணப் புகைப்படத்தைப் பார்த்தாள். மானசீகமாய் அவளோடு பேசினாள். 'அபிநயா...! காதல் என்பது ஒரு வலை. கல்யாணம் என்பது ஒரு பள்ளம். நான் வலையிலும் சிக்கமாட்டேன். பள்ளத்திலும் விழமாட்டேன் என்று வீரவசனம் பேசிய நீ இன்றைக்கு கல்யாணப் புகைப் படத்தில் மாலையும் கழுத்துமாய் சிரித்துக் கொண்டிருக்கிறாய்!'

புகைப்படத்தை பார்த்துக் கொண்டிருந்த விஜயாவின் கண்கள், இப்போது மெல்ல திரும்பி வீட்டின் எல்லாப் பக்கமும் போயிற்று. வீடு அவ்வளவு சுத்தமாக இல்லை. அறையின் மேற்கூரைகளில் சிலந்திகள், நூலாம் படைகள் பின்னி, கும்பல் கும்பலாய் குடும்பம் நடத்திக் கொண்டு இருந்தன. அலமாரி கண்ணாடியின் மேல் ஒரு தூசு மண்டலம் உற்பத்தியாகியிருந்தது.

'ஒரு பெண் இப்படியா வீட்டைச் சுத்தம் இல்லாமல் வைத்துக் கொள்வாள்...? வேலைக்காரியை வைத்துக் கொண்டாவது வீட்டைச் சுத்தம் செய்யலாமே...! இன்றைக்கு ராத்திரி அவள் வரட்டும். பார்த்ததும் அவளைக் கேட்கப் போகிற முதல் கேள்வி இதுதான்...!'

விஜயா தீவிரமாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே வீட்டின் உள்பக்கமிருந்து அந்த சத்தம் கேட்டது.

"வரட்... வரட்...!"

"என்ன சத்தம் அது...! எதையோ கூட்டிப் பெருக்கித் தள்ளுகிற மாதிரியான சத்தம்...!"

விஜயா எழுந்தாள். மெல்ல நடந்து உள்பக்கம் போனாள். சாத்தப்பட்ட ஒரு அறைக் கதவுக்குப் பின்னாலிருந்து அந்த 'வரட் வரட்' சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கதவை நெருங்கி தள்ளிப் பார்த்தாள். முடியவில்லை. கதவு உள்பக்கமாய் தாழிடப்பட்டிருந்தது.

"வரட்... வரட்... வரட்... வரட்...!" சத்தத்துடன் இப்போது தண்ணீர் கொட்டும் சத்தமும் சேர்ந்து கொண்டது.

விஜயா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குனிந்து கதவின் சாவித் துவாரத்தில் வலது கண்ணைப் பொருத்தினாள். அறைக்குள் அந்தக் காட்சி, பார்வைக்குக் கிடைத்தது.

மோகன், ஒரு கையில் துடைப்பத்தையும், இன்னொரு கையில் வாளி தண்ணீரையும் வைத்துக் கொண்டு தரையைத் தேய்த்து கழுவிக் கொண்டிருந்தான்.

'எதைக் கழுவிக் கொண்டிருக்கிறான்...?'

விஜயா உற்றுப் பார்த்தாள்.

அறை முழுக்க ரத்தம் கலந்த நீர்...

## 2

விஜயாவுக்குப் பயத்தில் இதயம் இறுகி ஒரு கல்லைப் போல் நெஞ்சுப் பகுதி முழுவதும் அடைத்துக் கொண்டது.

அறையின் தரைப்பரப்பு பூராவும் ரத்தம் திட்டுத்திட்டாய் சிதறியிருக்க வாளியில் இருந்த தண்ணீரை ஊற்றித் துடைப்பத்தால் கழுவிக் கொண்டிருந்தான் மோகன்.

'இது யாருடைய ரத்தம்...?'

'மோகன் யாரையாவது கொலை செய்துவிட்டானா...?'

'ஒருவேளை அபிநயாவைக் கொலை செய்திருப்பானோ?'

விஜயாவுக்குள் மளமளவென்று யோசனைகள் அரும்பிக் கொண்டு இருக்கும்போதே உடம்பிலிருந்த எல்லா வியர்வை சுரப்பிகளும் விழித்துக் கொள்ள, வியர்வை பெருக்கெடுத்தது.

விஜயா, சாவித் துவாரத்தில் கண்ணைச் சரியாய்ப் பொருத்திக் கொண்டு அறைக்குள் பார்வையை ஓடவிட்டாள். ரத்தக்கறை படிந்த வெட்டுக்கத்தி ஒன்று சுவர் ஓரமாய் தெரிந்தது.

விஜயாவுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச தைரியமும் கழன்று கொள்ள மெல்ல பின்வாங்கினாள்.

'இனி இந்த வீட்டில் இருக்கக் கூடாது!'

'இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துத்தான்...!'

சத்தம் காட்டாமல் வரவேற்பறைக்கு வந்த விஜயா, சோபாவுக்குப் பக்கத்தில் இருந்த தன்னுடைய பெட்டியை எடுத்துக் கொண்டு மெல்ல கதவை நோக்கிப் போனாள்.

கதவு உட்பக்கமாய் தாழிட்டப்பட்டிருந்தது.

தாழ்ப்பாளை ஒரு கையால் இழுத்துப் பார்த்தாள். அது கொஞ்சம் கூட நெகிழாமல் இறுக்கமாய் இருக்கவே பெட்டியைச் சுவர் ஓரமாய் வைத்துவிட்டு இரண்டு கைகளாலும் தாழ்ப்பாளை இழுத்தாள்.

முடியவில்லை. அது குளிருக்கு இறுகிப் போயிருந்தது. வியர்த்துப் போயிருந்த கைகள், தாழ்ப்பாளை அழுத்தமாய்ப் பிடிக்க முயன்ற போதெல்லாம் வழுக்கியது.

விஜயா சோர்ந்தாள்.

'கதவை திறக்க முடியாது போலிருக்கிறதே...?'

'எதையாவது எடுத்து தாழ்ப்பாளைத் தட்டிப் பார்க்கலாமா?' யோசித்துக் கொண்டே விஜயா, சுற்றும் முற்றும் பார்த்தாள்.

குறுமேசையின் மேல் அந்தப் பூத்தொட்டி, பித்தளை உலோக உடம்போடு தெரிந்தது. வேகவேகமாய்ப் போய் எடுத்துக் கொண்டு கதவை நெருங்கினாள். தாழ்ப்பாளை மெல்லத் தட்டினாள்.

"டங்...!"

உள்ளே இருக்கிற மோகனுக்குச் சத்தம் கேட்டுவிடப்



போகிறதே என்கிற பயத்தில் தாழ்ப்பாளை பூத்தொட்டியால் இன்னமும் மெல்லத் தட்டினாள்.

"டங்... டங்...!"

தாழ்ப்பாள் கொஞ்சம் கொஞ்சமாய் நெகிழ்ந்து நகர்ந்து கொண்டிருந்தது.

'இதோ திறந்தாயிற்று!' என்று நினைத்த நேரத்தில் பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது. மோகனின் குரல்.

"என்னங்க... விஜயா... வெளியே போகணுமா?"

விஜயா, உறைந்து போனவளாய் திரும்பிப் பார்த்தாள். மோகன் கையில் ஒரு வாளியோடும் உதட்டில் புன்னகையோடும் அவளை நோக்கி வந்தான்.

"அந்தக் கதவுத் தாழ்ப்பாள் சரியில்லை. அதைச் சுலபமாய் திறக்க ஒரு சின்ன உத்தி இருக்கு. இடது கையால கதவை நல்லா அழுத்திக்கிட்டு வலது கையால ஒரு தட்டுத் தட்டினா போதும். தாழ்ப்பாள் சுலபமாய் திறந்துக்கும்"

விஜயாவின் பார்வை அவன் மேல் பயமாக நிலைத்தது. அவன் கேட்டான்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க?"

"ஒன்னுமில்லை...!" என்று முனகியவளின் பார்வை, மோகன் அணிந்திருந்த பைஜாமா உடைக்குப் போயிற்று ஆங்காங்கே சிவப்பு சிவப்பாய் ரத்தப் புள்ளிகள். பயம் கண்களுக்குள் பெரிதாய் பரவ, மோகன் இப்போது சிரித்தான்.

"ஓ! இந்த ரத்தத்தைப் பார்த்து பயந்துட்டீங்களா? விஜயா..." சொன்னவன், வாளியைக் காட்டினான்.

வாளி முழுவதும் பிராய்லர் கோழியின் இறகுகள் வேண்டாத ரத்தக் கழிவுகள்,

"எனக்கு தினசரி சிக்கன் வேணும். இல்லேன்னா சாப்பாடு உள்ளே இறங்காது. நீங்க வந்தபோது உள்ளே கோழியை சுத்தம் பண்ணிட்டிருந்தேன். எல்லா இடத்திலும் ரத்தம்பட்டு தெறிச்சதால சமையல் அறையையே கழுவ வேண்டியதா யிடுச்சு. அதனால்தான் நீங்க காப்பிபோட சமையலறைக்குப் போறேன்னு சொன்னப்பக்கூட வேண்டாம்ன்னு சொன்னேன்... ஆமா நீங்க சைவமா... அசைவமா...?"

விஜயாவுக்குப் போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது. 'கழுவி விட்டது கோழியின் ரத்தமா...?'

"என்னங்க விஜயா... நான் கேட்ட கேள்விக்கு பதிலையே காணோம்... நீங்க சைவமா... அசைவமா...?"

"சுத்த சைவம். முட்டைகூடக் கிடையாது...!"

"மன்னிக்கணும்... நீங்க வருவீங்கன்னு தெரிஞ்சிருந்தா இன்னிக்குக் கோழி கழுத்துல கத்தியை வெச்சிருக்க மாட்டேன்..."

"அதனால் என்ன... நீங்க சாப்பிடுங்க...!"

"சரி.. நீங்க எங்கே வெளியே புறப்பட்டீங்க?"

"அது... வந்து... சும்மா உட்கார்ந்திருக்க போர் அடிச்சது. வெளியே தோட்டம் அழகாயிருந்தது. பார்க்கலாமேன்னு புறப்பட்டேன். தாழ்ப்பாள் தகராறு பண்ணவே பூத்தொட்டியை எடுத்து அடிக்க வேண்டியதாயிடுச்சு..."

"கொஞ்சம் இப்படி தள்ளி நில்லுங்க. கதவை நான் திறந்துவிடறேன்...!"

விஜயா தள்ளி நின்றாள். மோகன் கோழி இறகுகள் இருந்த வாளியை ஓரமாய் வைத்துவிட்டு, தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்துவிட்டான்.

"போய் தோட்டத்தைப் பார்த்துட்டிருங்க... நான் ஒரு பத்து நிமிஷத்துல குளிச்சுட்டு காப்பி போட்டு கொண்டாந்துடறேன்..."

விஜயா சென்று கொண்டிருக்கும்போதே தொலைபேசி மணியடித்தது.

மோகன் எழுந்தான்.

"அநேகமாய் இது அபிநயா தான்..."

போய் ரிசீவரை எடுத்தான்.

"அலோ..." என்று சொல்லி பேசத் தொடங்கிய மோகனின் முகம் படிப்படியாய் மாறியது. நிமிட நேரம் பேசிவிட்டு ரிசீவரை வைத்தான்.

முகத்தில் இருள்.

விஜயா கேட்டாள்.

"போன்ல யாருங்க... அபிநயாவா?"

"இல்லை. நான் வேலை பார்க்கிற கட்டுமான நிறுவனத்தில் இருந்து பேசினாங்க. நாங்க கட்டிட்டிருந்த பாலம் ஒண்ணு திடீர்னு இடிஞ்சு விழுந்துட்டதா தகவல். உடனே அந்த இடத்துக்கு வரச் சொல்றாங்க... நான் உடனே கிளம்பணும். நீங்க வீட்டுல இருங்க! நான் போய்ப் பார்த்துட்டு ரெண்டு மணி நேரத்துக்குள்ளே வந்துடறேன்."

விஜயாவின் இதயத்துக்குள் ஒரு பயம், நண்டு மாதிரி ஊர்ந்தது.

"நான் எப்படிங்க... வீட்டுல தனியா...?"

"ஒரு பயமும் கிடையாதுங்க. கதவை உள் பக்கமாய் தாழ்போட்டுக்கிட்டு படுத்துத் தூங்கிடுங்க. அதுக்கு முன்னாடி குளிங்க. டிபன் தயார் பண்ணி சாப்பிடுங்க. மோகன் சொல்லிக் கொண்டே நிற்காமல் தன்னுடைய அறைக்குப் போய் ஐந்தே நிமிடத்தில் வேறு உடை மாற்றிக் கொண்டு வந்தான்.

"சமையல் கட்டுக்கு வாங்க! எந்தெந்த சாமான் எங்கெங்கே இருக்குன்னு சொல்லிடறேன்."

"நீங்க புறப்படுங்க. நான் பார்த்துக்கிறேன்."



"நன்றி! அபிநயா ஒரு வேளை போன் பண்ணினாலும் பண்ணுவா... விஷயத்தை அவள் கிட்டே சொல்லுங்க."

"சரிங்க."

மோகன், சுவர் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த கார் சாவியை எடுத்துக் கொண்டான்.

"பிரிஜ்ல எல்லா காய்கறியும் இருக்கு. உங்க வீடு மாதிரி நினைச்சுக்கிட்டு பயன்படுத்துங்க."

மோகன், போர்டிகோவில் இருந்த காரை நோக்கி வேகவேகமாய்ப் போக - விஜயா "ஒரு நிமிடம்" என்று கூறி நிறுத்தினாள்.

"என்னங்க?"

"ஒரு வேளை அபிநயா போன் பண்ணலைன்னா... நான் அவளைத் தொடர்பு கொள்ள ஏதாவது தொலைபேசி எண் இருக்கா?"

"இல்லை. அபிநயா பண்ணினால்தான் நாம பேச முடியும். அபிநயா எப்படியும் ஒரு மணி நேரத்துக்குள்ளே வீட்டுக்கு போன் பண்ணுவா."

மோகன், கேட்டைத் திறந்து வைத்துவிட்டு காருக்குள் ஏறி உட்கார்ந்தான். "நான் போனதும் கேட்டைச் சாத்திக்குங்க."

விஜயா, தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே - கார் கனைத்து வேகம் பிடித்து காம்பவுண்டு கேட்டைத் தாண்டியது. புழுதி பறக்க ஓடி மறைந்தது.

விஜயா, கேட்டை சாத்திவிட்டு உள்ளே வந்தாள். உட்பக்க கதவையும் சாத்திக் கொண்டு முன்னறைக்குள் நுழைந்த விஜயாவுக்கு அந்த வீட்டின் தனிமையும் நிசப்தமும் முதுகுத் தண்டில் குளிர்பாய்ச்சியது.

'எப்படியோ இரண்டு மணி நேரத்தை ஓட்டிவிட்டால் போதும். அதற்குள் மோகன் வந்துவிடுவார்.'

'குளியலறை எங்கே இருக்கிறது?'

முன்னறை கடந்து சமையலறையை ஒட்டினாற்போல இருந்த நடைபாதையில் நடந்தாள். பத்தடி நடந்திருப்பாள்.

ஓம் சாந்தி என்று ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட அந்த அறை கொஞ்சம் வித்தியாசமாய் தெரிய - விஜயா நின்று அதன்மேல் கையை வைத்தாள்.

கையை வைத்ததுமே அது மெல்லத் திறந்து கொண்டது. விஜயா தலையை மெல்ல நீட்டி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அறை முழுவதும் ஊதாநிற வெளிச்சம் பரவியிருந்தது.

'என்ன அறை இது?'

விஜயா, துணிச்சலை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

எட்டுக்கு எட்டு என்ற அளவிலான அறை இது. தொடக்கத்தில் மங்கலாய் இருந்த அறை போகப்போக

துல்லியமாய்த் தெரிந்தது.

சுவரில் சில புகைப்படங்கள். தாடி மீசைக்குள் முகங்கள். சில புகைப்படங்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டிருக்க, அறைக்குள் இருந்த காற்றில் சாம்பிராணி வாசனை உறைந்து போயிருந்தது.

'இதெல்லாம் யாருடைய புகைப்படங்கள்?'

விஜயா பார்வையை உன்னிப்பாக்கிக் கொண்டு ஒவ்வொரு புகைப்படமாய்ப் பார்த்தாள்.

மொத்தம் ஆறு புகைப்படங்கள்.

கடைசி புகைப்படத்தில் அபிநயா சிரித்துக் கொண்டிருந்தாள். வாடிய மாலை, காற்றுக்கு அசைந்தது.

## 3

**வி**ஜயா உறைந்து போன விழிகளோடு சுவரில் தொங்கிக் கொண்டிருந்த அபிநயாவின் புகைப்படத்தை இமைக்காமல் பார்த்தாள்.

'புகைப்படத்துக்கு மாலை போடப்பட்டு இருக்கிறது. அப்படியென்றால் அபிநயா இப்போது உயிரோடு இல்லையா?'

'உண்மையிலேயே இந்த மோகன் யார்... அபிநயாவின் கணவனா... இல்லை வேறு யாராவதா?'

விஜயாவின் பார்வை இப்போது அபிநயாவின் புகைப்படத்துக்குப் பக்கத்தில் இருந்த மற்ற புகைப்படங்களுக்குப் போயிற்று. புதர்போல் மண்டியிருந்த தாடி மீசைகளுள் கால்வாசி முகங்கள் தெரிந்தன. தீட்சண்யமான கண்கள். எல்லோருடைய கண்களும் இமைக்காமல் விஜயாவையே பார்ப்பது போன்ற பிரமை.

விஜயா பயத்தோடு மெல்ல பின் வாங்கினாள்.

'ஊஹூம்... இந்த வீடு சரியில்லை! அபிநயாவின் கணவன் என்று சொல்லிக் கொள்ளும் இந்த மோகன் சரியில்லை1 இங்கே ஏதோ தப்பு இருக்கிறது!'

விஜயாவின் இதயத் துடிப்பு உச்சத்துக்குப் போயிற்று. 'இனி இந்த இடத்தில் இருக்கக் கூடாது. உடனே கிளம்ப வேண்டியதுதான்.'

'என் பெட்டியை எங்கே வைத்தேன்?'

வீடு பூராவும் அரக்க பரக்க ஓடித் தேடினாள். பார்வைக்கு அது கிடைக்க மறுத்தது. முன்னறைக்குள் ஓடியபோது தொலைபேசி மணியடித்தது.

விஜயா அதைப் பொருட்படுத்தவில்லை. 'வேண்டாம். தொலைபேசியை எடுக்கக்கூடாது.., யாரோ பண்ணிவிட்டுப் போகட்டும்...'

முன் அறைக்குள் நுழைந்து இரண்டு நிமிடம் தேடியதும் கதவோரமாய் இருந்த பெட்டி, பார்வைக்குப்பட பாய்ந்து எடுத்துக் கொண்டாள்.



'வேறு எதையாவது இங்கே விட்டுவிட்டோமா?'

விஜயா யோசித்துக் கொண்டே கதவை நோக்கிப்போனாள். தொலைபேசி மணி விடாப்பிடியாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

'ரிசீவரை எடுத்து யார் என்று கேட்கலாமா?'

எடுத்தாள்.

மறுமுனையில் ஒரு பெண்குரல் மோகனைக் கேட்டது. தட்டத்தோடு சில வினாடிகள் பேசிவிட்டு போனை வைத்தாள் விஜயா.

'யாரிவள்?'

'இவளுக்கும் மோகனுக்கும் என்ன தொடர்பு...?'

'இந்த வீட்டில் இனிமேல் நீ இருக்கிற ஒவ்வொரு விநாடியும் ஆபத்துதான்... 'இங்கே வந்த சுவடு தெரியாமல் ஊர் போய்ச் சேர்ந்துவிடு' மனம் கட்டளையிட, வாசல் கதவைத் திறந்து கொண்டு ஒரு குட்டிப் புயல் மாதிரி வெளியே வந்த விஜயா திடுக்கிட்டுப் போய் அப்படியே நின்றாள்.

சாலையில் கார் நின்றிருக்க

காம்பவுண்டு கேட்டைத் திறந்து கொண்டு மோகன் வந்து கொண்டிருந்தான்.

அந்த விநாடியில் மோகனைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத விஜயா உடம்பில் இருந்த சகல உறுப்புகளும் விதிர் விதிர்த்துப் போக அப்படியே நின்றாள். கையில் வைத்து இருந்த பெட்டி ஒரு மெல்லிய நடுக்கத்துக்கு உட்பட்டது.

மோகன் கேட்டைத் திறந்தபடி விஜயாவையே வியப்பாய் பார்த்தபடி பக்கத்தில் வந்தான். குழப்ப முகத்தோடு கேட்டான்.

"என்னங்க... இது. பெட்டியும் கையும் கிளம்பிட்டீங்க...?"

"நான் ஊருக்குப் போறேன்..."

"ஊருக்குப் போறீங்களா?"

"ஆமா...!"

"ஊருக்குப் போறதா இருந்தா சொல்லிட்டுத்தானே போகணும்... என்கிட்ட சொல்லாமே எங்க போகணும்...?"

"உங்ககிட்ட சொல்லிக்க எனக்கு விருப்பம் இல்லை அதான் கிளம்பிட்டேன்...!"

"இதோ பாருங்க விஜயா... நீங்க பேசறது எதுவுமே எனக்குப் புரியலை... எதைப் பேசினாலும் புரியற மாதிரி பேசுங்க..."

விஜயா, பெட்டியைக் கீழே வைத்துவிட்டு தன் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டாள்.

"உங்களுக்கு புரியற மாதிரியே பேசட்டுமா...?"

"ம்..."

"ஏதோ பாசம் இழுத்துட்டதா புறப்பட்டுப் போன நீங்க இப்ப ஊர்ன்னு எதுக்காக வீட்டுக்கு வந்திருக்கீங்க...?"

"பாலம் கட்டினது சம்பந்தமா ஒரு முக்கியமான ஃபைல் பீரோவுக்குள்ளே இருக்கு. அதை எடுத்துக்கிட்டுப் போக வந்தேன்."

"காரணம் அதுதானா... இல்லை... என்னை வேவு பார்க்க வந்தீங்களா...?"

"உங்களை எதுக்காக நான் வேவு பார்க்கணும்?"

"தப்பு பண்ணினவங்க வேவு பார்க்க வர்றது இயல்புதானே"

"விஜயா...! நீங்க இன்னமும் புதிராகவே பேசிக்கிட்டு இருக்கீங்க... எதைப் பேசறதாயிருந்தாலும் நேரிடையாக பேசுங்க..."

விஜயா மோகனை முறைப்பாய் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

"அபிநயா இப்போ எங்கே...?"

"திருவனந்தபுரம் போயிருக்காள்னு நான்தான் சொன்னேனே...?"

"பொய்...!"

"என்ன பொய்...?"

"அவள் திருவனந்தபுரம் போயிருக்கிறதா நீங்க சொல்ற பொய். ஏன்னா அபிநயா உயிரோட இருந்தால்தானே அவ திருவனந்தபுரத்துக்கு போயிருக்க முடியும்...?"

"விஜயா...! நீங்க என்ன சொல்றீங்க... அபிநயா உயிரோட இல்லையா... என்ன உளர்றீங்க...?"

"நான் உளறலை மிஸ்டர் மோகன்... அபிநயா உயிரோட இருந்திருந்தால் அவள் போட்டோவுக்கு ஏன் மாலையை போட்டு வைச்சிருக்கீங்க...!"

மோகன் திகைத்தான்.

"அபிநயா போட்டோவுக்கு மாலையா...?"

"ம்..."

"எங்கேன்னு வந்து காட்டுங்க...!"

"வந்து காட்டறது என்ன...? சமையலறைக்குப் போ வழியில 'ஓம் சாந்தி'ன்னு ஸ்டிக்கர் ஒட்டியிருக்கி அறைக்குள்ளே அந்த போட்டோ இருக்கு..."

மோகனின் உதட்டில் இப்போது ஒரு புன்னகை.

"ஓ...! அந்த போட்டோவைப் பார்த்துட்டுத்தா பெட்டியை கையில தூக்கிட்டீங்களா! அந்த போட்டோவி இருக்கிறது அபிநயா கிடையாது விஜயா...!"

"பின்னே..."

"அபிநயாவின் அம்மா...!"

"என்னது... அபிநயாவின் அம்மாவா...?"

"ஆமா... அது இளமைக்கால போட்டோ அபிநயாவுக் இந்த யோகா, தியானம் எல்லாம் கத்துக் கொடுத்த அவளுடைய அம்மா அமிர்தவல்லிதான் அபிநயா தன்னோ அம்மாவை குருவாக நினைச்ச மத்த யோகிகளுக்கு சம



போட்டோவை மாட்டி மாலையைப் போட்டிருக்கா... அந்தப் போட்டோவுக்கு அடியில் பேரும், தோற்றம், மறைவு தேதி களும் தெளிவா போட்டிருக்குமே... நீங்க பார்க்கலை...யா?"

"பா... பார்க்கலை...!"

"வாங்க... இப்ப பார்க்கலாம்...!" மோகன் சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் போக விஜயா நகராமல் அப்படியே நின்றாள்.

'இவனை நம்பி உள்ளே போகலாமா...?'

"ஏன் நின்னுட்டீங்க... விஜயா..."

"எனக்கு இன்னும் ரெண்டு சந்தேகம் இருக்கு..."

மோகன் முகம் மாறி, "ம்... கேளுங்க...!" என்றான்.

"இன்னிக்குக் காலையில் நீங்க கோழி அறுத்ததாக சொன்னீங்க... அது பொய் சமையலறை பூராவும் பிரிட்ஜிலும் பார்த்துட்டேன். வெட்டப்பட்ட கோழி இறைச்சியைக் காணோம்! கோழியை அறுத்ததாக நீங்க சொன்னது பொய்...!"

மோகன் சிறு புன்னகையோடு விஜயாவைப் பார்த்தான்.

"கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. ஆனால் நீங்க கண்ணால மட்டும் பார்த்துட்டு என்னைப் பத்தின ஒரு தப்பான முடிவுக்கு வந்துட்டீங்க. எது எப்படியிருந்தாலும் உங்க சந்தேகங்களுக்கு தகுந்த பதிலைச் சொல்ல வேண்டியது என்னோட கடமை. இன்னிக்குக் காலையில் நான் கோழி அறுத்தது உண்மை. அந்தக் கோழி இறைச்சியை சுத்தம் பண்ணி பிரிட்ஜிக்குள்ளே வைச்சிருக்கறதும் உண்மை."

"ஃபிரிட்ஜில் நான் பார்த்தேனே...! இல்லையே...?"

"ஃபிரிட்ஜின் மேல் பாகத்தில் இருந்த பிரீசரில் பார்த்தீங்களா...?"

விஜயா திகைத்த மாதிரி பார்க்க மோகன் தொடர்ந்தான்.

"அதுல பார்த்திருக்க மாட்டீங்க..., பொதுவா அசைவ வகையெல்லாம் ஃபிரிட்ஜோட பிரீசருக்குள்ளேதான் வைப்போம். இப்ப நீங்க வந்து ஃபிரிட்ஜைத் திறந்து பிரீசரை பாருங்க..."

விஜயா அசையாமல் நின்று மோகனையே பார்த்தாள்.

அவன் படபடத்தான்.

"ம்... வந்து... பாருங்க...!"

"பார்க்கிறேன்... அதுக்கு முன்னாடி இந்த கேள்விக்கு பதில் சொல்லுங்க... வீட்டுக்கு பின்னாடி இருக்கிற காலி இடத்துல யாரையோ புதைச்சு வைச்சிருக்கீங்களே... அது யாரு...?"

மோகனின் முகம் நிறம் மாறியது.

"ஓ...! வீட்டுக்குப் பின்னாடிப் பக்கம் போய் அதையும் பார்த்துட்டீங்களா...? வீட்டுக்கு வந்த ஒரு [illegible]

நேரத்துக்குள்ளே பெரிய பெரிய துப்பறியும் வேலை களையெல்லாம் பார்த்து இருக்கீங்களே...! பரவாயில்லை. நீங்க போலீஸ் துறைக்கு முயற்சி பண்ணினா நிச்சயம் வேலை கிடைக்கும்...!"

"பாராட்டு இருக்கட்டும் மோகன்... முதல்ல என்னோட கேள்விக்கு பதில்...?"

"ஒத்துக்கிறேன் விஜயா...! வீட்டுக்குப் பின்னாடி இருக்கிற காலி இடத்துல ஒரு உடல் புதைக்கப்பட்டிருக்கிறது உண்மைதான். ஆனால் அது நீங்க நினைக்கிற மாதிரி மனித உடல் கிடையாது..."

"பின்னே...?"

"டாமி..."

"டாமியா...?"

"ஒரு நாயை புதைச்ச இடம் மாதிரி அது தெரியலையே... இரண்டடி அகலம், ஆறடி நீளத்துல அந்த கு... தோண்டப்பட்டிருக்கு..."

மோகன் சின்னதாய் புன்னகைத்தான்.

"அது நீங்க நினைக்கிற மாதிரி சாதாரண நாய் கிடையாது... டாபர்மேன். சட்டை மாதிரி நாலரையடி நீளம், இரண்ட... உயரம்...! உங்களுக்கு சந்தேகமாயிருந்தா வாங்க... அந்... இடத்தை மறுபடியும் தோண்டிக் காட்டுறேன்..."

விஜயாவுக்குள் இப்போது பெரிய குழப்பம்.

"மோகன் சொல்வது உண்மையா... பொய்யா...?"

'தோண்டிப் பார்க்கச் சொல்லி அது நாயா இல்லையா என்... பார்த்துவிடலாமா...?'

மோகன் சிரித்தான்.

"உங்களுக்கு இன்னமும் என்மேல் இருக்கிற சந்தேக... போகலைன்னு நினைக்கிறேன். நான் ஏதோ உங்க தோ... அபிநயாவைக் கொலை பண்ணிட்டதா தப்பா ஒரு கணக்கு... போட்டு வைச்சுக்கிட்டு அதே வழியில போய்க்கிட்... இருக்கீங்க... உங்க மனசுக்குள்ளே இருக்கிற அந்... சந்தேகத்தையெல்லாம் களை எடுக்க வேண்டிய... என்னுடைய கடமை. முதல்ல 'ஓம் சாந்தி' அறைக்குள்ளே... இருக்கிற அபிநயாவோட அம்மா போட்டோவைப் பாருங்க... ரெண்டாவது, பிரிட்ஜின் பிரீசருக்குள்ளே இருக்கிற கோ... இறைச்சியைப் பாருங்க... மூணாவதா நாய் டாமியை புதைச்... இடத்தைத் தோண்டிக் காட்டுறேன். வாங்க விஜயா... உள்ளே... வாங்க...! உங்களுக்கு என்பேர்ல இன்னமும் நம்பிக்கை... வரலைன்னா சொல்லுங்க... நாய் புதைச்ச இடத்தை... தோண்டிக் காட்டுறேன்..."

"சரி..." என்றாள் விஜயா.



## 4

மோகன், விஜயாவை சமையலறைக்குக் கூட்டிப் போய் குளிர்பதனப் பெட்டியைத் திறந்து காட்டினான்.

ம்... பாருங்க விஜயா... குளிர்பதனப் பெட்டியின் பிரீசர் பகுதிக்குள்ளே என்ன இருக்குன்னு பாருங்க."

விஜயா, தயக்கமாய் நடந்து வந்து பிரீசர் பகுதியைத் திறந்து பார்த்தாள். உள்ளே பனிப்புகை அலைந்து கொண்டிருக்க, ஒரு பாலிதீன் பையில் துண்டுகளாக்கப்பட்ட கோழி இறைச்சி தெரிந்தது.

"என்ன பார்த்துட்டீங்களா...? வேணும்னா கையில் எடுத்து பாருங்க. அது கோழி இறைச்சியா? இல்லையாங்கிறதை உறுதிப்படுத்திக்குங்க."

குளிர்பதனப்பெட்டியின் கதவை மூடினாள் விஜயா.

"மன்னிக்கணும்... எனக்கு இருந்த மனக்குழப்பத்துல உங்களை தப்பா நினைச்சுட்டேன்..."

"வாங்க வீட்டுக்கு பின்பக்கம் போகலாம். நாய் புதைச்ச இடத்தை தோண்டிக் காட்டுறேன்."

"வேண்டாம்! நான் உங்களை நம்புகிறேன்."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தோண்டிக் காட்டட்டுமான்னு கேட்டதுக்கு சரின்னு சொன்னீங்க?"

"அப்ப எனக்கு இருந்த மனநிலை வேற, இப்ப இருக்கிற மனநிலை வேற, உங்களை நான் சந்தேகப்பட்டது தப்பு."

"இல்லை விஜயா... நீங்க இந்த வீட்டுல இருக்கிற வரைக்கும் உங்களுக்கு என்மேல் சந்தேகம் வரக்கூடாது வாங்க! நாயை புதைச்ச இடத்தை தோண்டிக் காட்டுகிறேன்."

"வேண்டாங்க! இந்த விஷயத்தை இதோடு விட்டுடுவோம்.. நீங்க வெளியே போயிட்டு வாங்க... நான் வீட்டிலேயே இருக்கேன்."

மோகன் புன்னகைத்தான்.

"நான் வெளியே போனபின்னாடி மறுபடியும் உங்களுக்குச் சந்தேகம் வரும். வாங்க! தோண்டிக் காட்டிடறேன். மண்வெட்டியில் தோண்டினா ரெண்டே ரெண்டு நிமிடம்தான்" சொன்ன மோகன் பக்கத்து அறைக்குள் நுழைந்து கடப்பாரையையும் மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டு வீட்டின் பின்பக்கம் போனான். விஜயா தயங்கித் தயங்கிப்பின் தொடர்ந்தாள்.

மோகன் முழங்கால் சட்டையை மடித்துவிட்டுக் கொண்டு மேடிட்ட அந்த நிலப்பரப்பை மண்வெட்டியாலும் கடப்பாரையாலும் மாறி மாறித் தோண்டத் தொடங்கினான்.

ஐந்து நிமிடம் கழித்து ஒரு பள்ளம் உருவாகியிருக்க மோகன், தள்ளி நின்றிருந்த விஜயாவைக் கூப்பிட்டான்.

"வாங்க விஜயா! வந்து குழிக்குள்ளே என்ன இருக்குன்னு பாருங்க."

விஜயா தயங்கினாள்.

"வேண்டாங்க... நீங்க சொன்னா சரிதான்!"

"இல்லை... வந்து... ஒரு பார்வை பார்த்துடுங்க. அப்பதான் என்னோட மனசுக்கும் ஒரு மகிழ்ச்சி. ம்... வாங்க"

விஜயா, அதற்கு மேலும் பிடிவாதம் பிடிக்காமல் மெல்ல குழிக்குள் எட்டிப் பார்த்தாள்.

ஒரு கறுப்பு நாயின் உடல் மண்ணில் புதையுண்டு கிடப்பது பார்வைக்குக் கிடைத்தது. முகத்தில் மோதிய காற்றில் கெட்ட வாடை அடித்தது. முகத்தைப் பொத்திக் கொண்டு பின்வாங்கினாள் விஜயா.

மோகன் கேட்டான்.

"குழியை மூடட்டுமா?"

"மொதல்ல மூடுங்க... நீங்க இப்படி பிடிவாதம் பிடிச்சு குழியைத் தோண்டினது கொஞ்சம்கூட சரியில்லை..."

"உங்க சந்தேகத்தைத் தீர்க்க வேண்டாமா?"

மண்வெட்டியால் மண்ணைத் தள்ளி குழியை மூடிவிட்டு முகத்தில் வியர்வை வழிய விஜயாவுக்கு முன்பு வந்து நின்றான் மோகன். அதே விநாடி வீட்டுக்குள் தொலைபேசி மணியடிக்கும் சத்தம் கேட்டது.

"யாரோ போன் பண்றாங்க."

மோகன், வேகவேகமாய் உள்ளே போக - விஜயா பின் தொடர்ந்தபடியே சொன்னாள்.

"நீங்க வெளியே போயிருந்த போது கூட ஒரு போன் வந்தது."

"அப்படியா... போன்ல யாரு?"

"ஒரு பெண்."

"பெண்ணா...?"

"ம்..."

"பேர் சொன்னாளா?"

"இல்லை... நீ யாருன்னு கேட்டதுக்கு ரிசீவரை உடனே வைச்சிட்டா."

"அபிநயாவோட தோழியாக இருக்கலாம்."

"அபிநயாவைப் பற்றி அவள் கேட்கவேயில்லை. நான் ரிசீவரை எடுத்ததுமே அலோ சொல்றதுக்கு முந்தி அவளே ரொம்பவும் உரிமையோடு நீங்கதான்னு நினைச்சுகிட்டு என்கிட்டே பேச தொடங்கிட்டா... அப்புறம் என்னோட குரலைக் கேட்டதும் நீ யாருன்னு கேட்டா. நான் வேலைக்காரின்னு சொன்னேன். இப்ப போன் பண்றதும் ஒரு வேளை அந்தப் பொண்ணாக இருக்கலாம்.

விஜயா சொல்வதைக் கேட்டுக் கொண்டே மோகன் வேக



நடைபோட்டு அலறிக் கொண்டிருந்த தொலைபேசியை நெருங்கி ரிசீவரை எடுத்தான். அரை நிமிட நேரம் பேசிவிட்டு ரிசீவரை வைத்தான். முகத்தில் கவலை மேகங்கள்.

"போன்ல யாருங்க? அந்தப் பெண்ணா?"

"இல்லை. நான் வேலை பார்க்கிற கட்டுமான நிறுவனத்திலிருந்து பேசினாங்க. நான் ஏன் இன்னும் கிளம்பலைன்னு கேட்டாங்க."

"நீங்க புறப்படுங்க மோகன்."

"இனிமே இந்த வீட்டுல இருக்க பயப்பட மாட்டீங்களே?"

"இனி எதுக்கு பயம்? நீங்க போயிட்டு வர்றதுக்குள்ளே நான் குளிச்சு, சாப்பிட்டு ஒரு தூக்கமும் போட்டு எழுந்துடுவேன்."

"இந்தாங்க! என்னோட கட்டுமான நிறுவனத்தோட போன் நம்பர். எனக்கு ஏதாவது அவசரச் செய்தி சொல்லணும்னா உடனே எனக்கு போன் பண்ணுங்க."

முகவரி அட்டையை விஜயா வாங்கிக் கொள்ள அவன் புறப்பட்டான்.

"நான் வர்றதுக்கு கொஞ்சம் முன்னே பின்னே ஆகலாம். எனக்காக சாப்பிடாமே காத்துட்டிருக்காதீங்க! சமையல் கட்டுல எல்லா மளிகை சாமானும் காய்கறியும் இருக்கு. இஷ்டப்படி சமையல் பண்ணிக்குங்க."

மோகன், காரில் புறப்பட்டுப் போனதும் விஜயா, கதவைச் சாத்தி உள் பக்கம் தாழ் போட்டுக் கொண்டாள்.

மனசுக்குள் இப்போது பயம் இல்லை. இதயம் இயல்பான துடிப்பில் இருந்தது. குளித்து சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு முன்னறையில் இருந்த சோபாவுக்கு வந்து சாய்ந்தாள். கண்ணிமைகளின் மேல் தூக்கம் வந்து உட்கார்ந்து அழுத்தியது. கைகளையும் கால்களையும் நீட்டி அந்த நீண்ட சோபாவில் மல்லாந்து படுத்தாள்.

முழுதாய் ஒரு நிமிடம்கூட இல்லை. அப்படியே தூங்கிப் போனாள்.

எவ்வளவு நேரம்..?

தெரியவில்லை.

ஏதோ சத்தம் கேட்டு விஜயாவின் தூக்கம் லேசாய் கலைந்தாலும் கண்களைத் திறக்க முடியவில்லை. கண்ணிமைகளை யாரோ ஒட்டி வைத்துவிட்டதுபோல் உணர்வு. சிரமப்பட்டு பிரித்தாள்.

அந்த சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அறைக்குள் ஒருவித மசமசப்பான இருள் பரவியிருந்தது.

விஜயா எழுந்து உட்கார்ந்தாள்.

சத்தம் இப்போது பெரிதாய்க் கேட்டது. ஏதோ அருவி கொட்டுகிற மாதிரியான சத்தம்.

சோபாவில் இருந்து வேகமாய் எழுந்து, ஜன்னலைத்

திறந்து வெளியே பார்த்தாள்.

மழை கொட்டிக் கொண்டிருந்தது. பேய் மழை.

காற்று, தன் பங்குக்கு ஊளையிட்டது. தோட்டத்தில் இருந்த எல்லா தென்னை மரங்களும் தலையை விரித்து போட்டுக் கொண்டு ஆடின.

விஜயா, ஜன்னலைச் சாத்திவிட்டு இப்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்று தெரிந்து கொள்வதற்காக சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். உள்ளுக்குள் அதிர்ந்து போனாள்.

மணி மாலை ஆறு.

'கடவுளே? இவ்வளவு நேரமா தூங்கியிருக்கிறோம்? எப்போதுமே இப்படி தூங்கினது இல்லையே?' விஜயா பரபரவென்று யோசித்துக் கொண்டே போய் குழல் விளக்கை எரிய வைப்பதற்காக சுவிட்சைப் போட்டாள்.

குழல்விளக்கு எரியவில்லை. மின்சாரம் துண்டித்து போயிருந்தது. விஜயாவின் மனசுக்குள் இப்போது பயம் சூழ்ந்தது.

'அடிக்கிற மழையைப் பார்த்தால் இரவு முழுக்க மின்சாரம் வராது போலிருக்கிறதே."

'காலையில் வெளியே போன மோகன் இன்னும் ஏன் வரவில்லை?'

'போன் செய்து பார்க்கலாமா?'

மோகன் கொடுத்துவிட்டுப் போயிருந்த நம்பரை எடுத்துக் கொண்டு டெலிபோனை நோக்கிப் போனாள். ரிசீவரை எடுத்துக் கொண்டு எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் டெலிபோன் மணி ஒலித்து ரிசீவர் எடுக்கப்பட்டு ஒரு ஆண் குரல் கேட்டது.

"அலோ..."

"சேது கட்டுமான நிறுவனமா?"

"ஆமா."

"அங்கே மோகன் இருக்காரா?"

"மோகனா...?"

"ம்..."

"அப்படி யாரும் இல்லையே..."

"இன்ஜினியர் மோகன் அங்கே தானே வேலை செய்கிறார்?"

"ஒரு நிமிடம் இருங்க... நான் இந்த கம்பெனியில் புதிதாய் வேலைக்குச் சேர்ந்தவன். எனக்குத் தெரியாமே இருக்கலாம். சீனியர் ஒருத்தரை பேசச் சொல்றேன்."

விஜயா, படபடப்போடு காத்திருந்தாள். சில விநாடிகளுக்குப் பிறகு ஒருவரின் குரல் கேட்டது.

"யார் வேணும்?"

"இன்ஜினியர் மோகன் இருக்காரா?"



அவர் இங்கே இப்போ வேலையிலேயே இல்லையே. ஆறு மாசத்துக்கு முன்னாடியே வேலையை விட்டு நின்னுட்டாரே..."

விஜயாவுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

"அவர் வேலையில் இல்லையா...? காலையில் உங்க கம்பெனியிலிருந்துதானே போன் பண்ணி ஏதோ பாலம் இடிஞ்சு விழுந்துட்டதாகவும் அவரை உடனே வரும்படியும் சொன்னீங்க?"

"பாலம் இடிஞ்சுட்டதா...? அப்படி எந்த சம்பவமும் நடக்கலையே! ஆமா நீங்க யாரு?"

"மோகனோட வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரங்க. அவர் வீட்டுக்கு யாரோ விருந்தாளி வந்து காத்திட்டிருக்காங்க. இந்தத் தகவலை மோகன் கிட்ட சொல்லத்தான் போன் பண்ணினேன்."

"மன்னிக்கணும்! மோகன் இந்த கம்பெனியிலிருந்து நின்னு ஆறு மாசமாச்சு."

மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டுவிட விஜயா உறைந்துபோய் சில விநாடிகள் அப்படியே நின்றுவிட்டு பின் உணர்வுக்கு வந்தவளாய் ரிசீவரை வைத்தாள்.

'எதற்காக இந்தப் பொய்கள்?'

வெளியே மழை சுழற்றிக் கொண்டிருந்தது. முன்னைக் காட்டிலும் இருட்டு. அடர்த்தியாய் தெரிய ஏதாவது மெழுகுவர்த்தியாவது ஏற்றி வைக்கலாம் என்கிற எண்ணத்தோடு எழுந்தாள்.

சமையலறைக்குப் போய், தீப்பெட்டியை எடுத்துக் கொண்ட விஜயா, மறுபடியும் முன் அறைக்கு வந்து மெழுகுவர்த்தி எங்கேயாவது தட்டுப்படுகிறதா என்று தேடத் தொடங்கினாள்.

அலமாரிகள், மேசை என எல்லாவற்றிலும் தேடிப் பார்த்தும் கிடைக்காமல் போகவே - முன்னறையை ஒட்டியிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்.

இரட்டைக் கட்டில் போட்ட படுக்கையறை.

'இங்கே கண்டிப்பாய் மெழுகுவர்த்தி இருக்கலாம்!'

ஒரு தீக்குச்சியை உரசி அதன் வெளிச்சத்தில் அறையை மெல்லச் சுற்றி வந்தாள் விஜயா. ஏதேதோ பொருள்கள், பார்வைக்குப்பட்டு விலகின.

அறையின் இடது பக்க மூலைக்கு வந்தாள் விஜயா. ஒரு பெரிய மர பீரோ தட்டுப்பட்டது. பீரோவின் கதவு, திறந்த நிலையில் காற்றுக்கு மெல்ல ஆடிக் கொண்டிருந்தது.

விஜயா, தீக்குச்சி வெளிச்சத்தோடு பீரோவை நெருங்கினாள்.

அதே விநாடி

முன் அறையில் ஏதோ சத்தம் கேட்டது. யாரோ நடந்து வரும் சத்தம்.

## 5

காதுகளுக்கு உஷ்ணிப்பைக் கொடுத்து கவனித்தாள் விஜயா.

முன் அறையில் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது.

"வருவது யார்..?"

விஜயா சட்டென்று பீரோவுக்குப் பின்னால் போய் ஒண்டிக் கொண்டாள். வருவது யார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக பார்வையை மட்டும் வெளியே நிறுத்தினாள்.

"காலடிச் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்பட்டது. விஜயா மூச்சை அடக்கிக் கொண்டு அறை வாசலையே பார்த்தாள்.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த நடை சத்தம் சட்டென்று நின்றது. விஜயா மறுபடியும் அந்த நடைச் சத்தத்துக்காக மவுனம் காத்தாள். விநாடிகள் கரைந்து கொண்டிருக்க, வீடு முழுவதும் இப்போது கனத்த அமைதி. வெளியே மழை மட்டும் பேரிரைச்சலாய் பெய்து கொண்டிருந்தது.

ஒரு நிமிடம்...

இரண்டு நிமிடம்...

அந்த நடைச்சத்தம் கேட்கவில்லை.

விஜயா, பீரோவுக்குப் பின்னால் இருந்தபடியே யோசித்தாள். 'வந்தது யார்... மோகனா...? இல்லை வேறு யாராவதா?'

"போய்ப் பார்க்கலாமா?"

ஒரு நிமிட நேர தயக்கத்துக்குப் பிறகு விஜயா பீரோவை விட்டு வெளியே வந்தாள். அந்த அறையை நோக்கி சத்தமில்லாமல் பூனை நடை போட்டவள் கதவுக்குப் பக்கல் போய் சுவராய் ஒண்டிக் கொண்டு மெல்ல தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அறை இருட்டு பாவியிருந்த அறையில் யாரும் இல்லை.

"நடைச்சத்தம் கேட்டதே!"

"ஒரு வேளை பிரமையோ...?"

'இல்லையே... நடைச் சத்தம் நன்றாய்க் கேட்டதே...!' விஜயா பயமாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே சமையலறைக்குள் அந்த குழப்பமான சத்தம் கேட்டது.

யாரோ எதையோ தேடும் சத்தம்.

'போய்ப் பார்த்துவிடலாம்...!' முடிவு செய்து கொண்ட விஜயா இருட்டில் மெல்ல நடந்து குறுமேசையின்மேல் இருந்த அந்த கனமான பித்தளை பூச்சாடியை தற்காப்புக்காக எடுத்துக் கொண்டாள். சத்தம் வராமல் நடைபோட்டு சமையலறையை நெருங்கினாள். கதவுக்குப் பக்கத்தில் போய் நின்று மெதுவாய் எட்டிப் பார்த்தாள்.

சமையலறையின் இருட்டுக்குள் அந்த உருவம் தெரிந்தது.



பேண்ட் சட்டை அணிந்த சற்றே குள்ளமான உருவம்.

விஜயா இமைக்காது அந்த உருவத்தையே பார்த்தாள்.

"யாரது என்று குரல் கொடுக்கலாமா?"

"வேண்டாம்..! அந்த உருவம் என்ன செய்கிறது என்று பார்க்கலாம்...!"

விஜயா கவனிக்கத் தொடங்கினாள்.

அந்த உருவம் சமையலறையில் எதையோ நிதானமாய் தேடிக் கொண்டிருந்தது. பெரிய பெரிய எவர்சில்வர் டப்பாக்களை சத்தம் இல்லாமல் திறந்து பார்த்துக் கொண்டிருந்தது.

'திருடனா...?'

விஜயா யோசித்துக் கொண்டிருக்கும்போதே உருவம் இடதுபக்கமாய் நகர்ந்து எதையோ எடுக்க முயல சமையலறை திட்டின் மேல் இருந்த பாத்திரம் ஒன்று உருவத்தின் கை பட்டு உருண்டது. திடுக்கிட்டுப் போன உருவம் சுற்றும் முற்றும் மிரண்ட பார்வை பார்க்க அந்தப் பார்வைக்கு விஜயா கிடைத்தாள்.

விஜயா கையில் பித்தளை உலோக பூச்சாடியோடு அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டு மெல்ல முன்னோக்கி நடந்தாள்.

"யார்ரா... நீ...?"

உருவம் அவளையே முறைத்துக் கொண்டு நின்றது.

"சொல்லு...! யாரு... நீ...! எதுக்காக இந்த வீட்டுக்குள்ளே வந்தே...?"

உருவம் அசையவில்லை.

"என்னத்தை... இங்கே தேடிக்கிட்டு இருக்கே...?"

விஜயா கேட்டுக்கொண்டு இருக்கும் போதே அந்த உருவம் எதிர்பாராத ஒருவிநாடியில் குபீரென்று தாவி வீட்டின் பின்பக்கம் ஓட முயல, விஜயா தன் கையில் இருந்த பித்தளை பூச்சாடியை அந்த உருவத்தின் மீது குறிபார்த்து வீசினாள்.

பூச்சாடி அந்த இருட்டிலும் குறி தவறாமல் உருவத்தின் பின்னந்தலையைத் தாக்க உருவம் சத்தம் காட்டாமல் மல்லாந்து விழுந்தது. உடம்பில் ஒரு துளி அசைவில்லை.

விஜயா இரண்டு நிமிடங்கள் வரை கீழே விழுந்துகிடந்த அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பின் மெதுவாய் சமையல்மேடைக்குப் போய் தீப்பெட்டியைத் தேடி எடுத்து ஒரு தீக்குச்சியை உரசினாள். அந்த வெளிச்சத்தை கீழே தாழ்த்தி உருவத்தைப் பார்த்தாள்.

அதிர்ந்தாள்.

அந்த உருவம் ஆண் இல்லை. பெண். இறுக்கமான பேண்ட்டும் தொளதொளப்பான சட்டையும் அந்தப் பெண்ணை ஒரு ஆண் போலவே காட்டியது. பித்தளை

பூச்சாடி தாக்கியதில் அவளுடைய பின்னந்தலை பொத்துக் கொண்டு ரத்தம் கொட்டியது.

விஜயா வேகவேகமாய் அவளை நெருங்கி பக்கத்தில் போய் மண்டியிட்டு உட்கார்ந்தாள். உடலை உசுப்பினாள்.

அசைவேயில்லை.

நாசியருகே தன் புறங்கையை வைத்துப் பார்த்தாள். சுவாசம் இல்லை. மார்பில் காது வைத்து கேட்டாள்.

நிசப்தம்.

இதயத்துடிப்பு அறவே இல்லை.

விஜயாவுக்கு பயத்தில் உடம்பு முழுக்க வியர்த்துக் கொட்டியது. 'தேவையில்லாமல் ஒரு கொலை, கொஞ்சம் நிதானம் காட்டியிருக்கலாம்!'

மறுபடியும் ஒரு தீக்குச்சியை உரசி அந்த வெளிச்சத்தில் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாள்.

இனிமையான முகம். இருபத்தைந்து வயது இருக்கலாம். கழுத்தில் கறுப்பு பாசி மணி மாலை.

'யார் இந்தப் பெண்?'

'எதற்காக இந்த கொட்டும் மழையில் வந்து வீட்டில் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்?'

'மோகனுக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு?'

விஜயா வியர்த்து வழிந்தபடி அந்தப் பெண்ணின் பேண்ட் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தாள்.

ஏதோ புடைப்பாய் தட்டுப்பட்டது. வெளியே எடுத்தாள். அது ஒரு மணிபர்ஸ். திறந்தாள். நூறு ரூபாய் தாள்கள் அடைசலாய் தெரிந்தன. பச்சை நிறத்தில் இரண்டு பஸ் டிக்கெட்டுகள். அந்த டிக்கெட்டுகளைத் திருப்பிப் பார்த்தாள் விஜயா. ஒரு டிக்கெட்டுக்குப் பின்னால் ஐந்து எண்கள் கிறுக்கலாய் எழுதப்பட்டிருந்தது. தொலைபேசி எண்ணாக இருக்கலாம்.

மழை இன்னமும் பிடிவாதமாய் பெய்து கொண்டிருந்தது. விஜயா சோபாவின் மூலையில் ஒண்டியபடி யோசித்தாள்.

'மழை ஓய்ந்த பிறகுதான் சமையலறையில் கிடக்கும் அந்த உடலை வீட்டுக்குப் பின்பக்கமாய் புதைக்க முடியும்...! அதற்குள் மோகன் வந்துவிடாமல் இருக்க வேண்டும்...! அதுவரைக்கும் என்ன செய்யலாம்...?'

'ஒரு வேளை மோகன் ஒரு ஆபத்தான மன நோயாளியோ?'

'கடவுளே...?' விஜயாவின் கையில் இருந்த மெழுகுவர்த்தி அவளையும் அறியாமல் நழுவி கீழே விழுந்தது... அணைந்தது. அப்படியே தளர்ந்து போய் பக்கத்தில் இருந்த நாற்காலியில் சாய்ந்தாள்.

'இந்த வீட்டுக்குள் அவனோடு இருக்கிற ஒவ்வொரு



நிமிடமும் ஆபத்துதான்...!'

'மழை நின்றதும் சமையலறையில் கிடக்கும் அந்த உடலை பின் பக்கம் இழுத்துப் போய் நாயைப் புதைத்த குழியில் புதைத்துவிட்டு உடனே கிளம்பிவிட வேண்டியதுதான்...!'

'மழை குறைந்துவிட்டதா...?'

ஜன்னல் பக்கம் போய் பார்த்தாள். வெளியே மழையின் உக்கிரம் அப்படியே இருந்தது. மின்னல்கள் சரமாரியாய் கண்களைப் பறிக்க, இடியோசை இதயத்தை அதிரச் செய்தது.

'இப்போதைக்கு மழை நிற்கிற மாதிரி தெரியவில்லையே...! மழையிலேயே உடலை இழுத்துக் கொண்டு போய் புதைத்துவிடலாமா?'

'அது சாத்தியமில்லை... இந்த பேய் மழையில் குழியைத் தோண்டுவதோ அதில் உடலைப் புதைப்பதோ முடியாத காரியம். கொஞ்சம் பொறுப்போம். மழை நிற்கட்டும்!' விஜயாவின் மூளை யோசனை சொன்னது.

'அதற்குள் மோகன் வந்துவிட்டால்...?'

'இந்த மழையில் எப்படி வர முடியும்...?'

'ஏன் வரமுடியாது... அவன் காரில்தானே போயிருக்கிறான்!'

'எந்த நிமிடத்திலும் மோகன் வந்துவிடலாம். அதற்குள் சமையல் அறையில் கிடக்கிற அந்த உடலை வேறு எங்கேயாவது இழுத்துக் கொண்டு போய் மறைவாய்ப் போடணும்...!'

விஜயா பரபரவென்று செயல்பட்டாள். வீட்டுக்குள் பரவியிருந்த இருட்டிலேயே மெல்ல நடந்து சமையலறைக்கு வந்தாள். உடல் உறைந்து போன ரத்தத்துடன் அப்படியே கிடந்தது. குனிந்து கால்களைப் பற்றி மெல்ல இழுத்தாள். உடல் மெல்ல வந்தது. அப்படியே கொண்டுபோய் எதிரில் இருந்த அறையில் போட்டாள்.

மீண்டும் மெழுகுவர்த்தியை உயிரூட்டினாள்.

அந்த உடலின் பின்னந்தலையில் இருந்து வழிந்த ரத்தம் தரையில் கோணல் மாணலாய் கோடுபோட்டிருந்தது. குளியலறைக்குப் போய் ஒரு பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து ரத்தம் பட்ட இடத்தையெல்லாம் தேய்த்துக் கழுவினாள்.

பத்து நிமிடம்!

இடம் சுத்தமாயிற்று.

'இனி பிரச்சனையில்லை. மழை நின்றுவிட்டால் உடலைப் புதைத்துவிட்டு போய்க்கொண்டே இருக்கலாம்!'

விஜயா சமையலறையின் ஜன்னல் கதவைத் திறந்து மழை எப்படி பெய்கிறது என்று பார்த்தாள்.

கொஞ்சம் குறைந்த மாதிரி இருந்தது. இடியோசை இப்போது இல்லை. மின்னல் சோம்பலாய் மின்னியது.

'எப்படியும் இன்னும் சில நிமிடத்துக்குள் மழை சுத்தமாக நின்றுவிடும்!' யோசனையுடன் மழையையே பார்த்துக் கொண்டு நின்றவளை, தொலைபேசி அலறி அழைத்தது.

ஜன்னலை சாத்திவிட்டு அலறிக் கொண்டிருந்த தொலைபேசியை பயமாய்ப் பார்த்தாள்.

'ரிசிவரை எடுக்கலாமா வேண்டாமா...?'

'வேண்டாம்...! அப்படியே கத்தி கத்தி ஓயட்டும்!'

'யாரோ பண்ணிவிட்டு போகட்டும்!'

விஜயா ரிசீவரை எடுக்காமல் அப்படியே சிலை மாதிரி நின்றாள். டெலிபோன் நிமிட நேரம் அடித்து ஓய்ந்து விட்டு ஊமையாயிற்று. சில விநாடிகள் கழித்து மறுபடியும் வாயைத் திறந்தது.

எரிச்சலானாள் விஜயா.

'ரிசீவரை எடுத்துக் கீழே வைத்துவிடலாமா?'

'அதுதான் சரி...!' முடிவுக்கு வந்தவளாய் ரிசீவரை எடுத்துக் கீழே வைக்கப் போனவள், அது யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் காதில் வைத்தாள்.

மறுமுனையில் பெண்குரல்.

"அலோ... அலோ...!"

விஜயாவுக்கு சட்டென்று அந்த குரல் பிடிபட்டது.

'இது அபிநயா குரல் அல்லவா...?'

'ஆமாம்... இது அவளுடைய குரல்தான்...!' விஜயா தன்னை மறந்து கத்தினாள்.

"அபி... நீயா...?"

"நீ... நீங்க யாரு...?"

"நான் விஜயா...! கோயம்புத்தூர் விஜயா..."

"ஏய்... விஜயா...! நீயா...?"

"நானேதான்...!"

"அங்கே எப்படி...?"

"உன்னைப் பார்க்கத்தான் கோயமுத்தூரிலிருந்து வந்தேன்..."

"எப்போவந்தே...?"

"இன்னிக்குக் காலையில...!"

"ஒரு போன் பண்ணிட்டு வந்திருக்கலாமே...?"

"ரொம்பவும் அவசரத்துல புறப்பட்டேன்...! எப்படியும் வீட்ல இருப்பேங்கிற நம்பிக்கையில் புறப்பட்டு வந்துட்டேன். 'வீட்ல உன்னோட கணவர் இருந்தா...'

அபிநயா சிரித்தாள். "உனக்கு பயங்கர அதிர்ச்சியாய் இருந்திருக்குமே...? என்னோட கல்யாணத்தைப் பற்றி நான் யாருக்குமே சொல்லலை... தப்பு நினைச்சுக்காதே..."

"இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு... அபி...! கல்லூரி நாட்கள்ல எல்லார்கிட்டேயும் நான் கல்யாணம்



பண்ணிக்கமாட்டேன்னு சொல்லிட்டிருந்தே. அதனால்தான் எனக்கு அதிர்ச்சி! நீ வீட்ல இல்லை திருவனந்தபுரம் போயிருக்கேன்னு உன் கணவர் சொன்னதும் நான் ஊருக்கு திரும்பிப் போயிடலாம்னு இருந்தேன். ஆனால் அவர் விடலை. இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்குள்ளே நீ வந்துடுவேன்னு சொன்னார். அதுதான் இருந்துட்டேன்..."

"அவர் சொன்னது சரிதான் விஜயா...! ஆனால் இன்னுக்கு ராத்திரி புறப்பட்டு வரமுடியாத சூழ்நிலை..."

"அப்படின்னா நீ நாளைக்கு ராத்திரிதான் வருவியா?"

"ஆமா... அதுக்காக புறப்பட்டு போயிடாதே... வீட்லேயே இரு... என்னோட கணவர் உன்கிட்ட அன்பா பேசினாரா?"

"ம்..."

"அவர் பக்கத்துல இருந்தா ரிசீவரைக் கொடு..."

"அவர் வீட்ல இல்லை..."

"வீட்ல இல்லையா...? எங்கே போயிட்டார்...?"

"ஏதோ பாலம் இடிஞ்சுட்டதா காலையிலே அவருக்கு போன் வந்தது. உடனே புறப்பட்டுப் போயிட்டார்.

"எ... என்ன... பாலம் இடிஞ்சுட்டதாகவா சொன்னார்...?"

"ஆமா..."

"போனவர் வெளியே இருந்து போன் பண்ணினாரா?"

"இல்லை...!"

"சரி... என்னை அவசர அவசரமா கோயமுத்தூரிலிருந்து பார்க்க வந்திருக்கியே... என்ன விஷயம்...?"

"அதை உன்கிட்ட நேர்லதான் சொல்லணும்... நாளைக்கு நீ வந்துடுவே இல்லையா...?"

"கண்டிப்பா வந்துடுவேன்...! நீ அங்கேயே இரு. நாளைக்குக் கிளம்பிப் போயிடாதே...!" அபிநயா சொல்லிக் கொண்டிருக்கும்போதே.

வீட்டு வாசல் கதவு 'தட தட' வென்று வேகமாய் தட்டப்படும் சத்தம் கேட்டது. அந்த தட்டலில் கோபம் தெரிந்தது. விஜயா திடுக்கிட்டுப் போனாள்.

## 6

**வா**சல் கதவு பலமாகத் தட்டப்படும் சத்தம் கேட்டது. அபிநயாவோடு தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த விஜயா சில விநாடிகளுக்கு தன் இதயத் துடிப்பை மறந்தாள்.

தொலைபேசியின் மறுமுனையில் இருந்த அபிநயாவுக்கும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டிருக்க வேண்டும். விஜயாவிடம் கேட்டாள். "யாரோ கதவைத் தட்டறாங்க போலிருக்கே...?"

"ஆமா..."

"அது என்னோட கணவராக இருக்கலாம். போய்ப்பாரு விஜயா அவராக இருந்தால் ரிசீவரை அவர்கிட்ட கொடு நான்

பேசறேன்...!"

"நீ அப்படியே இரு...!"

"இருக்கேன்...! நீ போய்க் கதவைத் திற..."

விஜயா ரிசீவரை ஒருக்களித்து படுக்க வைத்துவிட்டு வாசலை நோக்கிப் போனாள்.

கதவு இப்போது முன்னைக் காட்டிலும் வேகமாய்த் தட்டப்பட்டது. விஜயா விரைவாய் நடைபோட்டு கதவை நெருங்கி தாழ்ப்பாளை விலக்கினாள்.

வெளியே மழைக்கோட்டு அணிந்த ஒருவர் தலையில் தொப்பியோடு உயரமாய் தெரிந்தார். விஜயாவைப் பார்த்ததும் லேசாய் முகம் மாறினார்.

"வீட்ல அபிநயா இல்லையா...?"

"இல்லை...! அவங்க வெளியூர் போயிருக்காங்க...!"

"நீங்க...?"

"நான் அபிநயாவோட தோழி..."

"எத்தனை நாளா இங்கே தங்கி இருக்கீங்க...?"

"இன்னிக்குக் காலையில்தான் வந்தேன்... நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

"என் பேர் பூவராகவன். இதே நேசமணி நகர்லதான் எனக்கு வீடு. ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி நாகர்கோவில் போயிட்டு கன்னியாகுமரிக்கு திரும்பிட்டிருந்தேன். சுசீந்திரத்துக்குப் பக்கத்துல ரோட்டு ஓரமா மோகனோட கார் நின்னுட்டிருந்தது. ஏதாவது உதவி வேணுமான்னு கேட்கிறதுக்காக காரை நிறுத்தினேன். காரில் மோகன் மயங்கிக் கிடந்தார். நல்லா குடிச்சிருந்தார். எழுப்பிப் பார்த்தேன். முடியலை. அப்புறமா அங்கே இருந்தவங்க உதவியோடு மோகனை என் கார்ல தூக்கிப் போட்டுகிட்டு வந்தேன்..."

விஜயா குறுக்கிட்டு சொன்னாள். "அபிநயா டெலிபோன்ல பேசிட்டு இருக்கா... நான் அவகிட்டே பேசிட்டு வந்துடறேன்...!"

விஜயா சொல்லிவிட்டு மறுபடியும் ரிசீவரை எடுத்தாள். மறுமுனையில் அபிநயா காத்திருந்தாள். கேட்டாள்.

"வந்தது யாரு விஜயா...?"

"பூவராகவன்னு ஒருத்தர். இதே நேசமணி நகர்ல குடியிருக்கிறவராம்..."

"ஓ... அவரா...! தெரியும்...! என்ன விஷயமா வந்திருக்கார்...?"

விஜயா தயங்கி தயங்கி விபரம் சொல்ல, மறுமுனையில் இருந்த அபிநயா ஆச்சரியப்பட்டாள்.

"மோகன் குடிச்சிருந்தாராமா...?"

"ஆமா..."

"அவருக்கு குடிப்பழக்கம் கிடையாதே..."



"நல்லா குடிச்சுட்டு கார்ல மயங்கிக் கிடந்தாராம்... பூவராகவன்தான் சொன்னார்."

"சரி... நான் வந்து பேசிக்கிறேன்! விஜயா! நீ ஏதும் தப்பா நினைச்சுக்காதே... நீ வீட்டுக்கு வந்த நேரம், உனக்கு வீணான பிரச்சினைகள்."

"அதெல்லாம் இல்லை...!"

"என்னோட கணவர் மோகனை காரிலிருந்து வீட்டுக்குள்ளே கொண்டு வந்தாச்சா?"

"இல்லை...! பூவராகவன் வெளியேதான் நிற்கிறார்... நீ எதுக்கும் கவலைப்படாதே அபி...! நீ வர்ற வரைக்கும் அவரை நான் பார்த்துக்கிறேன்..."

"விஜயா! உன்னால முடியுமா...?"

"முடியும்..."

"அவர் குடிச்சு நான் என்னிக்குமே பார்த்தது இல்லை. நான் வேணும்ன்னா உடனே புறப்பட்டு வரட்டுமா?"

"வேண்டாம் அபி...! நீ நாளைக்கே புறப்பட்டு வா... உதவிக்கு பூவராகவன் இருக்கிறார். நான் பார்த்துக்கிறேன்..."

"சரி... ஒரு மணி நேரம் கழிச்சு மறுபடியும் போன் பண்றேன்... அவர் எப்படி இருக்காருன்னு சொல்லு... புறப்பட்டு வர்றேன்..."

"சரி...!" விஜயா ரிசீவரை வைத்துவிட்டு மறுபடியும் வாசலுக்கு வர பூவராகவன் கேட்டார்.

"அபிநயாகிட்ட பேசிட்டீங்களா...?"

"ம்... பேசிட்டேன்... மோகனுக்கு குடிப்பழக்கமே இல்லைன்னு அவள் சொல்றாளே...?"

"அபிநயாவுக்கு தெரியாமே இருந்திருக்கலாம். உங்க பேர் என்ன சொன்னீங்க... ஜெயாவா...?"

"இல்ல... விஜயா...."

"வாங்க விஜயா... மோகனைக் காரிலிருந்து தூக்கிக் கொண்டு வந்துடலாம்... என் ஒருத்தனால அவரைக் கீழே இறக்க முடியாது..."

பூவராகவன், வாசலில் நின்றிருந்த காரை நோக்கிப் போக விஜயா பின் தொடர்ந்தாள்.

மழை இப்போது சுத்தமாக இல்லை. மின்சாரம் இல்லாததால் சுற்றுப் பகுதி முழுவதும் கும்மிருட்டாய் தெரிந்தது. பூவராகவன் காரை நெருங்கி பின்பக்கம் கதவைத் திறக்க - மோகன் உள்ளே மல்லாந்து கிடந்தான். கலைந்த தலை. சட்டையின் பொத்தான்கள் அவிழ்ந்து கிடக்க பனியன் அணியாத வெற்று மார்பு தெரிந்தது.

"நீங்க கால்களைப் பிடியுங்க விஜயா. நான் தலைப்பக்கம் போயிடறேன்."

விஜயா தலையாட்டிவிட்டு காருக்குள் குனிந்தாள்.

மட்டமான சாராய வாசனை குப்பென்று மூச்சை அடைத்தது விஜயாவின் வயிற்றைப் புரட்டியது. மோகனின் தோள்பட்டைகளைப் பிடித்து பூவராகவன் தூக்கிக் கொள்ள விஜயா கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

மோகனைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

"படுக்கையறை எது?"

"அதோ... அந்த அறைதான்."

உள்ளே போனார்கள். மோகனை, கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

பூவராகவன் சொன்னார். "மோகன் இப்போ இருக்கிற நிலைமையைப் பார்த்தால் நாளைக்குக் காலை வரைக்கும் கண்விழிக்க மாட்டார் போலிருக்கு... எதுக்கும் டாக்டரை வரவழைக்கலாமா?"

"எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை..."

"டாக்டரை வரவழைக்கிறதுதான் சரி! மோகனோட குடும்ப டாக்டர் யாரு?"

"எனக்கு தெரியாது."

"ஓ... நீங்க இந்த ஊருக்கு புதுசா? எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தர் பக்கத்துலதான் இருக்கார். போன் பண்ணினா உடனே வந்துடுவார். டெலிபோன் எங்கே இருக்கு?"

"அதோ... அங்கே..."

பூவராகவன் டெலிபோனை நோக்கிப் போனார். ரிசீவரை கையில் எடுத்துக் கொண்டு எண்களை ஒற்றியெடுத்துவிட்டு பேசத் தொடங்கினார்.

"டாக்டர் தேவேந்திரனா? நான் பூவராகவன் பேசறேன். டாக்டர்! நீங்க உடனே புறப்பட்டு நேசமணி நகர் வரைக்கும் வரமுடியுமா?"

"....."

"ரொம்பவும் அவசரம். இடத்தைச் சொல்றேன். 'நோட் பண்ணிக்குங்க."

டாக்டர் தேவேந்திரன் அடுத்த பதினைந்தாவது நிமிடம் அங்கே இருந்தார்.

பூவராகவன் வரவேற்றார்.

"வாங்க டாக்டர்... மழை நேரத்துல உங்களுக்கு தொந்தரவு கொடுத்துட்டேன்..."

"மோகனுக்கு என்ன?"

"நல்ல குடிச்சிருக்கார்... மட்டமான சாராயம்... பக்கத்துல நிக்க முடியலை... அவரைக் கொஞ்சம் சுய நினைவுக்கு கொண்டுவரணும்."

தேவேந்திரன் ஒரு நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு மோகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். மோகனை



இரண்டு நிமிட நேரம் பரிசோதித்துப் பார்த்தவர் லேசாய் முகம் மாறினார். பூவராகவனிடம் நிமிர்ந்தார்.

"மோகனை எங்கேயிருந்து கொண்டு வந்தீங்க?"

"சுசீந்திரம் பக்கத்துல காரில் மயங்கிக் கிடந்தார்."

"மிஸ்டர் பூவராகவன்! மோகன் சாராயம் குடிக்கவேயில்லை. யாரோ சாராயத்தாலே அவரோட துணியை நனைச்சி இருக்காங்க அவ்வளவுதான்."

"அப்படியா? பின்னே எப்படி மயக்கமா கிடக்கிறார்?"

"விஷ ஊசி போட்டிருக்காங்க."

விஜயா, பூவராகவன் இரண்டு பேரும் பதற்றமானார்கள்.

"எ... எ... என்ன சொன்னீங்க டாக்டர்... விஷ ஊசியா?"

"ஆமா! மோகனை யாரோ கொலை பண்றதுக்காக இந்த ஊசியைப் போட்டிருக்கலாம். ஊசி போட்டது தெரியாமே இருக்கிறதுக்காக சாராயம் குடிச்ச மாதிரி ஏற்பாடு பண்ணி இருக்காங்க. உடனே மோகனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சிகிச்சை தரணும். இல்லேன்னா உயிருக்கு ஆபத்து."

விஜயா இடைமறித்து பூவராகவனிடம் சொன்னாள்.

"மோகனுக்கு குடிப்பழக்கம் இல்லைன்னு அபிநயா சொல்ல சொன்னாள்."

"பேசிட்டிருக்க நேரம் இல்லை. உடனடியா மோகனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணும். அதுக்கு முன்னாடி போலீசுக்கு தகவல் கொடுக்கணும்!"

விஜயா திடுக்கிட்டாள்.

"போ... போலீஸா...?"

"ம்... போலீஸுக்கு தகவல் கொடுக்காமே இருக்க முடியுமா? மோகனை யாரோ கொலை பண்றதுக்காக விஷ ஊசி போட்டிருக்காங்க. அது யாருன்னு கண்டுபிடிக்க வேண்டாமா?"

விஜயாவுக்கு அந்தக் குளிரான வேளையிலும் உடம்பு வியர்த்துக் கொட்டியது.

போலீஸ் இந்த பிரச்சினைக்குள் நுழைந்தால் கண்டிப்பாய் வீட்டைச் சோதனை போடுவார்கள். அப்படி சோதனை போட்டால் பக்கத்து அறையில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் உடல் போலீசாரின் பார்வைக்குக் கிடைக்கும்.

பூவராகவன் குரல் அவளை உசுப்பியது.

"என்னங்க விஜயா... யோசனை பண்ணிகிட்டிருக்கீங்க?"

"ஓ.... ஒண்ணுமில்லை..."

"வீட்டைப் பூட்டிகிட்டு கிளம்புங்க. மோகனை ஆஸ்பத்திரியில் சேர்த்துடலாம்."

"ம்..." படபடப்பைக் காட்டிக் கொள்ளாமல் தலையசைத்தாள் விஜயா.

அரசு மருத்துவமனை.

சிகிச்சைக்காக மோகன் தீவிர கண்காணிப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்க - வெளியே போட்டிருந்த நீளமான பெஞ்சில் விஜயாவும் பூவராகவனும் உட்கார்ந்து இருந்தார்கள். வெளியே மழை லேசாய் தூறிக் கொண்டு இருந்தது.

பூவராகவன் பெருமூச்சோடு சொன்னார்.

"பாவம்... ஊர் விட்டு ஊர் வந்து உங்களுக்கு இது எல்லாம் தேவையில்லாத பிரச்சினைகள்!"

"என்ன செய்யறது சார்.... வாழ்க்கையில் எதுதான் எதிர்பார்க்கிற மாதிரி நடக்குது?"

"அபிநயாவுக்கு தகவல் கொடுக்க போன் நம்பர் ஏதாவது இருக்கா?"

"இல்லை... அவளே மறுபடியும் போன் பண்றதா சொல்லி இருக்கா. போன் வீட்டுக்குத்தான் வரும். நாம இங்கே உட்கார்ந்துட்டு இருக்கோம்."

"நீங்க வேணும்னா வீட்டுக்குப் போய் அபிநயா பேசினால் பேசுங்க. நான் இங்கே இருக்கேன்."

விஜயா எழுந்தாள்..

அதே விநாடி

அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து வேகமாய் வெளிப்பட்டு விஜயாவை நோக்கி வந்தார்.




**போ**லீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்திபன், விஜயாவை நெருங்கினார். அவள் தயக்கமாய் எழுந்து நின்றாள்.

"நீங்கதானே விஜயா...?"

"ஆமா...!"

"உங்களுக்கு சொந்த ஊர்...?"

"கோயமுத்தூர்..."

"மோகன் வீட்ல எத்தனை நாளா தங்கி இருக்கீங்க?"

"நான் இன்னிக்குக் காலையில்தான் வந்தேன்.. அவன் மனைவி அபிநயா திருவனந்தபுரம் போயிருக்காள்னு தெரிஞ்சதுமே திரும்பவும் ஊருக்குப் புறப்பட்டு போயிடலாம்னு நினைச்சேன். ஆனால் மோகன் விடலை... 'அபிநயா இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்குள்ளே வீட்டுக்கு வந்துடுவா... இருங்க'ன்னு சொன்னார். எனக்கும் அபிநயாவைப் பார்த்து பேசவேண்டியிருந்ததால் தங்கிட்டேன்."

"எதுக்காக அபிநயாவைப் பார்க்க வந்தீங்க...?"

"அது... வந்து...!"

"ம்... சொல்லுங்க...!"

"எங்க தனிப்பட்ட விஷயம்...!"

"எதுவா இருந்தாலும் பரவாயில்லை... சொல்லுங்க...



ஏன்னா அபிநயாவோட கணவர் மோகனை யாரோ விஷ ஊசி போட்டுக் கொலை பண்ண முயற்சி செஞ்சிருக்காங்க...! எதுக்காக அந்த கொலை முயற்சி...? காரணத்தைக் கண்டுபிடிச்சாகணும்... விசாரணையை பல பக்கத்திலிருந்து தொடங்கித்தான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும்..."

விஜயா தயங்கிவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

"என்னோட அக்கா தமயந்திக்கு கல்யாணம் அடுத்த மாசம் கல்யாணம்... கல்யாணத்தை நடத்த கொஞ்சம் பணத்தட்டுப்பாடு. அபிநயாகிட்டே விபரம் சொல்லி பணம் வாங்கிட்டுப் போலாம்னு வந்தேன்...!"

"அப்படீன்னா... நீங்க இங்கே வரப்போறது அபிநயாவுக்குத் தெரியுமா...?"

"தெரியாது."

"நீங்க கோயமுத்தூரிலிருந்து புறப்படும்போதே அபிநயா இருக்காங்களான்னு தெரிஞ்சுக்க ஏன் போன் பண்ணலை..."

"போன் பண்ணிட்டு வரணும்னு எனக்குத் தோணலை. அதுவுமில்லாமே பண உதவியை போன் மூலமா கேட்கிறது சரியில்லைன்னு என் மனசுக்கும் பட்டது. அதுதான் தகவல் கொடுக்காமே நேர்ல புறப்பட்டு வந்தேன்... பஸ்சில் இருந்து இறங்கினதும் ஆட்டோ பிடிச்சு அபிநயா வீட்டுக்கு வந்ததுமே எனக்கு கிடைச்ச முதல் அதிர்ச்சி மோகன்தான்."

"ஏன்...?"

"கல்லூரி நாட்களில் அபிநயா, தான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லைன்னு சொல்லிட்டிருந்தா. அவளுக்கு ஆன்மீகம் யோகா போன்றவைகளில் அப்போதே ஈடுபாடு இருந்தது. மோகன் தன்னை அபிநயாவோட கணவர்னு சொன்னது எனக்கு பெரிய அதிர்ச்சியாய் இருந்தது."

"அபிநயா உங்களுக்கு நெருக்கமான தோழிதானே?"

"ஆமா...!"

"பின்னே ஏன் கல்யாணத்தைப் பத்தி உங்களுக்கு தெரிவிக்கலை...?"

"இந்தக் கேள்விக்கான பதிலை அபிநயாகிட்டேதான் கேட்கணும்."

"சரி இன்னிக்கு வீட்டில் மோகனின் நடவடிக்கைகள் எப்படி இருந்தது?"

"எல்லாமே குழப்பமாய் இருந்தது. அந்தக் காலை வேளையில் ஒரு கோழியை அறுத்தார். ரத்தத்தை சுத்தம் பண்ணிவிட்டிருந்தார். முந்தின நாள் இறந்துபோன அவர் வீட்டு நாயை வீட்டுக்குப் பின்பக்கம் குழி தோண்டி புதைச்சிருந்தார். ஒரு போன் வந்தது. எடுத்துப் பேசினார். அவர் கட்டின பாலம் ஏதோ இடிஞ்சிட்டதா போன்ல தகவல்.

உடனே கார்ல புறப்பட்டுப் போனார். புறப்பட்டுப் போன கொஞ்ச நேரத்துல மறுபடியும் வீட்டுக்கு வந்து ஒரு 'பைலை' எடுத்துக்கிட்டு போனார். அதுக்கப்புறம் நான் மட்டும் வீட்ல தனியா இருந்தேன். மோகன் வர தாமதமானதால் அவர் வேலை பார்க்கிற கட்டுமான அலுவலகத்துக்கு போன் பண்ணி கேட்டேன்...! அவங்க சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது."

"அவங்க என்ன பதில் சொன்னாங்க...?"

"மோகன் அங்கே வேலையிலே இல்லையாம். ஆறுமாசத்துக்கு முன்னாடியே வேலையை விட்டு நின்னுட்டாராம்."

"அப்போ... பாலம் இடிஞ்சு விழுந்துட்டதா மோகனுக்கு போன் பண்ணிச் சொன்னது யாரு...?"

"அதையும் அவங்ககிட்ட கேட்டேன். 'பாலம் இடிஞ்சுட்டதா...? அப்படி எந்த சம்பவமும் நடக்கலையே'ன்னு சொன்னாங்க..."

"அந்த நிறுவனத்தின் பெயர் என்ன...?"

"சேது கட்டுமான நிறுவனம்..."

"நீங்க சொல்றதைப் பார்த்தா மோகன் வேற ஏதோ ஒரு காரியத்துக்காக வெளியே போயிருக்கார். ஆனால் உங்ககிட்ட பாலம் இடிஞ்சுட்டதா பொய் சொல்லியிருக்கார்."

"ஆமா..."

"இப்போ மோகனோட வீடு பூட்டிதானே இருக்கு?"

"ஆமா..."

"சாவி...?"

"என்கிட்டதான் இருக்கு...!"

"சரி... வாங்க..."

"எங்கே...?"

"மோகன் வீட்டுக்கு..."

"எ... எ... எதுக்கு...?" விஜயாவின் இதயம் படபடத்தது. தலை சுற்றியது.

"மோகன் இப்போ பேசக்கூடிய நிலைமையில் இல்லை. அபிநயா ஊர்ல இல்லை... இந்த நிலைமையில் வீட்டை சோதனை போட்டுப் பார்த்தால் ஏதாவது விபரம் கிடைக்கலாம்..."

விஜயா அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு இயல்பான குரலில் சொன்னாள். "அபிநயா நாளைக்கு வந்துடுவா... அவள் வந்ததும்... சோதனை போடலாமே?"

"இல்லை... அபிநயாவுக்காக காத்திட்டிருக்க முடியாது. குற்றவாளி யாருங்கிறதைக் கண்டுபிடிக்க சின்ன தடயம் கிடைச்சாக்கூட போதும். அந்த தடயம் மோகனின் வீட்டில் எந்தப் பகுதியில இருந்தாவது கிடைக்கலாம்...



காலையிலிருந்து நீங்கதான் அந்த வீட்ல இருந்திருக்கீங்க. வீட்டை சோதனை போடும்போது நீங்களும் இருந்தால் எங்களுக்கு சட்டபூர்வமா எந்தப் பிரச்சினையும் வராது. வாங்க போகலாம்."

விஜயாவின் இதயம் சுடிகார பெண்டுலமாய் மாறி விலாவின் இரு பக்கங்களிலும் போய் அடித்துக் கொண்டது.

'அறைக்குள் அடைத்து வைத்திருக்கும் அந்த உடல் போலீசாரின் பார்வைக்கு கிடைத்துவிட்டால் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துவிடுமே...'

"என்ன விஜயா... யோசனை பண்றீங்க?"

"ஒண்ணுமில்லை... இது எனக்கு முன்னே பின்னே தெரியாத ஊர். என் அக்காவோட கல்யாணத்துக்காக பண உதவி கேட்க வந்த நான் ஏதாவது பிரச்சினையில் மாட்டிக் கொள்ளுவேனோன்னு பயமாயிருக்கு..."

"விஜயா! நீங்க எந்தத் தப்பும் பண்ணலைன்னா யாருக்காகவும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அபிநயா திருவனந்தபுரத்திலிருந்து வந்ததும் அவங்கிட்ட நீங்க பணம் வாங்கிட்டு உங்க ஊருக்கு போய்கிட்டே இருக்கலாம். விசாரணை என்கிற பேரில் உங்களை அடிக்கடி கூப்பிட்டு தொல்லைப்படுத்த மாட்டோம். வாங்க.. போகலாம்..."

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் மருத்துவமனை வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி நடக்க, விஜயா வேறு வழியில்லாமல் பின் தொடர்ந்தாள்.

ஜீப் நேசமணி நகரை நோக்கி அந்த இருட்டில் விரைந்தது. மழை இப்போது சுத்தமாய் நின்றிருக்க வீசிய காற்றில் அதிகக் குளிர். மின்சாரம் தடைபட்டு ரோட்டோர விளக்குகள் கண்களை மூடியிருந்தன.

விஜயா முன் மேல் உட்கார்ந்த தினுசில் அவஸ்தையோடு வெளியே பார்த்துக் கொண்டு வந்தாள். அந்தக் குளிரான வேளையிலும் முகத்தில் வெள்ளமாய் வியர்வை. சில நிமிட மவுனத்துக்குப் பிறகு இன்ஸ்பெக்டர் பார்த்திபன் கேட்டார்.

"விஜயா! நீங்க கோயமுத்தூர்ல என்ன வேலை பார்க்கறீங்க?"

"ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்துகிட்டிருக்கேன்."

"உங்க குடும்பத்துல எத்தனைபேர்?"

"எனக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். எனக்கு ஒரு அண்ணன், ஒரு அக்கா, ஒரு தங்கை. அண்ணன் ஏற்கனவே கல்யாணமாகி தனிக்குடித்தனம் போயிட்டார். குடும்பத்தை திரும்பிக்கூட பார்ப்பது கிடையாது. அக்கா தமயந்திக்கு இப்போது வயது இருபத்தொன்பது. இந்த இருபத்தொன்பது வயசில்தான் அவளுக்கு வரன் அமைஞ்சுது. மாப்பிள்ளைக்கு

முப்பத்தியாறு வயசு பள்ளிக்கூடத்தில் வாத்தியாரா இருக்கார். 25 பவுன் நகை போட்டு கல்யாணத்தையும் எங்களோ செய்து வைக்க வேண்டும் என்பது மாப்பிள்ளை வீட்டார் போட்ட நிபந்தனை. கையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. ஆனால் அது போதாது. இன்னும் ஒரு லட்ச ரூபாய் தேவைப்படுகிற நிலைமை. கல்லூரி நாட்களிலேயே அபிநயா எனக்கு கட்டணம் கட்ட, புத்தகம் வாங்க நிறைய தடவை பணம் தந்து உதவி செய்திருக்கா. அதனால்தான், அக்கா கல்யாணத்துக்கும் பண உதவி செய்வாங்கிற நம்பிக்கையோடு அபிநயாவைத் தேடி வந்தேன்."

"அபிநயா மறுபடியும் உங்களுக்கு போன் பண்ணி பேசுறதாச் சொல்லி இருக்காங்களா?".

"ஆமா" விஜயா இன்ஸ்பெக்டரோடு இயல்பாய் பேசுவது போல பேசிக் கொண்டிருந்தாலும் மனம் பூராவும் அபிநயாவின் வீட்டு அறைக்குள் இறந்து கிடக்கும் பெண்ணே வியாபித்திருந்தாள்.

'இன்ஸ்பெக்டர் அந்த பெண்ணின் இறந்த உடலை பார்த்துவிட்டால், என்ன அதிர்ச்சியை முகத்தில் காட்டுகிறாரோ அதே அதிர்ச்சியை நாமும் காட்ட வேண்டியதுதான். நான் அந்தப் பக்கமே போகவில்லை என்று சத்தியம் செய்யாத குறையாக சொல்லிவிட வேண்டியதுதான்' என்ற முடிவோடு இருந்தாள்.

'போலீஸ் மோகன்மேல் சந்தேகப்படுவார்கள். இந்தப் பிரச்சினையில் மாட்டிக் கொள்ளக்கூடாது. மாட்டிக் கொண்டால் ஊருக்குத் திரும்பிப் போக முடியாது. அக்காவின் கல்யாணமும் நின்றுவிடும்."

சவுக்குத் தோப்புக்கு நடுவில் ஜீப் போய்க் கொண்டிருந்த போது இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"மோகன் ஏதோ நாயைப் புதைச்சதா சொன்னீங்களே... அது அவர் வீட்டு நாயா?"

"ஆமா! அந்த நாய்க்கு ஏதோ நோய் வந்து இறந்து போனதாகவும், அதை வீட்டுக்குப் பின்னாடி புதைச்சட்டதாகவும் சொன்னார்."

"மோகன் வீட்டில் இருந்தபோது அவருக்கு வெளியேயிருந்து ஏதாவது போன் வந்ததா?"

"பாலம் இடிஞ்சுட்டதா சொல்லி ஒரே ஒரு போன் வந்தது. அதைக் கேட்டுட்டுத்தான் அவர் வெளியே புறப்பட்டுப் போனார்."

"சரி! வீட்ல நீங்க தனியா இருந்தப்ப மோகனை கேட்டு வேறு யாராவது போன் பண்ணினாங்களா?"

"ஆமா."

"யாரு?"

"ஒரு பொண்ணு."



"பேர்?"

"நான் கேட்டேன்... அந்தப் பொண்ணு சொல்லலை மோகன் எங்கேன்னு கொஞ்சம் உரிமையோடு கேட்டாள். வெளியே போயிருக்கிறதாக சொன்னேன். எப்ப வருவாருன்னு கேட்டாள். நான் தெரியாதுன்னு சொன்னேன்."

"நீங்க யாருன்னு அவள் உங்களைக் கேட்கலையா?"

"கேட்டா! வேலைக்காரின்னு சொன்னேன். எப்ப வேலைக்குச் சேர்ந்தே...? மோகன் என்கிட்டே சொல்லவே இல்லையேன்னு கோபமா கேட்டுட்டு ரிசீவரை வைச்சுட்டா."

"அபிநயா போன் பண்ணி உங்ககிட்டே பேசியபோது அந்தப் பெண்ணைப் பற்றி சொன்னீங்களா?"

"இல்லை" விஜயா தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே ஜீப் வேகம் குறைந்து மோகனின் வீட்டுக்கு முன்பாய் போய் நின்றது

வீடு கனமான இருட்டுக்குள் சிக்கியிருக்க வண்டுகள் கூட்டம் கூட்டமாய் இரைந்து கொண்டிருந்தன. ஜீப்பில் இருந்து இறங்கினார்கள். பார்த்திபன் கேட்டார்.

"விஜயா! வீட்டுச் சாவியைக் கொடுங்க."

விஜயா சாவியை எடுத்துக் கொடுத்தாள். கைவிரல்கள் நடுங்கின.

## 8

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், விஜயாவிடம் வீட்டுச் சாவியை வாங்கிக் கொண்டு, இருட்டில் மெதுவாய் நடந்து போய் கதவில் தொங்கிய பூட்டுக்கு கொடுத்தார். 'டார்ச்' வெளிச்சத்தில் பார்த்தார்.

"ப்ளக்..."

பூட்டு திறந்துகொள்ள கதவைத் தள்ளினார். பழங்கால ஒற்றைக் கதவு 'கிறீச்' சென்று மெதுவாய் அலறிப் பின்னோக்கிப் போயிற்று.

வீட்டுக்குள்ளே கரியை நிரப்பி வைத்த மாதிரி இருட்டு. பார்த்திபன் 'டார்ச்' வெளிச்சத்துடன் முதல் நபராய் உள்ளே நுழைய காவலர்களும், விஜயாவும் பின் தொடர்ந்தனர்.

விஜயாவின் இதயம் தட்டச்சு எந்திரம் மாதிரி படபடத்தது.

'போலீசார், அந்த அறையை திறந்து பார்க்காமல் இருக்க வேண்டும்' - மனதுக்குள் வேண்டினாள்.

முன் அறைக்குள் நுழைந்தார்கள். மையப் பகுதிக்கு வந்ததும் பார்த்திபன் கேட்டார்.

"மோகனோட அறை எது?"

"அதோ... அந்த அறைதான்." விஜயா கை காட்ட, பார்த்திபன் அந்த அறைக்குள் நுழைந்தார். 'டார்ச்' வெளிச்சத்தில் பதினைந்து நிமிட நேரம் அறையை அலசிப் பார்த்துவிட்டு அந்த மருந்துவக்கோப்பை எடுத்துக் கொண்டு

விஜயாவுக்குப் பக்கத்தில் வேகவேகமாய் வந்தார்.
"விஜயா..."
"சார்..."
"மோகன் ஒரு மனநோயாளியா?"
"எ... எ... என்ன சார் சொன்னீங்க... மோகன் மனநோயாளியா?"
"ஆ... ஆமா..."
"யார்... சொன்னது...?"
"இந்த கோப்பில் இருக்கிற குறிப்புகளாலும் பத்ரிநாத் என்பவர் அபிநயாவுக்கு எழுதின ஒரு கடிதம் மூலமாகவும் மோகன் ஒரு மனநோயாளின்னு உறுதியா தெரியுது."
"அவரைப் பார்த்தால் அந்த மாதிரி தெரியலை சார். என்கிட்டே பேசும் போதும் சரி... பழகும்போதும் சரி... சாதாரணமாகத்தான் இருந்தார்."
"ஓ.கே. இப்ப அவர் அப்படி இருந்திருக்கலாம். ஆனால், இதுக்கு முந்தி ஒரு மனநோயாளியாய் இருந்திருக்கலாம் இல்லையா?"
"அதைப் பற்றி எனக்குத் தெரியாது சார்..."
"உங்க தோழி அபிநயா போன்ல பேசும்போதுகூட அதுபற்றி ஒண்ணும் சொல்லலையா?"
"சொல்லலை."
"மறுபடியும் அபிநயா உங்களுக்கு போன் பண்றதா சொல்லிருக்காங்க இல்லையா?"
"ஆமா."
"அபிநயாவுக்கு இந்த வீட்ல தனியறை இருக்கா?"
"தனியறை இருக்கிற மாதிரி தெரியலை சார். சமையலறை பக்கத்துல சின்னதா ஒரு யோகா அறை இருக்கு. அதுவேணும்னா அவளோட அறையாக இருக்கலாம்."
"வாங்க பார்க்கலாம்."
போனார்கள்.
சமையலறையை ஒட்டிருந்த அந்த அறையைக் காட்டினாள்.
"இதுதான் சார்."
பார்த்திபன் 'டார்ச்'சை அடித்து உள்ளே பார்த்தார். துடைத்து வைத்த மாதிரியான அறை. படங்களின் மேல் வெளிச்சத்தை நகர்த்திப் பார்த்தவர், அபிநயாவின் அம்மா படத்தைப் பார்வையில் வாங்கியதும் ஒரு சின்ன திகைப்போடு விஜயாவைப் பார்த்தார். "இ... இது...?"
"அபிநயா கிடையாது சார்... அவளோட அம்மா. முதல் தடவை பார்க்கும்போது நானும் ஏமாந்துட்டேன்..."
பார்த்திபன், யோகா அறையை விட்டு டார்ச் வெளிச்சத்தை நகர்த்தினார். இன்னொரு அறை பார்வைக்குக் கிடைக்க



அதை நோக்கி நகர்ந்தார்.
விஜயா அவரை மறிக்கிற மாதிரி குரல் கொடுத்தாள்.
"சார்... அது வேறு அறை... உள்ளே வேண்டாததைப் போட்டு அடைச்சு வைச்சிருக்காங்க."
பார்த்திபன் "அப்படியா?" என்று கேட்டு நடை தயங்கிய விநாடி தொலைபேசி அழைத்தது.
விஜயா லேசாய் பரபரத்தாள். "சார்... அது அபிநயாவாக இருக்கலாம்."
பார்த்திபன், தொலைபேசியை நோக்கி நகர்ந்தார். விஜயாவும் அவரைப் பின்தொடர்ந்தாள். கதறிக் கொண்டிருந்த தொலைபேசியை நெருங்கி ரிசீவரை எடுத்தார். குரல் கொடுத்தார்.
"அலோ..."
மறுமுனையில் அந்தக் குரல் கேட்டது.
"இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பார்த்திபனா?"
"ஆமா."
"நான், அரசு மருத்துவமனையிலிருந்து டாக்டர் மகாலிங்கம் பேசறேன்."
"சொல்லுங்க டாக்டர்."
"விஷ ஊசி போடப்பட்டு, அனுமதிக்கப்பட்டு இருக்கும் மோகனின் உடல் நிலை வரவர மோசமாயிட்டே போகுது... ஒரு தடவை அவருக்கு நினைவு வந்தது. ஏதோ பேச முயற்சி பண்ணினார்..."
"பேச முயற்சி பண்ணினாரா?"
"ஆமா! ரெண்டொரு வார்த்தை மட்டுமே பேசினார். அதுவும் எனக்குப் புரியலை. இருந்தாலும் அவர் பேசும்போது அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளைப் பதிவு பண்ணி வைச்சிருக்கேன். நீங்க உடனே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டு வர முடியுமா?"
"இதோ புறப்பட்டு வர்றேன். டாக்டர்! மோகன் உயிர் பிழைக்க வாய்ப்பு உண்டா? இல்லையா?"
"முதல்ல பரிசோதித்துப் பார்த்தபோது உயிருக்கு ஆபத்து இருக்கிற மாதிரி தெரியலை. ஆனால் இப்போது விஷத்தோட வீரியம் உடம்பின் நரம்பு மண்டலத்தை தீவிரமா தாக்கியிருக்கியிருக்கும். முக்கிய உறுப்புகள் செயலழிக்க தொடங்கிடுச்சு. இதே நிலைமை நீடித்தால் மோகன் உயிர் பிழைக்க வாய்ப்பு குறைவு. நீங்க உடனடியா வர்றது நல்லது. சிலருக்கு உயர் பிரியற நேரத்துல நல்ல நினைவு வரும். அந்த நேரத்துல தெளிவாய் பேசவும் செய்வாங்க."
"டாக்டர்! நான் அங்கே வர்றதுக்குள்ளே மோகனுக்கு சுயநினைவு வந்து பேசினார்னா உடனே அதையும் பதிவு பண்ணி வையுங்க."

"அதுக்கான ஏற்பாட்டையெல்லாம் நான் பண்ணியிருக்கேன். வாங்க."

பார்த்திபன், ரிசீவரை வைத்துவிட்டு விஜயாவிடம் விஷயத்தைச் சொல்லிக் கொண்டே வீட்டு வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி நடந்தார். விஜயா யோசித்தாள்.

'நான் மட்டும் இங்கே தங்கி, அந்த அறையில் இருக்கும் உடலை வெளியே இழுத்துச் சென்று பின்பக்கம் புதைத்துவிடலாமா?'

'அதுதான் சரி. இந்த சந்தர்ப்பத்தை விட்டா இனி ஒருசந்தர்ப்பம் கிடைக்காது.'

'சார்...' விஜயா குரல் கொடுக்க, ஜீப்பை நோக்கி வேகவேகமாய்ப் போய்க் கொண்டிருந்த பார்த்திபன் நின்று என்ன என்பதுபோல் பார்த்தார். விஜயா சொன்னாள்.

"சார்! நான் ஆஸ்பத்திரிக்கு வரலை. இங்கேயே இருந்துக்கிறேன்."

"ஏன்?"

"அபிநயா எந்த நிமிடமும் எனக்கு போன் பண்ணலாம். அவளுக்கு மோகனோட நிலைமையைப் பற்றிச் சொல்ல நான் இங்கே இருக்க வேண்டாமா?"

பார்த்திபன் அவளை வியப்பாய்ப் பார்த்தார்.

"இந்த வீட்ல தனியா இருக்க உங்களுக்கு பயமா இல்லையா?"

"என்ன பயம்?"

"இல்லை... மோகனை கொலை பண்ண முயற்சி நடந்திருக்கு. இதுக்குப் பின்னாடி யார் இருக்காங்கன்னு கண்டுபிடிக்கிற வரைக்கும் நீங்களும் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருக்கணும்."

"அபிநயாவின் 'போன்' வருமே சார்?"

"சரி... நீங்க வீட்ல இருங்க. வெளியே உங்களுக்கு துணையா காவலர் ஒருத்தர் இருப்பார். இன்னிக்கு ஒருநாள் நீங்க பாதுகாப்பாய் இருக்க வேண்டியது முக்கியம்" சொன்ன பார்த்திபன் தனக்கு இடதுபக்கமாய் நின்றிருந்த காவலரிடம் திரும்பினார்.

"பீட்டர்..."

"சார்..."

"விஜயாவுக்கு பாதுகாப்பாய் நீங்க இங்கே இருங்க. நான் ஆஸ்பத்திரியில்தான் இருப்பேன். ஏதாவது பிரச்சினைன்னா எனக்கு போன் பண்ணுங்க."

"எஸ்... சார்."

பார்த்திபன் சொல்லிவிட்டு ஜீப்பை நோக்கிப் போய்விட, விஜயா வீட்டுக்குள் வந்தாள்.

மனசு படபடத்தது.



'வெளியே காவலரை வைத்துக் கொண்டு அறைக்குள் இருக்கும் உடலை வெளியே எடுத்து வீட்டின் பின் பக்கம் கொண்டு போய்ப் புதைக்க முடியுமா?'

காவலர் பீட்டர், கையில் ஏந்திய துப்பாக்கியோடு விஜயாவை ஏறிட்டார்.

"நீங்க போய் ஓய்வு எடுத்துக்கோங்கம்மா. நான் வெளியே இருக்கேன். ஏதாவது உதவி வேணும்னா ஒரு குரல் கொடுங்க. கதவை வெறுமனே சாத்தி வையுங்க போதும்."

விஜயா கதவைச் சாத்திவிட்டு அறையின் இருட்டில் மெதுவாய் நடந்துபோய் சோபாவில் உட்கார்ந்தாள். தலையின் இரண்டு பக்கமும் இப்போது கனமாய் ஒரு பாரம் ஏறியிருக்க, உடல் துவைத்த துணியாய் நைந்து போயிருந்தது.

"கோயமுத்தூரிலிருந்து எந்த வேளையில் புறப்பட்டோமோ... தெரியவில்லை. கன்னியாகுமரிமண்ணை மிதித்ததிலிருந்து சங்கிலித் தொடர் மாதிரி அடுக்கடுக்காய் பிரச்சினைகள். எல்லாவற்றுக்கும் மேலாக தேவையில்லாமல் ஒரு கொலை. இந்த வலையிலிருந்து மீள முடியுமா...?"

யோசித்துக் கொண்டு ஒரு பத்து நிமிஷ நேரம் அப்படியே உட்கார்ந்திருந்த விஜயா எழுந்தாள்.

'போலீஸார் மறுபடியும் இந்த வீட்டைச் சோதனைப் போட வரலாம். அப்போது அந்த அறையைத் திறந்து பார்க்கக்கூடும். அப்படித் திறந்து பார்த்தாலும் உடல் பார்வைக்குக் கிடைக்காதபடி அதை மறைத்து வைக்க வேண்டும். அந்த அறைக்குள் அதற்கான வசதி இருக்கிறதா என்று பார்க்கலாம்!'

விஜயா மெல்ல நடந்து சமையலறைக்கு வந்து, திட்டின் மேல் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்துக் கொண்டு அந்த அறையை நோக்கிப் போனாள்.

இதயம் முழுக்க திக்... திக்...! கழுத்தும் முதுகும் வியர்த்து ரவிக்கையை நனைத்தது.

விஜயா சில விநாடி நடைக்குப்பின் அந்த அறைக்கு முன்பாய் போய் நின்றாள். கதவைத் தள்ளித் திறந்தாள். அது சின்னச் சின்ன சத்தங்களோடு பின் வாங்கியது.

உள்ளே

கெட்டியாய் இருட்டு.

கைவிரல்கள் நடுங்க, தீக்குச்சியை உரசினாள் விஜயா.

"ச்ர்ரக்...!"

தீக்குச்சியின் தலை பற்றிக் கொண்டு எரிய – இருட்டு அந்த வெளிச்சத்தில் கரைந்தது.

அறைக்குள் பார்வையை படர விட்டாள் விஜயா. அதே விநாடி

பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"இந்த இருட்டுல எதைம்மா தேடுறீங்க...?"

திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தாள் விஜயா.

காவலர் பீட்டர்.

விஜயாவின் இதயத் துடிப்பு உச்சத்துக்குப்போய்க் கொண்டிருக்க, பீட்டர் கையில் 'டார்ச்'சுடன் பக்கத்தில் வந்தார்.

'டார்ச்' உயிர்பெற்று வெளிச்சத்தை உமிழ்ந்தது. அந்த அறையை நோக்கி வேகமாய் போயிற்று.

## 9

காவலர் பீட்டர் தன் கையில் வைத்திருந்த 'டார்ச்'சை உயிர்ப்பித்து அந்த அறைக்குள் வெளிச்சத்தைக் கொண்டு போக - விஜயா அதிர்ந்து போனவளாய் அப்படியே நின்றாள். இதயம் அறுந்துவிடுவதைப் போல் துடித்துக் கொண்டிருந்தது. முதுகில் வியர்வை வெள்ளம்.

பீட்டர் வெளிச்சத்தை அடித்துப் பார்த்துவிட்டு இயல்பான குரலில் விஜயாவிடம் கேட்டார்.

"என்னம்மா... இந்த அறைக்குள்ளே எதை தேடிக்கிட்டு இருந்தீங்க..."

"ஓ... ஒண்ணுமில்லை... ஏதோ சத்தம் கேட்ட மாதிரி இருந்தது... அதுதான் பார்த்துட்டிருந்தேன்."

"ஏதாவது எலி கிலி ஓடியிருக்கும்... இந்த நேரம் பார்த்து கரண்ட் வேறு இல்லை..." பீட்டர் 'டார்ச்' வெளிச்சத்தோடு முன்னறைக்குப் போய் சோபாவில் சாய்ந்தார்.

விஜயாவுக்குள் வியப்போடு கூடிய அதிர்ச்சி விஸ்வரூபம் எடுத்தது.

'அந்த அறைக்குள் போட்டு வைத்த உடல் எங்கே?'

விஜயா மறுபடியும் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அறையில் இருந்த தட்டுமுட்டு சாமான்கள் மட்டும் பார்வைக்குக் கிடைக்க, அந்தப் பெண்ணின் உடல் இல்லை.

"இந்தாங்கம்மா...!" பீட்டர் 'டார்ச்'சைக் கொடுக்க, விஜயா வாங்கிக் கொண்டாள்.

மனசுக்குள் பயம் பிறாண்டியது.

'எங்கே போயிருக்கும் அந்த உடல்...?'

'வீடு பூட்டியிருந்த சமயத்தில் யாராவது பின்பக்கமாய் வந்து எடுத்துக் கொண்டு போய் இருப்பார்களோ...?'

'ஒரு வேளை இப்படியிருக்குமோ...? அந்தப் பெண்ணை நான் பித்தளை பூச்சாடியால் அடித்தபோது மயக்கம் போட்டு விழுந்தாள். அந்த மயக்கத்தில் அவள் உணர்வில்லாமல் கிடந்தபோது அவள் இறந்துவிட்டதாக நினைத்துவிட்டேனா? மயக்கம் தெளிந்ததும் எழுந்து போயிருப்பாளோ...?'

தொலைபேசி கூப்பிட்டது.



"போய் பாருங்கம்மா... யாருன்னு...! அநேகமா உங்க தோழி அபிநயாவாகத்தான் இருக்கும்..."

விஜயா ஒரு கையில் டார்ச்சோடு வேகவேகமாய் நடந்து அறையின் மூலையில் இருந்த தொலைபேசியைத் தொட்டு ரிசீவரை எடுத்தாள்.

"அலோ..." குரல் கொடுத்தாள்.

மறுமுனையில் அபிநயாவின் குரல் கேட்டது. "விஜயா! நான் அபிநயா பேசறேன். இப்போ நான் சொல்றதை மட்டும் கேளு. நீ பதிலுக்கு ஒரு வார்த்தைக்கூட பேசக்கூடாது. வீட்ல போலீஸ் இருக்கலாம். நான் உங்கிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசணும். நான் ஒரு போன் நம்பர் தர்றேன். வீட்ல போலீஸ் யாரும் இல்லாத நேரத்துல எனக்கு நீ போன் பண்ணு. அந்த நம்பர்ல நான் இருப்பேன். நம்பரை சொல்றேன். மனசில் வாங்கிக்க எழுதுற வேலை வேண்டாம்... அந்த போன் நம்பர் இதுதான். 2755679. இது திருவனந்தபுரம் நம்பர். ஞாபகம் இருக்கட்டும் விஜயா. போலீஸ் வீட்ல இல்லாத போது எனக்கு போன் பண்ணு...!"

விஜயா மவுனமாக இருக்க மறுமுனையில் அபிநயா தொடர்ந்தாள்.

"இப்போ போன் பண்ணினது யாருன்னு போலீஸ் கேட்டா ஏதோ ராங் நம்பர்ன்னு சொல்லிடு..."

"போன்ல யாரும்மா..."

"ராங் நம்பர்..."

"கொஞ்சம் மழை பெய்ஞ்சாலே இந்த டெலிபோனுக்கு முடக்கு வாதம் வந்துடும்.. நான் வெளியே போய் இருக்கேன்மா. நீங்க கொஞ்சம் ஓய்வெடுங்க."

பீட்டர் வெளியே போய்விட - விஜயா தளர்ந்து போய் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

'புதிது புதிதாய்ப் பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கின்றன! என்னிடம் அபிநயா என்ன விஷயம் சொல்லப் போகிறாள்?'

டெலிபோன் நம்பரை மறுபடியும் ஒரு தடவை மனசுக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். 2755679.

'பீட்டர் வெளியே இருந்தால் போன் பண்ணி பேசும்போது எப்படியும் குரல் கேட்டுவிடும்...'

விஜயா யோசித்துக் கொண்டிருக்கும்போதே காற்றில் அந்த சத்தம் கேட்டது 'க்க்ர்ர்ர்...'

'என்ன சத்தம் அது?'

நிமிர்ந்தாள்.

அறையின் இடதுபக்க மூலையில் இருந்த அந்த ஜன்னலின் கண்ணாடிக் கதவு மெதுவாய்த் திறந்து கொண்டிருந்தது. விஜயா திகைத்த விழிகளோடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே -

ஜன்னலின் கம்பிகளுக்கு பின்னால் ஒரு முகம் தெரிந்தது.

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், மழை லேசாய் பெய்கிற அந்த ராத்திரி வேளையில் மருத்துவமனை போய்ச் சேர்ந்தபோது டாக்டர் அவருக்காக காத்துக் கொண்டிருந்தார். வரவேற்றார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்."

"மோகனோட நிலைமை இப்போ எப்படி இருக்கு டாக்டர்?"

"அதே சீரியஸ் நிலைமைதான். ரத்த அழுத்தம், நாடித் துடிப்பு எதுவுமே சீராக இல்லை. எந்தநிமிடமும் எதுவும் நேரலாம் என்கிற சூழ்நிலை... அதுதான் உங்களுக்கு போன் பண்ணிச் சொன்னேன்."

"மோகன் சுயநினைவுக்கு வந்து ஏதோ பேசியதாகவும், அதைப் பதிவு பண்ணி வைச்சிருக்கிறதாகவும் சொன்னீங்க. மோகன் என்ன பேசினார்ங்கிறதைக் கேட்டுப் பார்க்கலாமா?"

"தாராளமா... வாங்க என்னோட அறைக்குப் போயிடலாம்." பார்த்திபனை தன்னுடைய அறைக்கு கூட்டிக் கொண்டு போய் உட்கார வைத்து மருத்துவர் டேப்ரிக்கார்டரின் பட்டனைத் தட்டினார்.

ஒலிநாடா ஓடியது.

பாட்டு பீறிட்டது.

"மலமல... மல்லே... மல்லே..."

பார்த்திபனின் நெற்றி சுருங்கியது. "என்ன டாக்டர் இது?"

"மன்னிக்கணும்... கேசட் மாறிடுச்சுன்னு நினைக்கிறேன்" சொன்னவர் டேப்ரிக்கார்டரின் வாயிலிருந்து அந்த கேசட்டை வெளியே எடுத்தார். மேசை டிராயில் வேறு கேசட் இருக்கிறதா என்று பார்த்தார்.

அந்த 'கேசட்' இல்லை.

அழைப்பு மணியைக் கோபமாய் தட்டினார். ஒரு நர்ஸ் கதவைத் திறந்து கொண்டு மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"டாக்டர்..."

"கீதாவை வரச்சொல்."

அந்த புதுமுக மருத்துவர் கீதா வந்தாள். டாக்டர் கேட்டார். மோகன் சுயநினைவுக்கு வந்து பேசியபோது அவரோட பேச்சை பதிவு பண்ணினோமே, அந்த கேசட் எங்கே?"

"அந்த கேசட் உங்ககிட்டதானே இருந்தது டாக்டர்?"

"இருந்தது... இப்ப இல்லையே! அந்த கேசட்டுக்கு பதிலா வேறு ஏதோ சினிமாப்பட கேசட் இருக்கு சினிமாப்பட கேசட் எப்படி இங்கு வந்தது?"

"எனக்குத் தெரியலை டாக்டர். ஒரு பிரசவ கேஸ் பார்த்துட்டு இருப்பத்தான் நான் வர்றேன்."

பார்த்திபன் அந்த சினிமா பாடல் பதிவாகி இருந்த கேசட்டை எடுத்துப் பார்த்தார்.



## 10

"டாக்டர்! இது உங்க கேசட் கிடையாதா?"

"கிடையாது... சினிமா பாட்டு கேசட்டை நான் வாங்கறது கிடையாது."

"மோகனின் பேச்சு பதிவாகி இருந்த கேசட்டை டேப்ரிக்கார்டரிலேயே போட்டு வைச்சிருந்தீங்களா?

"ஆமா... உங்களுக்கு போன் பண்ணிட்டு உள் நோயாளிகளைப் பார்க்கிறதுக்காக போயிட்டு வந்தேன். அந்த சமயத்துல யாரோ என்னுடைய அறைக்குள் நுழைந்து மோகனின் பேச்சு பதிவாகி இருந்த கேசட்டை எடுத்துட்டு இந்த சினிமா கேசட்டைப் போட்டிருக்காங்க."

"நீங்க வெளியே போகும்போது உங்க அறையைப் பூட்டி வைக்கமாட்டீங்களா?"

"நான் வெளியூர் போக நேர்ந்தால் மட்டுமே என் அறையைப் பூட்டறது வழக்கம். மத்த நாட்களில் திறந்துதான் இருக்கும்."

"என்ன டாக்டர்.. வாக்குமூலம் கொடுக்கப்பட்ட ஒரு முக்கியமான கேசட்டைப் பத்திரமா வைக்கக்க வேண்டாமா?"

"சாரி இன்ஸ்பெக்டர்! கேசட் விஷயத்துல கொஞ்சம் அலட்சியமா இருந்துட்டேன்."

"சரி. கேசட்ல மோகன் என்ன சொல்லி இருந்தார்?"

"எதுவும் புரியற மாதிரி இல்லை இன்ஸ்பெக்டர். ஒரு குடிகாரன் பேசற மாதிரி குழறிக்குழறிப் பேசினார்."

"ஒரு வார்த்தைகூடப் புரியலையா?"

"புரியலை"

அதுவரைக்கும் ஒன்று பேசாமல் மவுனமாய் நின்றிருந்த கீதா இப்போது வாயைத் திறந்தாள்.

"சார்... மோகன் சுயநினைவுக்கு வந்து பேசும்போது பக்கத்தில் நானும் இருந்தேன். மோகன் பேசியதுல பல வார்த்தைகள் புரியலைன்னாலும் எனக்கு ஒரே ஒரு வார்த்தை மட்டும் தெளிவா புரிஞ்சுது சார்."

பார்த்திபன் அவளிடம் திரும்பினார்.

"என்ன வார்த்தை அது?"

"ரோஜா சார்.."

"என்னது... ரோஜாவா?"

"ஆமா சார்... அவர் சுயநினைவுக்கு வந்து பேசும்போது நிறைய வார்த்தைகளைத் துண்டு துண்டா பேசினார். அதுல இந்த 'ரோஜா' வார்த்தையை மட்டும் ரெண்டு தடவை தெளிவா பேசினார்."

பார்த்திபன் குழப்பமாய் தாடையைத் தடவிக் கொண்டு யோசித்தார்.

"மோகனுக்கும் இந்த 'ரோஜா' என்கிற வார்த்தைக்கும் என்ன சம்பந்தம்?

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் ஒரு குழப்பப் பார்வையோடு டாக்டர் மகாலிங்கத்தை ஏறிட்டார்.

"டாக்டர்..."

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்."

"மோகனுக்கு இனி சுய உணர்வு திரும்புமா? திரும்பாதா?"

"சொல்ல முடியாது. நாடித் துடிப்பும், இதயத் துடிப்பும் அதல பாதாளத்துல இருந்தாலும் திடீர்ன்னு சிலருக்கு சுய உணர்வு வரும்... தெளிவா பேசக்கூட செய்வாங்க... நீங்க எதுக்கும் மோகனுக்குப் பக்கத்துல இருங்க."

"டாக்டர்! உங்க மருத்துவமனை வளாகத்துக்குள்ளேயே மோகனோட எதிரி இருக்கணும்..."

"எப்படி சொல்றீங்க?"

"இல்லேன்னா மோகனோட பேச்சைப் பதிவு பண்ணின கேசட் காணாம போயிருக்காதே."

பார்த்திபன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மேசையின் மேல் இருந்த இண்டர்காம் முணுமுணுப்பாய்க் கூப்பிட்டது. டாக்டர் மகாலிங்கம் ரிசீவரை எடுத்தார்.

"எஸ்..."

நர்ஸ் பேசினாள். "டாக்டர்... 8 ஆம் நம்பர் அறையில் இருக்கிற நோயாளிக்கு மறுபடியும் மாரடைப்பு. நீங்க வர்றீங்களா டாக்டர்?"

"எதனால்?"

"தெரியலை டாக்டர்.... புத்தகம் படிச்சிருந்தார். நான் அறைக்கு வெளியே நின்னுட்டிருந்தேன். திடீர்ன்னு ஏதோ சத்தம் கேட்டது. உள்ளே போய்ப் பார்க்கும் போது கீழே விழுந்திருந்தார்."

"உடனே ஐ.சி. வார்டுக்கு கொண்டு போக ஏற்பாடு பண்ணு! வந்துடுறேன்" டாக்டர் மகாலிங்கம் ரிசீவரை வைத்துவிட்டு பார்த்திபனிடம் திரும்பினார்.

"இன்ஸ்பெக்டர்! 8 ஆம் நம்பர் வார்டுல ஒரு நோயாளிக்கு மாரடைப்பு. நான் போய் பார்த்துட்டு வந்துடுறேன். நீங்க மோகனுக்குப் பக்கத்துல இருங்க!

டாக்டர் புறப்பட்டுப் போய்விட பார்த்திபன் ஒரு பெருமூச்சோடு எழுந்தார்.

"மோகன் சொன்ன அந்த 'ரோஜா' வார்த்தை என்ன பொருள்?'

'ஏதாவது சங்கேத வார்த்தையா?'

மோகனுக்கு மறுபடியும் சுய உணர்வு வந்து பேசினால்தான் உண்டு. ஒருவேளை மோகனின் மனைவி அபிநயாவுக்கு இந்த 'ரோஜா' வார்த்தைக்கு அர்த்தம் தெரிந்து இருக்குமோ?

யோசித்துக் கொண்டே மோகன் இருந்த அறை நோக்கி நடைபோட்ட பார்த்திபனை பின் பக்கம் எழுந்த அந்த 'சார்'



என்ற குரல் நிறுத்தியது. பெண் குரல். திரும்பினார்.

நர்ஸ் நின்றிருந்தாள். சற்று முன் டாக்டருடன் பேசிய அதே நர்ஸ்.

"என்ன சிஸ்டர்?"

அந்த நர்ஸ் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு பார்த்திபனிடம் குரலைத் தாழ்த்தினாள்.

"சார்! உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்."

"என்ன... சொல்லுங்க சிஸ்டர்."

"அந்த கேசட் காணாம போன விஷயத்துல எனக்கு ஒருத்தர் மேல் சந்தேகம் சார்..."

"யார் அது?"

"டாக்டர்."

பார்த்திபன் திகைத்தார். "டாக்டரா...?"

"ஆமா!"

"எப்படி அவர் மேல் சந்தேகம்?"

"நீங்க இந்த மருத்துவமனைக்கு வர்றதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி டாக்டர் இந்த அறையில் உட்கார்ந்து வேறு சில கேசட்டுகளை டேப்ரிக்கார்டரில் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் பார்த்ததும் பார்க்காதது மாதிரி போயிட்டேன். அது மட்டும் இல்லை சார்... மோகன் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மோகனின் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாத நிலைமையில் தான் அவருடைய உடல் நிலை இருந்தது. அவருடைய நாடித்துடிப்பும் சரி, இதயத் துடிப்பும் சரி, சீராகவே இருந்தது. திடீர்ன்னு ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி இருந்து தான் மோகனின் உடல் நிலை மோசமான நிலைமைக்குப் போயிற்று."

பார்த்திபன் பதற்றமானார்.

"மோகனின் உடல் நிலை திடீர்ன்னு மோசமானதுக்கு டாக்டர் மகாலிங்கம்தான் காரணம்னு சொல்லவர்றீங்களா சிஸ்டர்?"

"ஆமா."

"எப்படி?"

"இந்த ஊசி மருந்தைப் பார்த்தீங்களா?" சொன்ன நர்ஸ் தன் சீருடையில் மறைத்து வைத்திருந்த அந்த உடைபட்ட சிறிய புட்டியை எடுத்துக் காட்டினாள்.

"சார். இதுல இருந்தது வெளிநாட்டு மருந்து. ஆபரேஷன் செய்யப்படும் நிலைமையில் இருக்கும் நோயாளிகளுக்கு இந்த மருந்தை போடக்கூடாது. ஆனால் டாக்டர் இந்த மருந்தை ஊசி மூலம் மோகனுக்கு போட்டிருக்கார்."

"நீங்க பார்த்தீங்களா?"

"பார்த்தேன்...! டாக்டர் அந்த ஊசியைப் போட்டுட்டு அந்த

உடைபட்ட புட்டியை ஜன்னலைத் திறந்து தோட்டத்துப் பக்கம் போட்டார். அப்படி அவர் போட்டதால் தான் எனக்கு சந்தேகம் வந்தது. நைசா தோட்டத்துப் பக்கம் போய் தேடிப் பார்த்தேன். கிடைச்சது. மருந்தோட பெயரைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி. 'ஆப்ரேஷன் பண்ண வேண்டிய நிலைமையில் இருக்கும் மோகனுக்கு இந்த ஊசி மருந்தை போடக்கூடாதே! ஏன் போட்டார்' என்று யோசித்தேன்..."

பார்த்திபன் தன் தாடையைத் தேய்த்துக் கொண்டே கேட்டார். "டாக்டர் மகாலிங்கத்துக்கு மோகன் மேல் என்ன கோபம்? மோகன் இறந்துட்டா அவருக்கு அது எந்த விதத்தில் லாபம்?"

"அதைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியாது சார் என் மனசுக்கு உறுத்தலாகப்பட்ட விசயங்களை உங்ககிட்டே சொல்லிட்டேன். டாக்டர் கிட்டே நான் வேலை பார்க்கிற காரணத்துக்காக அவர் பண்ண தப்புகளைக் கண்டுக்காமல் போக என்னால் முடியாது. டாக்டர் மகாலிங்கம் திறமைசாலி. கடந்த ஐந்து ஆண்டா அவர்கிட்டே வேலை பார்க்கிறேன். மருத்துவம் பார்க்கிற விஷயத்தில் அவர்கிட்டே இதுவரைக்கும் எந்த தடுமாற்றமும் இருந்தது இல்லை. ஆனால் மோகன் விஷயத்தில் அவர் தடுமாறியிருக்கார். அதுக்கான காரணம் எனக்குத் தெரியாது. நீங்க டாக்டரை இது சம்பந்தமா விசாரிக்கும்போது என்னோட பெயர் வெளியே வரக்கூடாது..."

"நீங்க கவலைப்படாதீங்க சிஸ்டர்... உங்க பெயர் வெளியே வராத அளவுக்கு நான் பார்த்துக்கிறேன்... அந்த ஊசி மருந்தோட புட்டியைத் தாரீங்களா...?"

நர்ச கொடுத்துவிட்டு சொன்னாள். "டாக்டர்கிட்டே விசாரணை நடத்தினா மட்டும் போததாது சார். மோகனை உடனடியாய் நீங்க வேறு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் சிகிச்சை கொடுக்கணும். இல்லேன்னா மோகனை உயிரோடு பார்க்க முடியாது..."

"வேற எந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம்? நீங்களே சொல்லுங்க சிஸ்டர்...!"

"பத்மனாபபுரத்தில் ஒரு மருத்துவமனை இருக்கு அங்கே கொண்டு போயிட்டா மோகனுக்கு நல்ல சிகிச்சை கிடைக்கும்... அங்கே இருக்கிற டாக்டர்கள் எல்லோரும் மருத்துவப் பணியை புனிதமாய் நினைக்கிறவங்க...!"

"போன் நம்பர் சொல்லுங்க..." சொன்ன பார்த்திபன் தன் செல்போனை எடுத்துக் கொள்ள, நர்ச அந்த மருத்துவமனையின் தொலைபேசி எண்களைச் சொன்னாள். பார்த்திபன் எண்களைத் தட்டிவிட்டு பேசினார்.

"அரசு மருத்துவமனையிலிருந்து இன்ஸ்பெக்டர் பார்த்திபன் பேசறேன்... இங்கே இருக்கிற ஒரு நோயாளியை



உடனடியா உங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரணும். ரொம்ப அவசரம்... உங்க ஆம்புலன்சை அனுப்பி வைக்க முடியுமா...?"

"உடனே அனுப்பி வைக்கிறோம். நோயாளியின் பெயர் என்ன...?"

"மோகன்..."

"அவருக்கு உடம்புக்கு என்ன...?"

"விஷ ஊசி போடப்பட்டத்தில் சுய உணர்வு இன்றி இருக்கிறார்... தலையில் ரத்தக் காயமும் உள்ளது..."

"ஆம்புலன்ஸ் வேண்பத்து நிமிடத்தில் வந்துவிடும். நோயாளியை தயாராய் வைத்துக் கொண்டு காத்தி இருக்கவும்...!"

"நன்றி" சொல்லிவிட்டு செல்போனை அணைத்தார் பார்த்திபன். நர்சை ஏறிட்டார்.

"சிஸ்டர்...! இனி உங்க வேலையை இயல்பாய் பார்த்துட்டிருங்க... நான் டாக்டர் மகாலிங்கத்தை கொஞ்சம் உரசிப் பார்த்துட்டு வர்றேன்...!"

"சார்...! என்னோட பேர்...?"

"வெளியே வராது... பயப்படாதீங்க..." சொன்ன பார்த்திபன், ஐ.சி. வார்டு இருந்த திசை நோக்கி மெல்ல நடை போட்டாரு. இரண்டு நிமிட நடைக்குப்பின் ஐ.சி. வார்டு வந்தது.

நுழைவு வாசலில் ஒரு நர்சு நின்றிருக்க கேட்டார், "டாக்டர் உள்ளே இருக்காரா...?"

"எந்த டாக்டரைக் கேட்கிறீங்க...?"

"மகாலிங்கம்..."

"அவர் இங்கே வரலையே...?"

"எட்டாம் நம்பர் அறையில் இருந்த நோயாளி ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதா ஒரு நர்சு, டாக்டருக்கு இண்டர்காமில் தகவல் கொடுத்தா. டாக்டர் மகாலிங்கம் உடனே ஐ.சி. வார்டுக்கு புறப்பட்டு வந்தாரே...?"

அந்த நர்ச இப்போது திகைத்தாள்.

"எட்டாம் நம்பர் அறையில் இருந்த நோயாளிக்கு மாரடைப்பா? யார் சார் சொன்னது...? அதோ... அந்த நோயாளி வராந்தாவில் 'வாக்கிங்' போய்க்கிட்டிருக்கார்..."

பார்த்திபன் திகைத்தார்.

அதே விநாடி...

விஜயா, ஜன்னல் கம்பிகளுக்கு வெளியே தெரிந்த அந்த முகத்தைப் பார்த்துவிட்டு உறைந்து போய் மெல்ல எழுந்தாள்.

"யாரது...?"

"ஆண் முகமா... பெண் முகமா...?"

உற்றுப் பார்த்தாள். இருட்டில் பிடிபடவில்லை. 'கொஞ்சம் நகர்ந்து பக்கத்தில் போய்ப் பார்க்கலாமா?' யோசித்த விநாடி, ஜன்னலில் இருந்த முகம் காணாமல் போயிற்று.

விஜயா பதற்றமானாள்.

'வெளியே பாதுகாப்புக்காக இருக்கும் காவலர் பீட்டரிடம், இதை முதலில் சொல்ல வேண்டும்!'

வாசல் கதவுக்கு ஓடி தாழ்ப்பாளை விலக்கினாள் விஜயா. கதவுகளைத் திறந்தபடி பலமாய்க் கத்தினாள்.

"சார்...!"

பதிலுக்கு அவர் குரல் கேட்காமல் போகவே மறுபடியும் வயிறு எக்கிக் கத்தினாள்.

"பீட்டர் சார்...!"

பீட்டரிடமிருந்து ஒரு சின்ன சத்தம்கூட இல்லை.

"எங்கே போனார் இவர்...?"

விஜயா வெளியே வந்தாள். கெட்டியான இருட்டில் மெல்ல நடந்தாள். பத்தடி நடந்து இருப்பாள். கால்களுக்கு எதுவோ தட்டுப்பட்டு இடறி விழுந்தாள்.

"த்தடட...!"

'எதன் மீது இடறி விழுந்தோம்?'

இருட்டில் உற்றுப் பார்த்தாள்.

பீட்டரின் உடல் மல்லாந்து கிடந்தது.

11

காவலர் பீட்டரின் உடல் மல்லாந்து கிடக்க, விஜயா பதற்றமாய் அவருடைய உடம்பைத் தடவி உசுப்பினாள். கைகளில் எதுவோ ஒட்டிக் கொண்ட மாதிரி பிசுபிசுத்தது. விஜயா கைகளை உயர்த்திப் பார்த்தாள் அந்த அரையிருட்டிலும் தெரிந்தது உலர்ந்தும் உலராத ரத்தம்.

'உயிர் இருக்கிறதா...?' இதயத்துடிப்பு உச்சத்துக்குப் போக, விஜயா பீட்டரின் நாசித்துவாரங்களுக்குப் பக்கத்தில் தன் புறங்கையைக் கொண்டு போய் வைத்தாள்.

மூச்சு நின்று போயிருந்தது.

விஜயா உறைந்துபோய் திகிலோடு எழுந்தாள். ஜன்னலில் பார்த்த அந்த உருவம் இனி என்னையும் விட்டு வைக்காது. முதலில் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்...! இனி ஒரு நிமிஷம்கூட இந்த வீட்டில் இருக்கக் கூடாது...!' விஜயா யோசித்துக் கொண்டிருக்கும்போதே தொலைபேசி அலறித் துடித்தது.

'போய் எடுக்கலாமா...? வேண்டாமா...?'

'வேண்டாம்...! இனி வீட்டுக்குள் போவது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம்...!"

விஜயா வேகவேகமாய் வாசற்படி இறங்கி, தூறிக்



கொண்டிருந்த மழையில் ஓட்டமும் நடையுமாய் நடக்கத் தொடங்கினாள்.

'யாராவது பின்தொடர்ந்து வருகிறார்களா?'

யாரும் வரவில்லை.

நீண்ட நேர நடைக்குப் பின் காடு முடிந்து, நகர்ப் பகுதி வெளிச்சச் சிதறல்களோடு பார்வைக்க கிடைத்தது. ஒரு ஓட்டலை யொட்டிய இடத்தில் தொலைபேசியைப் பார்த்ததும் விஜயா நின்றாள்.

முதலில் அரசு மருத்துவமனையில் இருக்கும் இன்ஸ்பெக்டர் பார்த்திபனுக்கு போன் செய்து காவலர் பீட்டரின் மரணத்தைப் பற்றி சொல்ல வேண்டும்...!'

தொலைபேசி மையம் காலியாய் இருந்தது. விஜயா சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நிற்க, எதிர்க் கடையிலிருந்து அந்த நபர் குரல் கொடுத்தார்."

"போன் பண்ணணுமா?"

"ஆமா..."

"பண்ணிக்குங்கம்மா..."

விஜயா ரிசீவரைத் தொட்டு எடுத்த போது அபிநயாவின் ஞாபகம். கூடவே, அவள் கொடுத்த தொலைபேசி எண்ணும் நினைவுக்கு வந்தது.

'போலீஸ் இல்லாதபோது அந்த எண்ணுக்கு போன் பண்ணச் சொன்னாளே...?'

'முதலில் அவளுக்கு போன் பண்ணலாம்.'

டெலிபோன் எண்களை நினைவுக்குக் கொண்டு வந்தாள். '2755679' திருவனந்தபுரம் எஸ்.டி.டி. நம்பரை தெரிந்து கொண்டு எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் பத்தாவது விநாடி ரிசீவர் எடுக்கப்பட்டது.

"அலோ..."

"யாரு... அபிநயாவா...?"

"ஆமா..."

"அபி நான் விஜயா...!"

"உன்னோட போனுக்காகத்தான் காத்துக்கிட்டு இருக்கேன். போலீஸ் இப்போ வீட்ல இல்லையே...?"

"அபி... நான் இப்போ வீட்ல இருந்து பேசலை...! எஸ்.டி.டி. பூத்திலிருந்து பேசறேன்..."

"வீட்ல இப்ப யார் இருக்காங்க...?"

"யாரும் இல்லை... ஏதோ முக்கியமான விசயம் பேசணும்னு சொன்னியே... என்ன அது...?"

'சொல்றேன்...! உனக்குப் பக்கத்துல இப்ப யாரும் இல்லையே...?"

"இல்லை... நீ தைரியமா பேசலாம்..."

"விஜயா...! வீட்டுச்சாவி இப்போ உன்னோட கையில்

தானே இருக்கு...?"

"ஆமா...!"

"நீ போலீசுக்குத் தெரியாமல் உடனடியாக என் வீட்டுக்கு போகணும்..."

விஜயாவின் அடிவயிற்றில் கலக்கம் பற்றிக் கொண்டது. "வீட்டுக்கா... எதுக்கு...?"

"வீட்ல எனக்கு சொந்தமான ஒரு சின்ன சூட்கேஸ் இருக்கு. அதை எடுத்து உன்னோட பொறுப்பில் வைச்சுக்கணும். போலீசுக்கு அது தெரியக்கூடாது..."

"அ... அ.... அந்த சூட்கேஸ்ல என்ன இருக்கு...?"

"உன்னை நேர்ல பார்க்கும்போது சொல்றேன் விஜயா. இப்போதைக்கு போன்ல எதுவும் வேண்டாம்..."

"அபி...! உன்னோட வீட்டுக்கு போகவே எனக்கு பயமா இருக்கு... அங்கே நடக்கிற சம்பவங்கள் எதுவுமே சரியில்லை. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கூட....."

அபிநயா பதற்றமாய் குறுக்கிட்டாள். "விஜி! நீ தயவுபண்ணி ஏதாவது காரணம் சொல்லி வீட்டுக்குப் போகாமே இருந்துடாதே...! எனக்கு அந்த சூட்கேஸ் முக்கியம். என்னோட எதிர்கால வாழ்க்கையே அந்த சூட்கேசுக்குள்ளேதான் இருக்கு. போலீஸ் மறுபடியும் அந்த வீட்டை சோதனை போடுறதுக்கு முன் சூட்கேஸை நீ எடுத்து வெச்சுக்கணும்..."

"இதை நீ முன்னாடியே சொல்லி இருக்கலாமில்லையா?"

"நிலைமை சரியில்லைன்னு இப்பத்தானே தெரியுது?"

"சரி... அந்த சூட்கேசை வீட்ல எங்கே வெச்சிருக்கே? படுக்கை அறையிலா...?"

"இல்லை...!"

"பின்னே..."

"உனக்குப் பக்கத்துல இப்ப யாரும் இல்லையே விஜி?"

"இல்லை... சொல்லு...!"

மறுமுனையில் அபிநயா குரலைத் தாழ்த்தி கொண்டாள்.

"விஜி...! என்னோட வீட்ல சாமான்கள் போடும் அறை எங்கே இருக்குன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியும்...!"

அதுக்குள்ளே நிறைய தட்டுமுட்டு சாமான்கள் கிடக்கும். அந்த சாமான்களில் பழைய 'டிரங்' பெட்டிக்குள்ளே தலையணை ஒண்ணு இருக்கு. அந்தத் தலையணையைத்தான் நீ எடுக்கணும்."

"சூட்கேஸ்னுசொன்னே...?"

"பொறு... அவசரப்படாதே...! அந்த தலையணையோட வாயை கத்திரிக்கோலாலே வெட்டி எடு. உள்ளே பஞ்சுக்கு நடுவில் சின்னதா சூட்கேஸ் இருக்கும். அதை எடுத்து



உன்னோட பெட்டிக்குள்ளே வெச்சுக்க...."

விஜயாவுக்கு அந்தக் குளிரான மழை இரவில் வியர்த்தது.

"அபி...! இதை நீ முன்னாடியே சொல்லி இருந்தா நான் எடுத்து வெச்சிருப்பேனே... இப்போ உன்னோட வீட்டுக்குப்போகவே எனக்குப் பயமா இருக்கு..."

"எனக்காக இந்த ஒரே ஒரு தடவை மட்டும் தயவு செய்து போயிட்டு வந்துடு விஜி..."

"அபி... நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"நீ எதையும் சொல்லாதே... போலீஸ் ஏதாவது ஒருகாரணத்தைச் சொல்லி வீட்டை சீல்வைச்சுட்டாங்கன்னா பெரிய பிரச்சினையாயிடும்... உடனே கிளம்பிப் போ விஜி. அந்த சூட்கேசை எடுத்துகிட்டு வந்த பின்னாடி எனக்கு போன் பண்ணு."

அபிநயா மறுமுனையில் ரிசீவரை வைத்துவிட, விஜி தன் கையில் இருந்த ரிசீவரை வைக்கத் தோன்றாமல் அப்படியே நின்றாள்.

இதயத்தை பயம் அரித்தது.

'மறுபடியும் எப்படி அந்த வீட்டுக்குள் போவது?'

காவலர் பீட்டரை தீர்த்துக்கட்டிய அந்த உருவம் இன்னமும் அங்கேயே இருக்குமா... இல்லை வெளியேறி இருக்குமா?'

'துணிச்சலை வரவழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் அந்தப் பழைய தலையணையில் இருக்கும் சூட்கேசையும், என்னுடைய பொருட்களையும் எடுத்துக் கொண்டு வந்து விடலாமா?'

'டெலிபோன் பூத்' கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"என்னம்மா... பேசிட்டீங்களா... இல்லையா? ரிசீவரைக் கையில் வைச்சிகிட்டு யோசனை பண்ணிட்டிருந்தா எப்படி?" இளைஞனின் குரல் கேட்டு சுய உணர்வுக்கு வந்த விஜயா, ரிசீவரை வைத்துவிட்டு வெளியே வந்தாள். கம்ப்யூட்டர் காட்டிய கட்டணத் தொகையைக் கொடுத்துவிட்டு நடைபோட்டாள்.

இதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. அதுவரைக்கும் மனசுக்குள் இருந்த கொஞ்ச நஞ்ச துணிச்சலும் இப்போது காணாமல் போயிருந்தது. நடக்கும் போது கால்கள் பின்னல் போட்டன.

'போகாமல் திரும்பிப் போய்விடலாமா?'

"அபிநயா அவ்வளவு தூரம் சொல்லி இருக்கிறாள், அவளுடைய பேச்சை அலட்சியப்படுத்துவது சரியில்லை!"

'வீட்டுக்குள் ஓடிப்போய் - இரண்டே நிமிடத்தில் எடுத்துக் கொண்டு வந்துவிடலாம்...'

விஜயா மனசுக்குள் மறுபடியும் ஒரு கொத்து துணிச்சல் நுழைந்தது.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் விஜயா.

இருட்டில் பீட்டரின் உடல் மல்லாந்து கிடப்பது நிழல் உருவமாய் தெரிந்தது. உடலைக் கடந்து வீட்டுக் கதவுக்கு முன்பாய் வந்து நின்றாள். வெறுமனே சாத்தியிருந்த கதவை மெல்லத் தள்ளினாள் விஜயா.

"ப்... ப்ர்ர்ர்..." சத்தம் போட்டுக் கொண்டே கதவு பின்னால் போயிற்று.

உள்ளே தார்பூசிய தினுசில் இருட்டு.

## 12

விஜயா நடைபோட்டாள்.

வீட்டுக்குள் இருட்டு. அடி வயிற்றுக்குள் ஒரு பயக்குளிரை உண்டாக்கியிருந்தது. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். பொருள்கள் மங்கலாக பார்வைக்குக் கிடைக்க, எதன் மீதும் இடித்துக் கொள்ளாமல் மெதுவாய் நடந்து சமையலறைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

இருட்டு அதிகப்படியாய் தெரிந்தது.

"தீப்பெட்டியை எங்கே வைத்தோம்?" விஜயா யோசித்துக் கொண்டே போய் சமையலறைத் திட்டில் கைகளை வைத்து அளைந்து பார்த்தாள். கைகளுக்கு எது எதுவோ தட்டுப்பட்டது.

ஐந்து நிமிட நேரம் வியர்த்துக் கொண்டு போராடியதில் தீப்பெட்டி கிடைத்தது. அவசர அவசரமாய் ஒரு குச்சியை எடுத்து உரசினாள் விஜயா. தீக்குச்சியின் தலை சுர்ர்ரென்று எரிந்து சமையலறைக்குள் பரவியிருந்த இருட்டைக் கழுவியது. வெளிச்சம் அணைவதற்குள் அந்த அறையை நோக்கி வேகவேகமாய்ப் போனாள்.

அறையைநெருங்குவதற்குள் வெளிச்சம் அணைந்து போக, இரண்டாவது தீக்குச்சியை உரசினாள் விஜயா.

வெளிச்சம், அறையில் கிடந்த தட்டுமுட்டு சாமான்களை காட்டியது. உடைந்த நாற்காலி, காலி எண்ணெய் கேன்கள், ஒரு கயிற்றுச் சுருள்.

விஜயாவின் பார்வை பரபரவென்று அலைந்தது.

'அபிநயா சொன்ன அந்த பழைய 'டிரங்க்' பெட்டி எங்கே?'

மேலும் இரண்டு தீக்குச்சிகளை செலவழித்த பிறகுதான் குவித்து வைக்கப்பட்டிருந்த பழைய கோணிப் பைகளுக்குக் கீழே அந்த ட்ரங்குப் பெட்டி தெரிந்தது. அதை அவசர அவசரமாக திறந்தாள். அந்த 'தலையணை' இருப்பது பார்வைக்கு கிடைத்தது.

தலையணையை எடுத்தாள் விஜயா. எடுக்க எடுக்கவே கைகளில் எதுவோ ஊர்ந்து போன உணர்வு பயந்து போய் தலையணையை வீச அது எதிர் சுவரில் பட்டு விழுந்தது.

"டொம்ம்ம்..." விஜயா தன் மேல் ஊர்ந்த கரப்பான்



பூச்சிகளைத் தட்டியவள் அந்த 'ரொம்ம்ம்' சத்தத்தை கேட்டுத் திகைத்தாள்.

'சத்தம் வித்தியாசமாக இருக்கிறதே! வேறு ஏதோ விழுந்த சத்தம் மாதிரி கேட்டதே...'

விஜயா ஒரு தீக்குச்சியைக் கொளுத்திக் கொண்டு தலையணை விழுந்த இடத்தை நெருங்கி தடவி பார்த்தாள். சிமெண்டு நிறத்தில் அந்தத் தரை கொஞ்சம் வேறுபட்டுத் தெரிந்தது.

தட்டிப் பார்த்தாள். "டொம்ம்ம்..."

விஜயாவுக்கு புரிந்து போயிற்று. இது பலகை தரையோடு தரையாய் ஒரு கதவு மாதிரி பதிந்த பலகை. தன் இரண்டு கைகளாலும் பலகையின் பரப்பு முழுவதையும் தடவிப் பார்த்தாள் விஜயா. பலகையின் இடது பக்க மூலையில் சின்னதாய் ஒரு கைப்பிடி கிடைத்தது. அதைப் பிடித்துக் கொண்டு பலகையை மெல்லத் தூக்கினாள்.

உள்ளே ஒரு இருட்டுச் சதுரம். சுரங்கவழி மாதிரி தெரிந்தது.

விஜயா கைகள் நடுங்க தீக்குச்சியை உரசினாள் வெளிச்சம் பிறக்க அதை இருட்டுச் சதுரத்துக்குள் கொண்டு போனாள்.

உள்ளே -

மரப்படிக்கட்டுகள் வளைந்து போயிற்று.

விஜயாவுக்கு மூச்சை அடைத்தது.

அறைக்குக் கீழே ஒரு பாதாள அறை.

'இந்த வீட்டுக்குள் இத்தனை மர்மங்களா?'

'இப்போது என்ன செய்யலாம்?'

பலகையை மூடிவிட்டு - தலையணையை மட்டும் எடுத்துக் கொண்டு போய்விடலாமா? இல்லை... இந்த பாதாள அறைக்குள் இறங்கி என்ன இருக்கிறது என்று பார்க்கலாமா?'

விஜயா யோசித்தாள். இதயம் விலாத மேடையாய் மாறியது.

'இது உனக்குத் தேவையில்லாத விஷயம் விஜயா... அபிநயாவுக்கு உதவி பண்ணப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளாதே!'

கொஞ்சம் பொறு விஜயா.... இந்த வீட்டில் ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிறது. அது என்ன என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? பயந்து போய் பின் வாங்கினால் உண்மைகள் எப்படி வெளியே வரும்? அவலர் பீட்டரின் மரணத்துக்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?'

சில நிமிட யோசனைக்குப் பின் விஜயா தலையணையை ஓரமாய்த் தள்ளி வைத்துவிட்டு இருட்டு சதுரத்துக்குள் காலை வைத்து முதல் படிக்கட்டில் இறங்கினாள். இதயம் பந்தயக் குதிரையாய் மாறியது.

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் திகைத்தவராய் அந்த நர்ஸைப் பார்த்தார்.

"டாக்டர் மகாலிங்கம் தன் அறையில் இருந்த போது 'எட்டாம் நம்பர் அறை நோயாளிக்கு மாரடைப்பு'ன்னு இண்டர்காமில் தகவல் வந்தது. உடனே அவர் புறப்பட்டு வந்தார்."

நர்ஸ் கேட்டாள்.

"போன் பண்ணினது யார் சார்?"

"தெரியலை."

"எதுக்கும் ஆபரேஷன் தியேட்டர் பக்கம் போய் பாருங்க சார். டாக்டர் ஒருவேளை அங்கே இருக்கலாம்."

பார்த்திபன் குழப்ப மனதோடு ஆபரேஷன் தியேட்டர் இருந்த திசை நோக்கி வேகமாய் நடைபோடத் தொடங்கினார்.

'டாக்டர் மகாலிங்கத்திடம் ஏதோ தப்பு இருக்கு மோகனைத் தீர்த்துக்கட்ட டாக்டர் யாருக்கோ உதவு செய்திருக்கிறார். முதலில் டாக்டரை மடக்கி விசாரிக்க வேண்டும்.'

இரண்டு நிமிட நடையில் ஆபரேஷன் தியேட்டர் வந்தது. பார்த்திபன், தியேட்டர் கதவை மெல்லத் திறந்து உள்ளே எட்டிப் பார்க்க, இள வயது டாக்டர் ஒருவர் பார்வைக்குக் கிடைத்தார். பார்த்திபனைப் பார்த்ததும் எழுந்தார்.

"எஸ்..."

"டாக்டர் மகாலிங்கம் இங்கே வந்தாரா?"

"மகாலிங்கமா... அவர் வீட்டுக்கு புறப்பட்டு போயிட்டாரே."

"என்னது... வீட்டுக்கா?"

"ஆமா. இப்பத்தான் கிளம்பிப் போனார்."

"அவர்கிட்ட செல்போன் இருக்கா?"

"இருக்கே."

"நம்பர்..."

அந்த இள வயது டாக்டர் மகாலிங்கத்தின் செல் நம்பரைச் சொல்ல - பார்த்திபன் தன்னுடைய செல்லை எடுத்து எண்களைத் தட்டினார். மறுமுனையில் 'பீப்... பீப்' சத்தம். ஒரு பெண்ணின் பதிவு குரல் கேட்டது.

"இந்த எண்ணுடன் இப்போது நீங்கள் தொடர்பு கொள்ள முடியாது."

நான்கைந்து தடவை முயற்சி செய்து பார்த்தும் அதே குரல் கேட்கவே பார்த்திபன் எரிச்சலாய் செல்போனை அணைத்தார்.

'டாக்டர் மகாலிங்கம் வேண்டுமென்றே செல்போனை இப்படி வைத்து இருக்கிறார்.'

இளவயது டாக்டரிடம் பார்த்திபன் கேட்டார்.

"டாக்டர்! மகாலிங்கத்தின் வீடு எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமா?"



"காருண்யா நகர். ஐந்தாவது குறுக்குத் தெருவில் முதல் பங்களா."

"வீட்டுக்குப் போய் மடக்கிட வேண்டியதுதான்!"

"டாக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு பார்த்திபன் வராந்தாக்களைக் கடந்து மருத்துவமனைக்கு வெளியே வந்தார். போலீஸ் ஜீப்பில் ஏறி உட்கார்ந்தார். டிரைவரிடம் மகாலிங்கத்தின் முகவரியைச் சொல்ல ஜீப் வேகம் எடுத்தது.

பத்து நிமிடப் பயணம்.

காருண்யா நகர் வந்தது.

ஐந்தாவது குறுக்கு தெருவில் முதல் பங்களாவுக்கு முன்பாகப் போய் நின்றது. பார்த்திபன் இறங்கி - 'கேட்'டைத் திறந்து கொண்டு போனார். உள்ளே கார் ஒன்று நின்றிருந்தது. படியேறி அழைப்பு மணியை அழுத்தினார். சில வினாடிகளுக்குப் பின் கதவு திறந்தது. அந்த நடுத்தர வயதுப் பெண் நின்றிருந்தாள். பார்த்திபனின் போலீஸ் உடையைப் பார்த்ததும் லேசாய் முகம் மாறினாள்.

"யா... யார் வேணும்...?"

"டாக்டர் மகாலிங்கம் இருக்காரா?"

"அவர் இன்னும் மருத்துவமனையிலிருந்து வரலையே..."

"வீட்டுக்கு புறப்பட்டு வந்துவிட்டதா மருத்துவமனையில் இருந்த டாக்டர் சொன்னாரே?"

"அப்படீன்னா அவர் வந்துட்டிருக்கலாம்... என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்?"

"ஒரு விசாரணைக்காக. நீங்க அவருடைய மனைவியா?"

"ஆமா. உள்ளே வந்து உட்காருங்க. இப்ப அவர் வந்துடுவார்."

பார்த்திபன் உள்ளே போய் அங்கிருந்த சோபாவுக்கு சாய்ந்தார். டாக்டர் மகாலிங்கத்திற்காக காத்திருந்தார்.

பத்துநிமிடம்...

இருபது நிமிடம்...

முப்பது நிமிடம்...

நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. அவர் பதற்றப்பட்டுக் கொண்டிருந்த வினாடி -

போர்டிகோவில் கார் ஒன்று வேகமாய் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

பார்த்திபன் எட்டிப் பார்த்தார்.

மகாலிங்கம் இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தார்.

விஜயா அந்த சுரங்கப் பாதையின் படிக்கட்டுகளில் தீக்குச்சியின் வெளிச்சத்தில் கவனமாய் இறங்கிக் கொண்டிருந்தாள். முதல் சில படிகள் வரைக்கும் புழுக்கமாய் இருந்த சூழ்நிலை மாறி இப்போது காற்று வீசியது. லேசாய் வெளிச்சமும் இருந்தது.

'இங்கே மட்டும் எப்படி வெளிச்சம்?'

விஜயா ஆச்சரியப்பட்டுக் கொண்டே படிகளில் இறங்கி தரைப்பரப்புக்கு வந்தாள். ஏதோ ரெயில் பெட்டிக்குள் நுழைந்தது போன்ற உணர்வு. சுரங்கபாதையின் இரண்டு பக்க சுவர்களிலும் இரவு விளக்கு பொருத்தப்பட்டு மங்கலான வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது.

பத்தடி நடந்திருப்பாள் விஜயா. பாதையை அடைத்துக் கொண்டு அந்த அறை குறுக்கிட்டது. அறைக் கதவில் பெரிய பூட்டு. இழுத்துப் பார்த்தாள் பழங்கால பூட்டு.

'இந்த சுரங்கப் பாதையில் வேறு ஏதாவது வழி இருக்கிறதா?'

விஜயா சுற்றும் முற்றும் பார்த்தபடி நின்றிருக்க அவளுடைய மூக்கை அந்த வாசனை தொட்டது.

'என்ன வாசனை?'

'மூச்சை இழுத்து சுவாசித்தாள் விஜயா.

வாசனை பிடிபட்டது.

சிகரெட் வாசனை.

'யாரோ சிகரெட் பிடிக்கிறார்கள்?'

விஜயாவின் இதயம் உறைந்தது.

## 13

விஜயா, மூச்சை இழுத்துப் பிடித்துப் நுரையீரல்கள் வலிக்க சுவாசித்துப் பார்த்தாள்.

'சிகரெட் வாசனைதான்! சந்தேகமேயில்லை. யாரோ சிகரெட் பிடிக்கிறார்கள். யார்?'

விஜயா அந்த பாதாள அறைக்குள் நின்று கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் பார்வைக்குக் கிடைக்கவில்லை. சிகரெட் புகையின் வாசனை, விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டு போவதைப் போன்ற உணர்வு.

'பாதாள அறையைவிட்டு வெளியேறிப் போய்விடலாமா?'

'அதுதான் சரி.'

விஜயா யோசித்து நகர முயன்ற விநாடி அவளுடைய பார்வை பாதாள அறையின் வலது பக்க மூலைக்குப் போயிற்று. மூலையில் கொட்டியிருந்த இருட்டில் சிவப்பாய் ஒரு வெளிச்சப் புள்ளி தெரிந்தது.

'என்ன அது?'

ஒரு விநாடி மிரண்டு போன விஜயா பின் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அந்த சிவப்பு வெளிச்சப் புள்ளியை நோக்கிப் போனாள். பக்கத்தில் போனதும் மெல்ல குனிந்து பார்த்தாள்.

சரியாய் அணைக்கப்படாத ஒரு துண்டு சிகரெட் அது.

'நான் இங்கே வருவதற்கு முன்னால் யாரே வந்துவிட்டு போயிருக்கிறார்கள்...?'

'வந்தது யார்?'



விஜயாவின் உள் மனசு கோபப்பட்டது. 'இது உனக்கு வேண்டாத ஆராய்ச்சி! இந்த அறையில் நீ இருக்கிற ஒவ்வொரு நிமிடமும் உன்னுடைய உயிருக்கு உத்திரவாதம் இல்லாத நிமிடங்கள்! அபிநயா கேட்ட அந்த சூட்கேசை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு ஊருக்குப் போய் சேருவதுதான் உனக்கு நல்லது.'

விஜயா மெல்ல பின்வாங்கி மாடிப்படிகளுக்கு வந்தாள். வெளிச்சமும், இருட்டும் மாறி மாறி விழுந்திருந்த மாடிப்படிகளில் தடுமாற்றமாய் ஏற பொருட்கள் வைக்கும் அறைக்கு வெளியே தலையை நீட்டினாள். மரப்பலகையை பழையபடியே சாத்தியவள் அதன் மேல் பொருட்களை வைதது மறைத்துவிட்டு அபிநயா சொல்லியிருந்தபடி தலையணைப் பிரித்து உள்ளிருந்த சூட்கேசை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

இருட்டு மறுபடியும் கண்களைக் கட்டியது. நிதான நடை நடந்து முன்னறைக்கு வந்து சோபாவுக்குப் பின்னால் இருந்த தன்னுடைய சூட்கேசை எடுத்தவள். விறுவிறுவென்று வெளி வாசலை நோக்கி நடந்தாள். கதவைத் தாண்டினாள். காவலர் பீட்டரின் உடல் இன்னமும் இருட்டில் மல்லாந்த நிலையில் தெரிந்தது.

பீட்டர் இறந்ததை முதலில் இன்ஸ்பெக்டர் பார்த்திபனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

காம்பவுண்டு கேட்டைக் கடந்து தெருவுக்கு வந்தாள். மழைநின்று போயிருந்தாலும் காற்றில் நீர்த்துளிகள் சிதறிக்கொண்டிருந்தன. வலது கையில் தன்னுடைய சூட்கேசையும், இடது கையில் அபிநயாவின் சிறிய சூட்கேசையும் எடுத்துக் கொண்டு நடைபோட்டாள்.

'ஆட்டோ ஏதாவது கிடைத்தால் பரவாயில்லை.'

'இந்த இரண்டு சூட்கேஸ்களையும் தூக்கிக் கொண்டு மூன்று கிலோ மீட்டர் தூரம் நடக்க முடியாது.'

விஜயா யோசித்தபடியே நடந்து கொண்டிருக்க, பின் பக்கமாய் ஏதோ ஒரு வாகனத்தின் வெளிச்சம் கொத்தாய் விழுந்தது.

திரும்பிப் பார்த்தாள்.

ஜீப் மாதிரி தெரிந்தது.

'நிறுத்தி 'லிப்ட்' கேட்கலாமா?'

சாலையின் மையத்துக்குப் போய் நின்று கை காட்டினாள். வாகனத்தின் வேகம் குறைந்து விஜயாவுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. அது ஒரு ஜீப்தான். உள்ளே போலீஸ்.

உள்ளே இருந்த இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"யாரம்மா நீ? இந்த இருட்டுல எங்கே போயிட்டிருக்கே?"

"ஆட்டோ பிடிச்சுக்க வேண்டியது தானே... ரெண்டு தெரு

தள்ளிப் போனா நேசமணி நகர் ஆட்டோ ஸ்டாண்டு இருக்கே... எப்ப போனாலும் ஆட்டோ கிடைக்கும்."

"நான் இந்தப் பகுதிக்குப் புதுசு."

"நீ டவுன்ல எங்கே போகணும்?"

"ஏதாவது ஓட்டலுக்கு."

"ஏறி உட்காரும்மா... உன்னை ஓட்டல்ல இறக்கி விட்டுட்டுப் போறோம்."

"ரொம்ப நன்றி சார்" விஜயா ஏறி உட்கார்ந்ததும் ஜீப் புறப்பட்டது.

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இங்கு யாரைப் பார்க்க வந்தேம்மா?"

"என் தோழி ஒருத்தியை."

"பேரு?"

"அபிநயா."

"ஓ... என்ஜினீயர் மோகனோட மனைவியா?"

"ஆமா."

"அவங்ககிட்ட கார் இருக்குமே...?"

"அவங்க ரெண்டு பேருமே வீட்ல இல்லை... வெளியே போயிருக்காங்க..."

"வீடு பூட்டியிருக்கா?"

"ஆ... ஆமா... அதுதான் இன்னிக்கு ராத்திரி ஓட்டலில் தங்கிக்கலாம்ன்னு..."

"உனக்கு எந்த ஊரும்மா... சென்னையா?"

"இல்ல... கோயமுத்தூர்...

"உனக்கு கல்யாணமாயிடுச்சாம்மா...?"

"இல்ல..."

"இன்னிக்கு ராத்திரி கல்யாணம் பண்ணிக்கிறியாம்மா?"

விஜயா, அந்த இன்ஸ்பெக்டரை திகைப்பாய் பார்த்தாள். அவர் சிரித்தார். "உனக்கு வயது எப்படியும் இருபத்தி ரெண்டுக்கு மேல் தான் இருக்கும்... அழகாக வேற இருக்கே... கல்யாணத்தை தாமதம் பண்றது சரியில்லையே. இன்னிக்கு ராத்திரி நான் ஏற்பாடு பண்ணட்டுமா? நான் பண்ணி வைக்கிற கல்யாணத்தில் என்ன ஒரு வித்தியாசம்ன்னா முதலில் சாந்தி முகூர்த்தம் அப்புறம் முகூர்த்தம்...!"

விஜயா பயத்தில் முகம் வெளிறிப் போய்க் கத்தினாள். "ஜீப்பை நிறுத்துங்க...!"

ஜீப் இன்னமும் வேகமாய்ப் போயிற்று.

**போர்**டிகோவில் வந்து நின்ற காரிலிருந்து இறங்கி உள்ளே வந்த டாக்டர் மகாலிங்கத்தைப் பார்த்த இன்ஸ்பெக்டர் பார்த்திபன், சோபாவில் இருந்து மெல்ல எழுந்து நின்றார்.

மகாலிங்கம், வியப்பான குரலில் கேட்டார்.



"என்ன... இன்ஸ்பெக்டர்... என்னோட வீடுவரைக்கும் வந்துட்டீங்க...?"

"உங்க கிட்டே ஒரு சின்ன விசாரணை நடத்த வேண்டியிருக்கு..."

"மருத்துவமனையிலேயே நடத்தியிருக்கலாமே...?"

"இப்பத்தானே சில உண்மைகள் தெரிஞ்சது...?"

"என்ன உண்மைகள்...?"

"என்ஜினீயர் மோகன் வாக்குமூலத்தை பதிவு பண்ணின கேஸட்டை நீங்களெனக்கு போட்டுக்காட்டாம மறைச்சுட்டீங்க... அந்த கேஸட்டை வேற யாருக்கோ கொடுத்துட்டீங்க...?"

"இதுமட்டும்தானா... இல்லை... இன்னும் வேற ஏதாவது குற்றச்சாட்டு இருக்கா?"

"இருக்கு...!"

"சொல்லுங்க..."

"என்ஜினியர் மோகன் உங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருடைய உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாத வகையில்தான் அவரின் உடல் நிலை இருந்தது. அவருடைய நாடித்துடிப்பும் சரி... இதயத் துடிப்பும் சரி... சீராகவே இருந்தன. பிறகு திடீர்ன்னு மோகனின் உடல்நிலை மோசமான நிலைமைக்குப் போயிற்று. அதற்குக் காரணம் நீங்க போட்ட ஒரு ஊசிதான். அந்த ஊசி மருந்தை இவருக்குப் போடக்கூடாது ஆனா நீங்க போட்டிருக்கீங்க...?"

டாக்டர் மகாலிங்கம் முகத்தில் எந்த சலனமும் இல்லாமல் கேட்டார்.

"இதையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது இன்ஸ்பெக்டர்...?"

"அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். மோகனுக்கு அந்த ஊசியைப் போட்டீங்களா இல்லையா...?"

"போட்டேன்...!"

"எதுக்காகப் போட்டீங்க...?"

"547 பேரோட உயிர்களைக் காப்பாத்தறதுக்கு எனக்கு வேற வழி தெரியலை..."

பார்த்திபனின் நெற்றி, சுருக்கத்துக்கு உட்பட்டது. "என்ன சொன்னீங்க...? 547 பேரோட உயிர்களைக் காப்பத்தவா...?"

"ஆமா...! நீங்க என்னைப் பார்க்க வர்றதுக்கு முன்னாடி ரெண்டு பேர் மருத்துவமனையில் இருக்கிற என்னுடைய அறைக்கு வந்தாங்க. உட்கார்ந்தாங்க. ரெண்டு பேர்கிட்டேயும் ரிமோட் கண்ட்ரோல் இருந்தது."

"டாக்டர்... நாங்க சொல்றபடி நீங்க நடந்துக்கலைன்னா இந்த ரிமோட் கண்ட்ரோல்களை நாங்க இயக்க வேண்டியிருக்கும். பட்டன்களை தட்டினா போதும் - பத்தே விநாடியில் ஆஸ்பத்திரி மொத்தமும் தரைமட்டமாகி இங்கு

இருக்கிற அத்தனை பேரும் வெடி குண்டுகளுக்குப் பலியாக வேண்டியிருக்கும். இந்த ஆஸ்பத்திரியில் மொத்தம் நாலு இடங்களில் வெடிகுண்டுகளை பொருத்திட்டுதான் உங்க அறைக்கு வந்து இருக்கோம். நாங்க சொல்றதுல நம்பிக்கை இல்லைன்னா நீங்களே நேரிடையா வந்து வெடிகுண்டு களைப் பார்க்கலாம். அவங்க இப்படி பேசினதும் அரண்டு போயிட்டேன். ஆஸ்பத்திரியில் டாக்டர்கள், நர்சுகள், நோயாளிகளும் சேர்ந்து மொத்தம் 547 பேர் இருந்தோம்..."

பார்த்திபன் திகைக்க - டாக்டர் மகாலிங்கம் தொடர்ந்தார்.

"அவங்க பேச்சில் நம்பிக்கை இல்லாமே அந்த வெடி குண்டுகளையும் பார்த்துட்டு வந்தேன். நான் சாதுரியமாவும் பேசிப் பார்த்தேன். அவங்க என் பேச்சைக் கேட்கலை... எந்த விநாடியும் அவங்க ரிமோட் கண்ட்ரோலை அழுத்தக்கூடிய மன நிலையில் இருந்தாங்க. அதனால் 547 பேரோட உயிர்களைக் காப்பத்தறதுக்காக மோகனுக்கு அந்த ஊசியைப் போட்டேன். ஊசி மருந்தையும் அவங்களே வாங்கிட்டு வந்ததாலே அதையே போட வேண்டியதாயிடுச்சு. ஒரு டாக்டர் அப்படி செய்யக் கூடாதுதான். ஆனா ஒரு உயிரைக் காப்பாத்த நினைச்சிருந்தா பெரிய அழிவை சந்திக்க வேண்டியிருக்கும்."

"மோகனின் வாக்குமூல கேசட்டையும் அவங்ககிட்டே கொடுத்துட்டீங்களா?"

"வேற வழி...?"

"சரி... இத்தனை நேரமா எங்கே போயிருந்தீங்க டாக்டர்...? நீங்க மருத்துவமனையிலேயே இல்லையே...?"

"அந்த பேர்வழிகள்தான் டெலிபோன்ல மறுபடியும் என்னைக் கூப்பிட்டு மருத்துவமனைக்கு பின்பக்கமா வரச்சொன்னாங்க. போனேன்..."

"எதுக்காக...?"

"மோகனின், உடல்நிலை தொடர்ந்து மோசமாயிட்டே இருக்கணும். அவனைக் காப்பாத்த நினைக்கக் கூடாதுன்னு மிரட்டினாங்க..."

"நீங்க சொல்ற அந்த் ரெண்டு பேரும் எப்படி இருந்தாங்கன்னு சொல்லமுடியுமா...?"

"ஏதோ அதிகாரிகள் மாதிரி இருந்தாங்க... அவங்களைப் பார்த்தா குற்றவாளிகள் மாதிரி தெரியலை..."

"அந்த ஊசி போட்டதால மோகனோட உயிருக்கு ஆபத்து ஏற்படுமா...?"

"விடிகிறவரைக்கும் நேரம் இருக்கு இன்ஸ்பெக்டர். மோகனைக் காப்பாத்திடலாம்..."

"மோகனை வேற மருத்துவமனைக்கு கொண்டு போக நான் ஏற்பாடு பண்ணியிருக்கேன்."



"வேண்டாம் மிஸ்டர் பார்த்திபன்... மோகன் நம்ம பாதுகாப்பில் இருப்பதுதான் நல்லது... 'மோகன் - அபிநயா' இவர்களுக்கு பின்னால் மிகப்பெரிய விவகாரம் ஏதோ இருக்கு. மோகன் வாக்குமூலத்தில் சொன்ன அந்த 'ரோஜா' வார்த்தையில் ஒரு பயங்கரம் ஒளிந்திருக்கிறது. அதைப் பொழுது விடிவதற்குள் நீங்கள் கண்டுபிடித்தாகவேண்டும். இல்லாவிட்டால் மிகப் பெரிய பிரச்சினைகளை நீங்களும் சரி, நானும் சரி, சந்திக்க வேண்டியிருக்கும்."

இன்ஸ்பெக்டர் பார்த்திபனின் மனதுக்குள் ஒரு பய நண்டு மெல்ல ஊர்ந்தது.

## 14

சாலையில் தேங்கி நின்ற மழை நீரை வாரி இறைத்துக் கொண்டு, ஜீப் இறக்கை கட்டிக் கொண்ட மாதிரி பறக்க, விஜயா விழிகள் விரிய அதிர்ந்து போய் அந்த இன்ஸ்பெக்டரையே பார்த்தாள்.

"என்ன விஜயா...! அப்படிப் பார்க்கிறே... நான் சொல்றதை நீ கேட்கலைன்னா உனக்கு இன்னிக்கு ராத்திரி கட்டாய சாந்தி முகூர்த்தம் நடக்கும். உனக்கு எது வசதி.... சாந்தி முகூர்த்தம் வெச்சுக்கலாமா... இல்ல நான் சொல்றதை கேட்கிறியா...?"

விஜயா, முகம் வெளுத்துப் போய் தொண்டையில் எச்சிலை அவஸ்தையாய் விழுங்கினாள்.

"நா... நான்... எ... என்ன... ப... ப.... பண்ணணும்?"

"உன்னோட தோழி அபிநயா இப்போ எங்கே இருக்கா....?"

"திருவனந்தபுரத்துல..."

"பார்த்தியா...! முதல் கேள்விக்கே தப்பா பதில் சொல்றியே...!"

"இல்ல... அவ திருவனந்தபுரத்துலதான் இருக்கா...!"

"அவ அங்கே இல்லை..."

"பின்னே...?"

"வேற எங்கேயோ இருக்கா... அவ எங்கே இருக்கான்னு, உனக்குத் தெரியும்...!"

"சத்தியமா எனக்குத் தெரியாது..."

"நீ இப்படியெல்லாம் கேட்டா பதில் சொல்லமாட்டே.... உன்கிட்டே இருந்து உண்மையை வரவழைக்கிறது எப்படின்னு எனக்கு நல்லாவே தெரியும்... டேய் பிலிப்ஸ்...! ஜீப்பை கொஞ்சம் வேகமாவே ஓட்டு...!"

"ஜீப் வேகத்தைக் கூட்டிக் கொண்டது. சவுக்குத் தோப்புக்குள் ஒழுங்கற்ற ஒரு மண்பாதை தெரிய முப்பு விளக்கு வெளிச்சத்தின் உதவியோடு ஜீப் பல கிலோ மீட்டர்களைக் கடந்து தன்னந்தனியாய் இருட்டில் உட்கார்ந்திருந்த அந்த பங்களாவுக்கு முன்பாய் நின்றது.

"ம்... இறங்கு..."

சூட்கேஸ்களோடு ஜீப்பிலிருந்து இறங்கினாள், விஜயா. சுற்றிலும் இருட்டு, பங்களாவுக்குள் மெலிதாய் வெளிச்சம்.

அது எந்த இடம் என்று தெரியவில்லை, பக்கத்தில் கடல் இருப்பதற்கு அறிகுறியாய் அலைகளின் சத்தம், பாம்பின் சீறலைப் போல் கேட்டுக் கொண்டிருந்தது.

"ம்... நட..." பின்னாலிருந்து யாரோ பிடித்துத்தள்ள, கையில் பெட்டியோடு விஜயா நடந்தாள். இன்ஸ்பெக்டர் சீருடையில் இருந்தவன், செல்போனில் பேசிக்கொண்டே வந்தான்.

"அவளைக் கொண்டு வந்துட்டோம்...!"

"........"

"தெரியாதுன்னு சொல்றா..."

"........"

"அபிநயா இருக்கிற இடம் அவளுக்குக் கண்டிப்பா தெரியும். உண்மையை வாங்கிடலாம். எத்தனை நேரத்துக்குத்தான் தெரியாதுன்னு அவளால சொல்ல முடியும்...? சரியா அரை மணி நேரம்... நானே உங்களுக்கு போன் பண்றேன்."

விஜயாவின் மனசுக்குள் பயம் ஒரு கல்லைப் போல் அடைத்துக் கொண்டது.

'அபிநயா, திருவனந்தபுரத்தில் இருக்கிறாள் என்று சொன்னால் இவர்கள் நிச்சயமாய் நம்பமாட்டார்கள்...!'

"வேறு என்ன பதிலைச் சொல்ல...?"

விஜயா யோசனையோடு நடந்து கொண்டிருக்க, அவளுடைய தோளைப் பின்னால் வந்தவன் தொட்டான்.

"இடது பக்கமா திரும்பு..."

திரும்பினாள்.

அரை இருட்டாய் ஒரு அறை. அறையின் நடுவே ஒரு நாற்காலி.

காதருகே குரல் கேட்டது.

"போய் அந்த நாற்காலியில் உட்கார்..."

விஜயா தயங்கிக் கொண்டே நிற்க குரல் மெல்ல சிரித்தது. "உனக்கு ஒரு நிமிசம் தர்றேன்... அதுக்குள்ளே உட்காரணும். இல்லேன்னா நாற்காலி இருக்கிற இந்த இடத்துக்கு கட்டில் வந்துடும். கட்டில் வந்துட்டா அதுக்கப்புறம் என்ன நடக்கும்ன்னு உனக்குத்தான் தெரியுமே...!"

விஜயா வேகவேகமாய் போய் நாற்காலியில் உட்கார்ந்தாள். அவன் பக்கத்தில் வந்தான்.

"விஜயா...! எனக்கு வேண்டியது உன்னோட உடம்பு கிடையாது. நீ உண்மைகளைச் சொல்லி ஒத்துழைப்பு கொடுத்தா உன் உடம்பு மேல என் மூச்சுக்காத்துகூட படாது. உண்மையைச் சொல்லலைன்னா உன் உடம்புல துணியும் இருக்காது; உயிரும் இருக்காது..."



விஜயா, வியர்த்துப் போய் கைகூப்பினாள்.

"நா... நான்தான் உண்மையை சொல்லிட்டேனே...!"

"அது போதாது! முக்கியமான ரெண்டு உண்மைகள் உன்கிட்ட இருக்கு. அதை வெளியே யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம்னு அபிநயா உன்கிட்ட சொல்லியிருக்கா."

"ரெ... ரெண்டு உண்மைகளா?"

"ஆமா. அபிநயா... இப்போ எங்கே எந்தஇடத்துல இருக்கான்னு உனக்கு நல்லாவே தெரியும்... அது எந்த இடம்னு நீ சொல்லியாகணும். ரெண்டாவது உண்மை, ரோஜா தோட்டம்..."

"ரோஜா தோட்டமா...?"

"புரியாத மாதிரி பாவனை பண்ணாதே! நீ கோயமுத்தூரிலிருந்து அபிநயாவைப் பார்க்க வந்ததே ரோஜா தோட்டத்தை வாங்கிட்டு போறதுக்காகத்தானே?"

விஜயா, கண்ணீரோடு கைகூப்பினாள்.

"நீங்க பேசறது எதுவுமே எனக்குப் புரியலை. அபிநயாவைப் பார்க்க வந்ததே அவள்கிட்டே பண உதவி கேட்கத்தான். என்னோட அக்காவுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. கல்யாணத்தை நடத்த ஒரு இலட்ச ரூபாயாவது வேணும். அபிநயா எனக்கு கல்லூரித் தோழி. கல்லூரி நாட்களிலேயே எனக்கு நிறைய பண உதவி பண்ணி இருக்கா. அந்த நம்பிக்கையில்தான் அபிநயா கிட்ட பணம் கேட்க வந்தேன்."

"இந்த கதையை நீ போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்திபன்கிட்டே சொல்லியிருக்கே. அவர் நம்பிட்டார். ஆனா நான் நம்பத் தயாராயில்லை. நீ அபிநயாவைப் பார்க்க வந்தது பண உதவி கேட்க அல்ல. ரோஜா தோட்டத்தை வாங்கிட்டுப் போகத்தான்."

"ரோ... ரோஜா தோட்டமா...? அது எங்கே இருக்கு? அதை எதுக்காக நான் வாங்கணும்?"

"அடேங்கப்பா! முகத்துல என்ன ஒரு நடிப்பு! இந்த அற்புத நடிப்புக்காகவே உனக்கு ஆஸ்கார் விருது தரலாம். இதோ பார் விஜயா! உன்னோட நடிப்பெல்லாம் என்கிட்ட எடுபடாது... ரோஜா தோட்டத்தைப் பற்றிக்கூட பின்னாடி பேசிக்கலாம். இப்ப எனக்கு வேண்டிய முக்கிய தகவல் அபிநயா எங்கே? எந்த ஊர்ல இருக்கா? எங்கே தங்கியிருக்கா?"

"அவள் திருவனந்தபுரத்துலதான் இருக்கா. போன்ல என்கூட பேசினா... போன் நம்பர்கூட கொடுத்தா. நானும் அந்த போன் நம்பருக்கு பேசினேன்."

அவன் கோணலாய்ச் சிரித்தான்.

"ஓ... அப்படியா! அபிநயா போன் நம்பர் கொடுத்தாளா... அது என்ன நம்பர்?"

விஜயா சில விநாடிகள் யோசித்துவிட்டு, தனக்கு அபிநயா

சொன்ன அந்த தொலைபேசி எண்களைச் சொன்னாள்.
"27555679."
"இது திருவனந்தபுரம் நம்பரா?"
"ஆமா... அபிநயா அப்படித்தான் சொன்னா!"
"நீயும் இந்த நம்பருக்குத்தான் போன் பண்ணி அவகிட்டே பேசினே?"
"ஆமா.."
அவன் தன் செல்போனை விஜயாவிடம் நீட்டினான். "இப்ப அந்த 2755679 நம்பருக்கு போன் பண்ணி அபிநயாகிட்டே பேசிப்பாரு... அவள் பேசினா போனை என்கிட்ட கொடு!"
விஜயா அவன் நீட்டிய செல்போனை தயக்கமாய் வாங்கி டயலில் எஸ்.டி.டி. எண்ணோடு 2755679 எண்களைத் தட்டிவிட்டு காதுக்குக் கொடுத்தாள். மறுமுனையில் சில விநாடிகள் மௌனம். பின், பதிவு செய்யப்பட்ட பெண் குரல் கேட்டது.
"இந்த தொலைபேசி எண் தற்சமயம் உபயோகத்தில் இல்லை."
விஜயா, முகம் மாறிப்போய் மறுபடியும் திருவனந்தபுரத்துக்குரிய எஸ்.டி.டி. எண்ணோடு சேர்த்து 2755679 எண்களைத் தட்ட மறுமுனையில் அதே பதிவு செய்யப்பட்ட குரல்.
"என்ன விஜயா... அபிநயா பேசினாளா?" கேட்டுக் கொண்டே விஜயாவின் கையில் இருந்த செல்போனை வாங்கி தன் காதுக்குக் கொடுத்தான் அவன். பதிவு செய்யப்பட்ட குரலைக் கேட்டுவிட்டுப் பலமாய் சிரித்தான்.
"அந்த டெலிபோன் நம்பரே உபயோகத்தில் இல்லையாமே! உபயோகத்தில் இல்லாத டெலிபோன் நம்பருக்கு நீ எப்படி பேசியிருக்க முடியும்?"
"நான் பேசினேன்."
"நீ பேசற பொய்களுக்கு அளவே இல்லை..."
"இல்லை... அபிநயா என்கிட்ட பேசினாள்... தன் கணவன் மோகனோட உடல் நிலையைப் பற்றி விசாரிச்சா..."
"அப்புறம்?"
"அவ்வளவுதான்."
"நீ வழிக்கு வரமாட்டே போலிருக்கே... உன்னை சுத்தமா வெளியே அனுப்பணும்னு பார்த்தா அதுக்கு நீ தயார் இல்லைன்னு தெரியுது" சொன்னவன் பின் பக்கம் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தான்.
"பரசு..."
ஒல்லியாய், கறுப்பாய் ஒரு ஆள் எட்டிப் பார்த்தான்.
"பொண்ணு, சாந்திமுகூர்த்தத்துக்கு தயார். வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணு."



"வே... வே... வேண்டாம்" வீறிட்டாள் விஜயா.
"வேண்டாம்னா... எனக்கு உண்மை வேணும்... உன்னோட பொய்க் கதைகளையும், கட்டுக்கதைகளையும் நம்ப நான் தயாரில்லை..."
விஜயா தத்தளித்தாள்.
"நான் சொன்னது பொய்யில்லை... அத்தனையும் உண்மை!"
"நீ சொன்னது உண்மையாய் இருந்திருந்தால் அந்த டெலிபோன் நம்பர் சரியாக இருக்கணுமே..."
"அதுதான் எனக்குப் புரியலை."
"எனக்கு நல்லாவே புரியுது. அபிநயா ஒளிஞ்சுகிட்டு கண்ணாமூச்சி ஆட்டம் காட்டுறா... நீயும் எனக்கு முன்னாடி அந்த விளையாட்டை விளையாடிக்கிட்டு இருக்கே!"
"இல்லை."
"பரசு..."
விஜயா பதற்றமானாள். "வே... வேண்டாம்..."
"அப்ப... உண்மை...?"
விஜயா வியர்த்து வழிந்தாள். பத்து விநாடி யோசித்து வேறு வழி இல்லாமல் அந்தப் பொய்யைச் சொன்னாள்.
"அபிநயா இருக்கிற இடம் எனக்குத் தெரியும்."

## 15

விஜயாவைப் பார்த்து அந்த போலி இன்ஸ்பெக்டர் சிரித்தான்.
"பார்த்தியா... கற்புக்கு கஷ்டம் வரும்போதுதான் உண்மையே வெளியே வரும் போலிருக்கு... அபிநயா இருக்குமிடம் உனக்குத் தெரியும்னு பூகம் பண்ணித்தானே இங்கே கொண்டு வந்திருக்கோம். உம்... சொல்லு. அவள் எங்கே இருக்கா?"
"இப்பவே உன்னை திருநெல்வேலிக்கு கார்ல கூட்டிட்டு போறோம். அங்கே போனதும் எந்தப் பகுதின்னு உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?"
"முடியும்."
"எப்படி முடியும்?"
"கார்ல போறப்ப சில அடையாளங்களைப் பார்த்தேன். ஒரு பெரிய நெசவு ஆலை வந்தது. அப்புறம் கோழிப் பண்ணைகள். ஒரு சின்னப் பாலம்... என்னைத் திருநெல்வேலிக்கு கூட்டிட்டுப் போனா அபிநயா இருக்கிற பகுதி எதுன்னு என்னால் கண்டு பிடிக்க முடியும்."
அவன் விஜயாவையே சில விநாடிகள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு செல்போனோடு அறையின் மூலையை நோக்கிப் போனான். செல்லை உயிர்ப்பித்து யாருடனோ பேசினான்.
"நான் பைரவ..."

"சொல்லு."

"அபிநயா, திருநெல்வேலியில் இருக்கிறதாக விஜயா சொல்றா!"

"முகவரி...?"

"எந்தப் பகுதின்னு தெரியலையாம். நேர்ல கூட்டிட்டுப் போங்க. அபிநயா இருக்கிற இடத்தைக் காட்டுகிறேன்'னு விஜயா சொல்றா."

"அவ அப்படி சொன்னதை உன்னால நம்ப முடியுதா?"

"அவ பொய் சொல்ற மாதிரி தெரியலை..."

"பைரவ்! அந்த நம்பிக்கை உனக்கு இருந்தால் நம்ம ஆட்கள் ரெண்டு பேரைக் கூட்டிகிட்டு கால கிளம்பு. போய் அந்த அபிநயாவை மடக்கு. காலையில் விடியும்போது ரோஜா தோட்டம் நம்ம கையில் இருக்கணும்."

"இருக்கும்."

"அப்புறம் ஒரு முக்கியமான விஷயம். ரோஜா தோட்டம் கைக்கு வந்ததும் விஜயா, அபிநயா ரெண்டு பேரையும் தீர்த்துக்கட்டி எரிச்சடணும். போலீசுக்கு அந்த ரெண்டு பேரோட சாம்பல்கூட கிடைக்கக் கூடாது. நாளைக்குக் காலையில் அபிநயாவோட கணவன் மோகனும் ஆஸ்பத்திரியில் உயிரோடு இருக்க மாட்டேன்."

"சரி... விஜயாவோடு நான் இப்போ திருநெல்வேலி கிளம்பறேன். தியாகு, பலராம் என்னோடு வரட்டும். வெள்ளை நிறக் காரை எடுத்துக்கிறேன்."

"பைரவ்... ஜாக்கிரதை! கார்ல போகும்போது கொஞ்சம் பாந்தமா ஆடை உடுத்திக்கிறது முக்கியம். செக்போஸ்டுகளில் போலீஸ் இருக்கலாம். அவங்க கேக்கிற கேள்விகளுக்கு எல்லாரும் ஒரே மாதிரியான பதிலைச் சொல்லணும்... விஜயாவை போலீஸ்கிட்டே பேசவிடக்கூடாது."

"இதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா என்ன?" பைரவ், செல்போனை அணைத்துவிட்டு விஜயாவிடம் வந்தான்.

"இதோ பார்... திருநெல்வேலிக்கு இப்பவே கிளம்பறோம். நீ கொஞ்சம் நல்ல சேலை கட்டிக்கணும். உன்னோட சூட்கேஸ் எங்கே?"

"ஜீப்ல இருக்கு."

"பலராம்..." பைரவ் குரல் கொடுக்க, அறைக்கு வெளியே நின்றிருந்த அந்த ஆள் எட்டிப் பார்த்தான்.

"ஜீப்ல விஜயாவோட சூட்கேஸ் இருக்கு. போய்க் கொண்டா."

பலராமின் தலை மறைந்தது.

விஜயாவின் மனசுக்குள் இப்போது ஒரு புதிய உதறல். 'என்னுடைய சூட்கேஸ் தவிர அபிநயாவின் சின்ன சூட்கேசும் இருக்கிறது. இவர்கள் பார்வையில் பட்டுவிட்டால், அதில் என்ன இருக்கிறது என்று கேட்பார்கள். அதைத் திறக்கவும் முயற்சி செய்வார்கள். அது என்னுடையது இல்லைன்னு சொன்னால் அது யாருடையது என்று கேட்பார்கள். அந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது?'



'இது அபிநயாவின் சூட்கேஸ்தான் என்கிற உண்மையைச் சொல்லிவிடலாமா?'

'வேண்டாம்! இந்த சூட்கேசில்தான் அவளுடைய எதிர்கால வாழ்க்கையே இருப்பதாக அபிநயா போனில் பேசும்போது சொன்னாள். அவளைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. என்னுடைய சூட்கேஸ்தான் என்று சொல்ல வேண்டும். சாவியைக் கேட்பாகள். தொலைந்து போய்விட்டது என்று சொல்லிவிட வேண்டியதுதான்.'

பலராம், விஜயாவின் சூட்கேசோடு அறைக்குள் நுழைந்து பைரவ்வுக்கு முன்பாய் இருந்த மேசையின் மேல் வைத்தான். பைரவ் கேட்டான். "விஜயாவோட சூட்கேசை சோதனை பண்ணிப் பார்த்தியா பலராம்?"

"இல்ல."

"மொதல்ல பாரு."

பலராம், சூட்கேசின் பூட்டுகளை விடுவித்துத் திறந்தான். உள்ளே அடைசலாகத் துணி மணிகள், சேலைகள், உள்ளாடைகள், ஒரு பாலிதீன் உறைக்குள் சோப்பு, பற்பசை, ப்வுடர் ஆகியவை தெரிந்தன. பலராம் எல்லாப் பொருள்களையும் கலைத்துப் பார்த்துக் கொண்டிருக்க, விஜயாவின் மனசுக்குள் இடியும் மின்னலுமாய் மழை பெய்து கொண்டிருந்தது.

அபிநயாவின் சின்ன சூட்கேசைக் காணோம்.

'எப்படி காணாமல் போயிருக்கும்?'

'இவர்களே அதை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு வேளை நாடகமாடுகிறார்களா?'

விஜயா குழம்பித் திகைத்துக் கொண்டிருக்க - பலராம், சூட்கேஸ் முழுவதையும் குடைந்துபார்த்துவிட்டு பைரவை ஏறிட்டான்.

"சூட்கேசுக்குள்ளே துணிமணி தவிர வேறு எதுவுமேயில்லை."

"சரி... நீயும், தியாகுவும் வெள்ளை நிறக் காரைத் தயார் பண்ணி வாசல்ல கொண்டுவந்து நிறுத்துங்க. இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே நாம திருநெல்வேலிக்கு புறப்படுறோம்..." சொன்ன பைரவ், விஜயாவிடம் திரும்பினான்.

"உனக்குப் பதினைஞ்சு நிமிசம் தாரேன்.. நல்லதா ஒரு சேலையைக் கட்டிக்க... சாப்பாடு வரும். சாப்டுட்டு தயாராயிடணும்..."

விஜயா பயமாய் தலையாட்டிவிட்டு சூட்கேசை நோக்கிப் போனாள். வேலைகள், உள்ளாடைகள், இறந்து கிடந்தன.

அபிநயாவின் அந்தச் சிறிய சூட்கேஸ் இல்லை.

'எங்கே போயிருக்கும்?'

'யார் எடுத்திருப்பார்கள்?'

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், துணை போலீஸ் கமிஷனருக்கு முன்பாய் ஒரு நேர்க்கோட்டைப் போல்நின்று அவர் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

"அபிநயாவின் வீட்டில் தனியாய் இருந்த விஜயாவுக்குப் பாதுகாப்பு கொடுக்கத்தானே கான்ஸ்டபிள் பீட்டர் அங்கே காவலுக்கு இருந்தார்?"

"ஆமா... சார்...?"

"பீட்டர் இப்போது கொலை செய்யப்பட்டிருக்கார். அதே சமயம் அபிநயாவின் வீட்டுக்குள் இருந்த விஜயாவையும் காணோம். ஒருவேளை அந்த விஜயாவே பீட்டர் சாவுக்குக் காரணமாக இருக்கலாமோ...?"

"நான் அப்படி நினைக்கலை சார்..."

"ஏன்...?"

"விஜயா, பீட்டரை கொலை பண்ணிட்டு ஓடிப்போக எந்தக் காரணமும் இல்லை..."

"அப்படன்னா விஜயா எங்கே...?"

"அவ கடத்தப்பட்டு இருக்கலாம்."

"எப்படிச் சொல்றீங்க...?"

"அபிநயா - மோகன் இந்த ரெண்டு பேருக்கும் தெரிஞ்ச ஒரு ரகசிய விஷயம் விஜயாவுக்கும் தெரிஞ்சிருக்கலாம்ன்னு யாரோ நினைச்சு விஜயாவைக் கடத்திட்டுப் போக வந்தவர்களால் கொலை செய்யப்பட்டிருக்கலாம்...!"

"அதுக்கான தடயங்கள் ஏதாவது கிடைச்சிருக்கா?"

"வீட்டைச் சுற்றிலும் சில காலடித் தடங்கள் கிடைச்சிருக்கு சார்... அதைப் பதிவு பண்ணி சோதனைக்கு அனுப்பியிருக்கோம்..."

"விஜயாவைக்கண்டுபிடிக்க உடனடியா என்ன நடவடிக்கை எடுத்திருக்கீங்க?"

"பஸ் நிலையத்தையும், ரெயில் நிலையத்தையும் கண்காணிக்க ஒருபடை அனுப்பப்பட்டிருக்கு சார்... அப்புறம் கன்னியாகுமரி எல்லை செக்போஸ்டில் எல்லா வாகனங்களையும் நிறுத்தி சோதனை போட, ஒரு படை நிறுத்தப்பட்டிருக்கு... இது தவிர ஒரு பறக்கும் படை எல்லா தங்கும் விடுதிகளிலும் அதிரடி சோதனையை நடத்திகிட்டு இருக்காங்க..."



"மோகனின் உடல் நிலை இப்போ எப்படியிருக்கு?"

"டாக்டர் மகாலிங்கம், மறுபடியும் சிகிச்சை எடுத்து ஒரு உயிர்காக்கும் மருந்தைக் கொடுத்ததில் மோகன் அபாயக் கட்டத்தை தாண்டிட்டார். மருத்துவமனைக்கு இப்போ பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கு... அந்நியர்கள் யாரையும் உள்ளே அனுமதிக்கிறதில்லை... டாக்டர் மகாலிங்கம், தன்னை மிரட்டின அந்த ரெண்டு பேரைப் பத்தின அடையாளங்களைத் தெளிவா சொல்லியிருக்கிறார். அவங்களைக் கண்டு பிடிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கு சார்..."

"இதோ பாருங்க பார்த்திபன்...! விஜயா, அபிநயா மோகன் இந்த மூணு பேருக்கும் பின்னாடி ஏதோ ஒரு விபரீத விஷயம் இருக்கு. மோகன் சொன்ன அந்த 'ரோஜா' என்கிற வார்த்தைக்கும், அந்த விபரீத விஷயத்துக்கும் தொடர்பு இருக்கலாம்... அதைக் கண்டுபிடிக்க நீங்க இன்னும் கொஞ்சம் தீவிர முயற்சி... எடுத்து..."

துணை போலீஸ் கமிஷனர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய மேசை மேல் இருந்த தொலைபேசி ஒலித்தது. அவர் கண்காட்ட, பார்த்திபன் ரிசீவரை எடுத்தார்.

"அலோ...!"

"போலீஸ் ஸ்டேஷன்...?" ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"ஆமா..."

"இன்ஸ்பெக்டர் பார்த்திபன் இருக்காரா?"

"நான் பார்த்திபன்தான் பேசுறேன்... நீங்க...?"

"சார்... நான் அபிநயா..."

## 16

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், பதற்றமடைந்து ரிசீவரில் குரல் கொடுத்தார்.

"அபிநயா... நீங்களா... இப்ப எங்கே இருந்துபேசுறீங்க...?"

"நாகர்கோவிலில இருந்து..."

"திருவனந்தபுரத்திலிருந்து எப்ப வந்தீங்க...?"

"வந்து பத்து நிமிசம்தான் ஆகுது. என்னோட வீட்டுக்குப் போக பயமாயிருந்தது. போன் பண்ணிப் பார்த்தேன். 'ரிங்' போயிட்டே இருந்தது. விஜயா இப்போ எங்கே இருக்கா சார்...?"

"கடந்த ரெண்டு மணி நேரமா விஜயாவைக் காணோம்..."

"விஜயாவைக் காணோமா...?"

"ஆமா..."

"அவ ஏதாவது ஓட்டல்ல தங்கியிருக்கலாம் சார்..."

"எல்லா ஓட்டல்களிலேயும் பார்த்துட்டோம். விஜயா எந்த ஓட்டல்லேயும் இல்லை..."

"சார்... விஜயாவுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம்னு நினைக்கிறேன்..."

"விஜயாவைப் பற்றி கவலைப்படாதீங்க அபிநயா... எப்படியும் கண்டு பிடிச்சுடுவோம்... இப்ப நீங்க எங்கே இருக்கீங்க...?"

"பஸ் நிலையத்துக்குப் பக்கத்துல இருக்கிற எஸ்.டி.டி. பூத்திலிருந்து பேசிட்டிருக்கேன் சார்... என்னோட கணவரைப் பார்க்கிறதுக்காக திருவனந்தபுரத்திலிருந்து கார் பிடிச்சுட்டு வந்தேன்...! அவர் இப்போ எப்படி இருக்கார் சார்...?"

"மோகன் இன்னமும் சுயநினைவு திரும்பாம அதே நிலைமையில்தான் இருக்கார். மோகன் உயிர் பிழைச்சிடக் கூடாதுன்னு யாரோ ரெண்டு பேர் ஒரு ஊசி மருந்தைக் கொண்டு வந்து டாக்டர் மகாலிங்கத்துகிட்டே கொடுத்து போடச் சொல்லி இருக்காங்க. டாக்டரும் ஆஸ்பத்திரியில் இருக்கிற மற்ற நோயாளிகளின் உயிர்களைக் காப்பாத்துறதுக்காக மோகனுக்கு அந்த ஊசியைப் போட்டிருக்கார்."

"அய்யய்யோ..."

"இருந்தாலும் பயப்படுறதுக்கு இல்லை... டாக்டர் மகாலிங்கம் மாற்று மருந்துகளைக் கொடுத்து மோகனோட உயிரைக் காப்பாத்திட்டார்."

"வந்த அந்த ரெண்டு பேர் யார் சார்?"

"தெரியலை... டாக்டர் சொன்ன அடையாளங்களை வச்சு தேடிக்கிட்டு இருக்கோம். அதோடு உங்க வீட்ல நடந்து இருக்கிற சம்பவங்களுக்கெல்லாம் யார் காரணம்? உங்க கணவருக்கு விஷ ஊசி போட்டு கொலை பண்ண முயற்சி செஞ்சவங்க... உங்க வீட்டுக்குக் காவல் இருந்த போலீஸ்காரர் பீட்டரைக் கொலை பண்ணினவங்க... இப்போ ரெண்டு மணி நேரமா விஜயாவைக் காணாதது. இதுக்கெல்லாம் என்ன காரணம் அபிநயா? வெளியே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு கும்பலுக்கும் உங்களுக்கும் என்ன பிரச்சனை?"

"சார்... அது... வந்து..."

"இனி மேலும் நீங்க தயக்கம் காட்ட வேண்டாம் அபிநயா. பிரச்சினை என்னான்னு சொல்லிடறது நல்லது! மோகன் சில நிமிஷ நேரம் சுயநினைவுக்கு வந்தபோது ஏதேதோ பேசினார். எதுவுமே புரியலை... ஆனா, 'ரோஜா' என்கிற ஒரு வார்த்தை மட்டும் புரிஞ்சது... அதென்ன ரோஜா?"

"சார், டெலிபோன்ல எதுவும் வேண்டாம். நான் எல்லாத்தையும் நேர்ல வந்து செல்றேன்."

"உடனே புறப்பட்டு போலீஸ் நிலையத்துக்கு வாங்க"



சொன்ன பார்த்திபன், ரிசீவரை வைத்துவிட்டு போலீஸ் துணை கமிஷனரைப் பார்த்தார்.

"சார்... அபிநயா வந்துகிட்டு இருக்காங்க. ரோஜா என்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரிஞ்சாலே இந்த வழக்குல இருக்கிற குழப்பமெல்லாம் ஓரளவுக்கு தெளிவாயிடும் சார்..."

இருவரும் அபிநயாவுக்காகக் காத்திருக்க தொடங்கினார்கள்.

நேரம் கரைந்து கொண்டிருந்ததே தவிர அபிநயா வருகிற மாதிரி தெரியவில்லை. முழுதாய் முப்பது நிமிடம் கழிந்த பின் துணை போலீஸ் கமிஷனர் சற்றே எரிட்டு பார்த்திபனைப் பார்த்தார்.

"அபிநயாவுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம்னு நினைக்கிறேன். அவ எங்கேயிருந்து உங்களுக்கு போன் பண்ணினா?"

"பஸ் நிலையத்துக்கு பக்கத்தில் இருக்கிற டெலிபோன் பூத்திலிருந்து சார்."

"போய்ப் பாருங்க! அங்கே இருந்து ஆட்டோ பிடிச்சு இங்கே வர பத்து நிமிடம் கூட ஆகாது. போன் பண்ணி அரை மணி நேரமாச்சு" துணை போலீஸ் கமிஷனர் சொல்ல பார்த்திபன், அவருக்கு 'சல்யூட்' ஒன்றை விநியோகித்துவிட்டு காவல் நிலையத்தைவிட்டு வெளியே வந்தார்.

மோட்டார் சைக்கிள் உதைபட்டது. கிளம்பியது.

ஐந்தே நிமிடம்! பஸ் நிலையம் வந்தது. நிசப்தமாக தெரிந்தது. பெய்த அடை மழையின் காரணமாக பயணிகள் கூட்டம் இல்லை. இரண்டு ஆட்டோக்கள் நின்றன. மின்சாரம் இல்லாததால் 'பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் டீக்கடை இயங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலேயே அவசர விளக்கில் வெளிச்சத்துடன் எஸ்.டி.டி. பூத்.

'அபிநயா அந்த பூத்திலிருந்துதான் போன் பண்ணி இருக்க வேண்டும்.'

மோட்டார் சைக்கிளை சாலை ஓரமாய் நிறுத்திவிட்டு பூத்தை நோக்கிப் போனார், பார்டன். மங்கலான வெளிச்சத்தில் ஒரு இளைஞன் உட்கார்ந்து பாக்கெட் ரேடியோவைத் திருகிக் கொண்டிருந்தான். "இப்போது நிரோத் இலவசமாய் கிடைக்கிறது... பிள்ளைப் பிறப்பைத் தள்ளிப்போட"

பார்த்திபனைப் பார்த்ததும் ரேடியோவை அணைத்துவிட்டு எழுந்தான், இளைஞன்.

"சார்..."

"எவ்வளவு நேரமா இந்த பூத்துல இருக்கே?"

"ஒரு மணி நேரமா சார்..."

"அரை மணி நேரத்துக்கு முன்னாடி ஒரு பெண், போன் பண்ணி போலீஸ் நிலையத்துக்குப் பேசினாளா?"

"இல்லையே சார்!"

"நல்லா யோசனை பண்ணிட்டாரு."

"சார்... ரெண்டு மணி நேரமா டெலிபோன் சரியில்லை. இப்பத்தான் அதுவும் பதினைந்து நிமிசமாத்தான் போன் வேலை செய்யுது. பத்து நிமிசத்துக்கு முந்தி ஒரு பெரியவர் போன் பண்ண வந்தார். அதுக்கப்புறம் யாரும் போன் பண்ண வரலை சார்..."

"பக்கத்துல வேற டெலிபோன் பூத் இருக்கா?"

"கொஞ்சம் தள்ளி இன்னும் ரெண்டு பூத் இருக்கு சார்... ஆனா, போன் சரியில்லாம இருந்ததால், அவங்க ஒருமணி நேரத்துக்கு முன்னாடியே பூட்டிட்டு போயிட்டாங்க."

"பார்த்திபன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நின்றார். அபிநயா பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பூத்திலிருந்து பேசுவதாகத்தானே சொன்னாள்?"

'அபிநயா சொன்னது பொய்யா?'

'இல்லை பூத் இளைஞன் சொல்வது பொய்யா?'

இருட்டில் கார் நின்றிருக்க, விஜயாவைத் தள்ளிக் கொண்டு, பைரவ், பலராம், தியாகு மூன்று பேரும் நடந்தார்கள்.

பைரவ், விஜயாவின் தோளைத் தொட்டான். "இதோ பார்... கார்ல பயணம் பண்ணும்போது உன்னோட புத்திசாலித் தனத்தையெல்லாம் மூட்டை கட்டி வைச்சுட்டு மண் உருண்டை மாதிரி உட்கார்ந்துட்டு வரணும். நீ தப்பிக்க முயற்சி பண்ணினா அதுக்கப்புறம் நாங்க உன்னை நடத்துற விதமே வேற மாதிரி இருக்கும். செக்போஸ்ட் வரும்போது நாங்க சொல்லுவோம். உடனே இந்த சீட்டுக்கு கீழே போயிடணும். நாங்க 'வெளியேவா'ன்னு சொன்னாத்தான் தலையை வெளியே நீட்டணும்..."

தலையாட்டிய விஜயாவை காரின் பின் இருக்கையின் நடுவில் உட்கார வைத்து, பக்கத்துக்கு ஒருவராக பைரவ்வும், தியாகுவும் உட்கார்ந்து கொள்ள பலராமன் டிரைவர் இருக்கைக்குப் போனான்.

கார் கிளம்பியது.

விஜயாவுக்கு இதயம் பூராவும் பயம் அடைத்து கொண்டது.

'இன்னும் இரண்டு மணி நேரத்துக்குள் கார் திருநெல்வேலி போய்ச் சேர்ந்துவிடும். அபிநயாவை எப்படி காட்டுவது?'

'கார், திருநெல்வேலி போய்ச் சேருவதற்குள் வழியில் எப்படியாவது தப்பிவிட வேண்டும்.'

'தப்ப முடியுமா?'

'தடித்தடியாய் மூன்று பேர் இருக்கிறார்கள். இவர்களைத் தாக்கிவிட்டு தப்பித்துப் போவது என்பது முடியாத காரியம்!'

கார் முகப்பு விளக்குகளைப் பிரகாசமாய் எரியவிட்டுக்



கொண்டு விரைந்தது. பிரதான சாலைக்கு வந்ததும் மேலும் வேகம் பிடித்தது. பைரவ், சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு முதல் சுற்றுப் புகையை வெளியே விட்டபடி கேட்டான்.

"திருநெல்வேலியில் அபிநயா தனியா இருக்காளா? இல்லே அவள் கூட வேற யாராவது இருக்காங்களா?"

என்ன பதிலை சொல்வது என்று விஜயா மௌனிக்க, பைரவ் அவளைத் தொட்டான்.

"கேள்வி கேட்டது உன்கிட்டத்தான்... காதுல விழலையா...?"

"அபிநயா மட்டும்தான் தனியா இருக்கா. வேற யாரும் இல்லை..."

"அது யார் வீடு?"

"எனக்குத் தெரியாது."

"ரோஜாத் தோட்டம் இப்போ அபிநயா கிட்டதானே இருக்கு?"

"ஆமா."

"நீ யாருக்காக விலை பேச வந்தே?"

"கோயமுத்தூர்ல ஒரு ஆளுக்கு."

"பேரு?"

"பேர் எனக்குத் தெரியாது. பேச்சு வார்த்தை டெலிபோன்லேயே நடந்தது."

"அபிநயா உன்னை நேர்ல புறப்பட்டு வரச் சொன்னாளா?"

"ஆமா...!"

"ரோஜாத் தோட்டத்தை என்ன விலைக்கு பேசி முடிவு பண்ணியிருக்கே?"

"நான் விலை பேசலை... கோயமுத்தூர்கார ஆளும், அபிநயாவும் பேசி முடிவு பண்ணிக்கிட்டாங்க. எனக்கு கமிஷன் மட்டும்தான்!" விஜயாவுக்கு இப்போதும் பொய் சரளமாய் பேச வந்தது.

இவர்களை முதலில் நம்ப வைக்க வேண்டும். பிறகு தான் தப்பிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்...!

பைரவ், சிகரெட்டை முழுவதுமாய் புகைத்துவிட்டு, சாய்ந்து உட்கார்ந்தான். அதே நேரம் காரின் வேகம் குறைந்தது.

"என்ன பலராம்...?"

"பாலம் பழுதடைந்து விட்டதால் மாற்றுப் பாதையில் போகவும்ன்னு போர்டு போட்டிருக்கு...!

"போக வேண்டியதுதானே...?"

"மண்ணு ரோடுதான். சேறும் சகதியுமா இருக்கு... கார் மாட்டிக்குமோன்னு பயமாயிருக்கு...!

"இதென்ன மாட்டுவண்டியா... மாட்டிக்கிறதுக்கு...? விடு...

சொல்றேன்... எத்தனை கார் இதுல போயிருக்கு."

"நம்ம கார் எஞ்சின் சரியில்லை. அதான் யோசனை பண்றேன்."

"உனக்கு எப்பவும் துணிச்சல் பத்தாது. நீ பின்னாடி வந்து உட்காரு... காரை நான் ஓட்றேன்... ஓட்ற மாதிரி ஓட்டினா பாலைவனத்துல கூட ஓட்டலாம்..."

பலராம், காரை நிறுத்திவிட்டு பின் இருக்கைக்கு வர பைரவ் முன்னால் போனான்.

கார் நகர்ந்தது.

பாலத்தை ஒட்டி இடது பக்கமாய் பிரிந்து போன அந்த சேறு மண்டிய குறுகலான சாலையில் கார் உறுமிக் கொண்டே போயிற்று. பின் பக்கம் புகை தள்ளியது.

பாதி தூரம் வரைக்கும் மூச்சைப் பிடித்துக் கொண்டு வந்த கார் பிறகு சட்டென்று ஒரு விநாடியில் 'கக்... கக்...' என்று இருமிவிட்டு நின்றுவிட்டது.

முகப்பு விளக்குகளும் உடனே அணைந்து போக எல்லாப் பக்கமும் இருட்டு.

பலராமும், தியாகுவும் கீழே இறங்கினார்கள். விஜயா வெளியே எட்டிப் பார்த்தாள்.

சாலையை யொட்டி இருட்டான தென்னந்தோப்பு ஒன்று தெரிந்தது.

"தப்பிக்க இதுதான் சரியான இடம்...!"

விஜயா தயாரானாள்.

## 17

விஜயா, அந்த இருள் சூழ்ந்த தென்னந் தோப்பை மறுபடியும் பார்த்தாள். உள்ளே நுழைந்துவிட்டால் கண்டுபிடிப்பது கஷ்டம். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் மரங்கள் அடர்த்தியாய் தெரிந்தன.

விஜயா, காரின் டிரைவர் இருக்கையில் இருந்த பைரவை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே கதவின் கைப்பிடியில் கையை வைத்து சத்தம் எழாமல் திருகினாள்.

கதவு நெகிழ்ந்தது. மெல்ல தள்ளிப் பார்த்தாள். விலகியது.

பைரவ், இக்னீஷியனை கனைக்க வைத்துக் கொண்டே காரை பின்னாலிருந்து தள்ளிக் கொண்டிருந்த பலராமையும், தியாகுவையும் சத்தம் போட்டான்.

"நல்லாத் தள்ளுங்க... கார் பத்தடி வேகமா நகர்ந்தாதான் என்ஜின் வேலை செய்யும்...!"

"தள்ள முடியல்ல பைரவ்... காரோட பின் சக்கரம் இரண்டும் சேத்துல நல்லா மாட்டிகிச்சு..."

"மறுபடியும் பின்னாடி வரட்டுமா...?"

"வந்து பாரு..."



பைரவ் 'ரிவர்ஸ்' கியரைப் போட்டு காரைக் கிளப்ப முயன்ற விநாடி - கார் கதவைத் திறந்து கொண்டு ஒரு மின்னல் துணுக்காய் வெளியே பாய்ந்தாள் விஜயா.

பைரவ், சத்தம் கேட்டு திரும்பிப் பார்ப்பதற்குள் தென்னந்தோப்பைத் தொட்டு இருட்டுக்குள் காணாமல் போனாள் விஜயா. முகம் சிவந்து கழுத்து புடைக்கக் கத்தினான், பைரவ்.

"பலராம்... தியாகு...! அவ தப்பிச்சிட்டா... அவளைத் துரத்திப் பிடியுங்கள்..." சொல்லக் கொண்டே காரைவிட்டு இறங்கி பைரவ், தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அந்த அரையடி நீளக் கத்தியை எடுத்து கொண்டு விஜயாவை துரத்தத் தொடங்கினான்.

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், பஸ் நிலையத்துக்கு எதிரில் இருந்த தொலைபேசி மையத்தில் அபிநயாவைப் பற்றி விசாரித்துவிட்டு போனபிறகு - கைலியும் பனியனும் அணிந்த ஒருவர் நெருங்கினார். இடுப்பில் மறைத்து வைத்து இருந்த ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றை எடுத்து அங்கிருந்த இளைஞனிடம் கொடுத்தார்.

"இந்தா... இதுல ஐயாயிரம் ரூபாய் இருக்கு பார்த்தான்."

"எதுக்கு இந்த பணம்...?"

"இன்ஸ்பெக்டர்கிட்டே சொன்ன பொய்க்காகத்தான்."

"அதுக்குத்தான் ஒருத்தர் பணத்தைக் கொடுத்துட்டு போயிட்டாரே...! இனியும் எதுக்கு...?"

"பரவாயில்லை... வெச்சுக்கோ...!"

"வேண்டாம்...! இன்ஸ்பெக்டர் கிட்டே சொன்ன பொய்க்காக நானே உள்ளூர நடுங்கி செத்துகிட்டு இருக்கேன். இதுக்கு முந்தி வாங்கின பணத்தைக்கூட கோவில் உண்டியலில்தான் போடப்போறேன். எனக்குப் பணமும் வேண்டாம்... ஒண்ணும் வேண்டாம்... மொதல்ல இந்த இடத்தைவிட்டுப் போனாபோதும்..."

"இதுக்கு முந்தி ஒருத்தர் உனக்கு பணம் கொடுத்துட்டு போனதா சொன்னியே... அவர் எவ்வளவு கொடுத்தார்?"

"அதைப் பற்றி எதுவும் பேச வேண்டாம். மொதல்ல நீங்க இங்கேயிருந்து கிளம்புங்க... போலீஸ் மறுபடியும் வந்துடப் போகுது..."

அந்த நபர் சிரித்தார்.

"ஓ...! போலீஸ் மேல உனக்கு அவ்வளவு பயம் இருக்கா...!"

சிரித்த அந்த ஆளையே சந்தேகமாய்ப் பார்த்தான், இளைஞன். தொலைபேசியைத் தொட்டு ரிசீவரை எடுத்துக் கொண்டு அவர் எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டதும் பேசினார்.

"சார்...! நான் கான்ஸ்டபிள் வேலுச்சாமி...!"

பார்த்திபன், மறுமுனையில் குரல் கொடுத்தார்.

"என்னலே... மீன், வலையில விழுந்ததா?"

"விழுந்திடு சார்... நீங்க நினைச்சது மாதிரியே அவனுக்கு யாரோ பணத்தைக் கொடுத்து வாயை அடைச்சி இருக்காங்க. ஆனா பிடிச்சுக் கொண்டு வந்துடட்டுமா சார்...?"

"உடனே...!"

காவலர் வேலுச்சாமி, ரிசீவரை வைத்துவிட்டு இளைஞனைப் புன்னகையோடு பார்த்தார். அவன், அந்தக் குளிரான மழை பெய்கிற நேரத்திலும் வியர்த்து வழிந்து கொண்டிருந்தான்.

"இப்ப... நான் யாருன்னு உனக்குப் புரிஞ்சு இருக்கணுமே...?"

இளைஞன் வெடவெடப்பினான். "சார்! என்னை போலீஸ் நிலையத்துக்கெல்லாம் கூட்டிட்டு போகாதீங்க சார்... என்ன நடந்துச்சுங்கிற உண்மையைச் சொல்லிடுறேன் சார்..."

"சொல்லு..."

"நீங்க சொல்ற அந்தப் பொண்ணு அபிநயா, இங்கேயிருந்துதான் போனை பண்ணிச்சு சார். போனை பேசிட்டு வெளியே வந்த போது ஒரு வேன் வந்து நின்னுது. அதிலிருந்து ரெண்டு பேர் இறங்கி வந்தாங்க. அவங்க கையில துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியைக் காட்டி மிரட்டி, அபிநயாவை வேன்ல ஏறச் சொன்னாங்க...! அந்தப் பொண்ணும் பயந்து போய் வேன்ல ஏறிடுச்சு... வேன் கிளம்பிப் போன கொஞ்ச நேரத்துக்குள்ளே ஒரு ஆள் வந்து பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்தான். போலீஸ் வந்து யாராவதுகிட்டே அபிநயாவைப் பற்றி எதுவும் சொல்லக் கூடாதுன்னு மிரட்டிட்டு போனான். 'மீறி போலீஸ்ல சொன்னா இந்த இடத்துல டெலிபோன் பூத்து இருக்காது. நீயும் இருக்க மாட்டே'ன்னு மிரட்டினதால நான் பொய் சொல்ல வேண்டியதாயிடுச்சு சார். மற்றபடி அந்த அபிநயா யாரு, அவளைக் கடத்திட்டு போனவங்க யாரு... எதுக்காக கடத்திட்டு போனாங்க... இதெல்லாம் எனக்குத் தெரியாது சார்... நடந்த உண்மை இதுதான் சார்... என்னை எங்கும் கூட்டிகிட்டு போயிடாதீங்க சார்... அடுத்த மாசம் எனக்கு கல்யாணம் வைச்சிருக்கு!"

"இதோ பார்... குற்றவாளிகளைப் பற்றி தெரிஞ்சு இருந்தும் போலீஸ்ல சொல்லாமே இருக்கிறது பெரிய குற்றம். இன்ஸ்பெக்டர் வந்து உன்னை விசாரிச்ச போதே தைரியமா உண்மையைச் சொல்லி இருக்கலாம்..."

"தப்புதான் சார்..."

"சரி... இனிமேலாவது உண்மையைச் சொல்லு. வந்த அந்த ரெண்டு பேர்... பணம் கொடுத்த ஆள் இவங்களெல்லாம் எப்படி



இருந்தாங்க? அடையாளம் சொல்ல முடியுமா?"

"சுலபமா அடையாளம் கண்டு பிடிக்கிற மாதிரி அவங்க யாருமே இல்லை சார். மூணு பேருமே தலைக்கு குரங்கு குல்லாய் போட்டு முகத்தை முக்கால் வாசி மறைச்சி இருந்தாங்க. ஒரு நிமிச நேரம்கூட இல்லை. அந்தப் பொண்ணை கூட்டிட்டுப் போயிட்டாங்க. பணம் கொடுத்த ஆளும் அப்படித்தான். மிரட்டிட்டு உடனே போயிட்டான்."

"வேன் நம்பரை பார்த்தியா?"

"இல்லை... சார்... ஆனா...?"

"சொல்லு."

"வேனுக்கு பின்னாடி ஒரு அடையாளம் இருந்தது."

"என்ன அடையாளம்?"

"வேனின் பின்பக்கக் கண்ணாடியில ஒரு ரோஜாப்பூ வரையப்பட்டிருந்தது சார்..."

"ரோஜாப்பூவா?"

"ஆமா சார்... அந்த பூவுக்கு கீழே ஏதோ ஒரு வாசகம் கூட எழுதப்பட்டிருந்தது. ஆனா, இருட்டுல அதைப் படிக்க முடியலை..."

விஜயா, அந்த தென்னந்தோப்பின் இருட்டுக்குள் மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருந்தாள். கண்களுக்கு இப்போது இருட்டு பழகிக் கொள்ள, தோப்புக்குள் வழி தெரிந்தது.

செடிகள் மண்டிய ஒற்றையடிப் பாதை. எந்தப் பக்கமும் அதிக வெளிச்சம் இல்லை.

பின்னால் மூன்று பேர்களின் காலடிச் சத்தம் விடாப்பிடியாய் கேட்டுக் கொண்டிருந்தது. விநாடிக்கு விநாடி காலடிச் சத்தம் அதிகப்பட்டது.

எந்த விநாடியும் நெருங்கிவிடுவார்கள் போல் தோன்றவே விஜயா, ஓட்டத்தின் வேகத்தை அதிகப்படுத்தினாள். ஒரு இரண்டு நிமிடம் ஓடுவதற்குள் இதயத் துடிப்பு அதிகரித்து நுரையீரல்களும் அடிவயிறும் வலித்தது. 'இவ்வளவு வேகமாய் எவ்வளவு நேரத்துக்கு ஓட முடியும்?'

அங்கு ஒரு கிணறு இருந்தது. பக்கத்திலேயே சிமெண்டு கூரையால் மூடப்பட்ட மோட்டார் அறை தெரிந்தது.

'அந்த அறைக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்ளலாமா?'

விஜயா, அந்த அறையை நோக்கிப் போனாள். அறையைச் சுற்றிலும் புற்கள் மண்டிப் போயிருக்க அறைக்குப் பின்னால் போய் அப்படியே குத்துக்காலிட்டு உட்கார்ந்தாள், விஜயா.

அரை நிமிஷ நேரத்துக்குப்பின்

ஓடி வருபவர்கள் காலடிச் சத்தம் கேட்டது.

'வருகிறார்கள்..'

'கடவுளே! இந்தப் பக்கம் அவர்கள் வந்து விடக்கூடாது!'

"தப்... தப்... தப்... தப்..."

விஜயா, உடம்பை அசைக்காமல் தலையை மட்டும் திருப்பிப் பார்த்தாள்.

ஓடி வந்து கொண்டிருந்த மூன்று பேரும் நிழல் உருவங்களாய் தெரிந்தார்கள். காற்றில் பேச்சுக் குரல்கள்.

"இந்தப் பக்கமாய்த்தானே ஓடி வந்தா..."

"ஆமா..."

'வேறு பக்கம் வழியும் இல்லையே..."

"அதென்ன கிணறா?"

"அப்படித்தான் தெரியுது".

"ஒரு தீக்குச்சியைக் கொளுத்து."

சில விநாடிகள் மௌனத்துக்குப் பிறகு ஒரு தீக்குச்சி உரசப்பட்டு சின்னதாய் வெளிச்சப் பிழம்பு தோன்றியது. பத்தடி தொலைவுக்கு பரவியிருந்த இருட்டை விரட்டியடித்தது.

தீக்குச்சி அணைந்து போக, இன்னொரு குச்சி தலையில் நெருப்பு வைத்து கொண்டது.

"அந்தப் பக்கம் ஒரே புதரா இருக்கு..."

"நீ போய்ப் பாரு தியாகு... புதருக்குள்ளே ஒரு வேளை ஒளிஞ்சுகிட்டு இருக்கலாம்... பார்த்துட்டா ஒரு குரல் கொடு. நான் மறுபக்கமா போய்ப் பார்க்கிறேன்..."

மூன்று பேரும் திசைக்கு ஒருவராய் பிரிய - தீக்குச்சி வெளிச்சத்தோடு அந்த உருவம் புதரை நோக்கி வந்தது.

விஜயா அதிர்ந்து போனவளாய் மூச்சு விடாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

"சர்க்... சர்க்..."

புதர் பகுதிக்குள் நுழைந்தது உருவம்.

இரண்டாவது தீக்குச்சியும் காற்றில அணைந்து போக மூன்றாவது தீக்குச்சியை உரசியது உருவம். வெளிச்சம் ரவியது.

அவ்வளவுதான்...

## 18

தீக்குச்சி வெளிச்சம் மெல்ல மெல்ல பரவி தன்னை நோக்கி வந்து கொண்டிருக்க. கிணற்றையொட்டிய அந்தப் புதர் மறைவுக்குள் சத்தமின்றி கவிழ்ந்து படுத்துக் கொண்டாள் விஜயா.

காலடிச் சத்தங்கள் இதயத்தையே நசுக்குவதைப் போல் கேட்டுக் கொண்டிருந்தன. கூடவே பேச்சுக் குரல்கள்.

"அடடா...!"

"என்ன...?"



"தீப்பெட்டி கீழே விழுந்துடுச்சு...!"

"என்ன பலராம்... நீ... கவனமா வெச்சுக்க வேண்டாமா?"

"எப்படியோ கை நழுவிடுச்சு..."

"இந்தப் புதருக்குள்ளே விழுந்தா எப்படித் தேடி எடுக்கிறது... அப்படியே கீழே குனிஞ்சு உட்கார்ந்துரெண்டு கையாலேயும் துழவிப் பாரு!"

பைரவ் சொல்ல, பலராம் அப்படியே புதருக்குள் மண்டியிட்டு உட்கார்ந்து, இரண்டு கையாலும் தீப்பெட்டியைத் தேடிப் பார்த்தான்.

பைரவ், பலராம் இருவரும் தீப்பெட்டி தேடுவதில் மும்முரமாய் இருக்க, இருபதடி தள்ளி புதருக்குள் ஒதுங்கியிருந்த விஜயாவின் மூளை பரபரவென்று யோசித்தது.

'தீப்பெட்டி அவர்கள் கைக்கு கிடைத்தால் எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள்!'

'அது அவர்கள் கைக்குக் கிடைப்பதற்கு முன் இந்த இருட்டை உபயோகப்படுத்திக் கொண்டு மறுபடியும் தப்பித்துப் போய்விட வேண்டும்...!'

விஜயா யோசிப்பைச் செயல்படுத்த, தான் பதுங்கிக் கிடந்த இடத்திலிருந்து ஒரு சின்ன சத்தம்கூட கேட்டுவிடாமல் மெதுவாக எழுந்தாள். தயங்கி நடந்தாள்.

'என்ன தீப்பெட்டி கிடைச்சுதா...?'

"இல்லையே...!"

"இது என்னான்னு பாரு...?"

"காய்ந்த மாங்கொட்டை..."

பேச்சுக்குரல கேட்டுக் கொண்டிருக்க, விஜயா புற்களை விலக்கிக் கொண்டு நடந்தாள்.

"பைரவ்...! ஏதோ சத்தம் கேட்கலை...?"

"என்ன சத்தம்...?"

"சல சல'ன்னு ஏதோ உராய்கிற மாதிரி..."

"இது தென்னந்தோப்பு... அடிக்கிற காத்துக்கு தென்னை மட்டைகள் உரசாம இருக்குமா...?"

"எனக்கு என்னமோ யாரோ நடந்து போகிற மாதிரி தோணுது..."

"அப்படியா...?" பைரவ் உஷாரானான்.

இருவரும் மூச்சை அடக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார்கள். திடீரென்று பலராம் கத்தினான்.

"பைரவ்...! அங்க... பாரு... ஏதோ உருவம் அசையுது... அது விஜயாவாகத்தான் இருக்கணும்..."

"ஏய்... நில்லு..."

'பார்த்துவிட்டார்கள்!'

விஜயா ஓடத்தொடங்கினாள்.

"ஏய்... ஓடாதே... நில்லு...!"

அவர்கள் வீசிய ஒரு பெரிய கல் தோள்பட்டையை உரசிக் கொண்டு 'விர்ர்' ரென்று பறந்தது.

"பலராம்...! அவ காலைப் பார்த்துக் கல்லை வீசு!"

கல்லால் தொடர்ந்து அடிக்கத் தொடங்கிவிட்டார்கள். நேர்பாதையில் ஓடக்கூடாது. 'விருட்... விருட்' என்று பாதையை மாற்றிக் கொண்டு ஓட வேண்டும்.' விஜயாவின் மூளை சொல்லிக் கொடுக்க அதன்படி ஓடினாள். கற்கள் இப்போது திசை மாறி பறந்து எங்கேயோ போய்விழுந்தன.

கிட்டத்தட்ட பத்து நிமிட ஓட்டம்.

பிரதான சாலை வந்தது. வாகனப் போக்குவரத்து அறவே இல்லாமல் - கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் சாலையில் ஒரு வெளிச்சப் பொட்டுகூட இல்லாமல் - ஏதோ ஒரு பாலைவனப் பிரதேசம் மாதிரி காட்சியளித்தது.

'ஏதாவது வாகனம் வராதா?'

விஜயாவின் எதிர்பார்ப்பில் ஏமாற்றம். இரண்டு பக்கத்திலும் எந்த வாகனமும் விரவில்லை. இப்படியுமா ஒரு சாலை இருக்கும்.

இரண்டு நிமிட நேரம் ஓடியிருப்பாள். வயிற்றுத் தசைகள் இப்போது அதிகமாய் வலித்தன. இதயம் பயத்தில் அடைத்துக் கொள்ள கால்கள் பின்னிக் கொண்டன. கண்களுக்கு இருட்டு பாய்ந்த உணர்வு.

'இனி ஓட முடியாது போலிருக்கிறதே!'

விஜயா, திரும்பிப் பார்த்தாள். மூன்று பேரும் ராட்சத வேகத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

'மறுபடியும் அவர்கள் கையில் மாட்டிக் கொள்ள வேண்டியதுதான்!'

விஜயாவை பயம் முழுமையாய் ஆக்கிரமிக்க, மேற்கொண்டு ஓட முடியாமல் தத்தளித்து தலை சுற்றி சாலையோரமாய் சரிந்து விழுந்தாள். எழ முயன்று முடியாமல் அப்படியே ஒரு அரைப்புக் குறியாய் சுருண்டாள்.

அந்த மூன்று பேரும் வேக வேகமாய் ஓடி வந்து அவளைச் சூழ்ந்தார்கள்.

விஜயா, மறுபடியும் கண் விழித்த போது மங்கலான வெளிச்சம் பரவிய ஒரு அறைக்குள் இருப்பதை உணர்ந்தாள். தலைக்கு மேல் மின்விசிறி நிதானமான வேகத்தில் சுழன்று கொண்டிருந்தது. காற்றில் லேசாய் மருந்து நெடி.

விஜயா எழுந்து உட்கார முயல - அவளுடைய வலது கையை யாரோ பற்றினார்கள். பார்த்திபன் பார்வைக்குக் கிடைத்தார். புன்னகைத்தார்.

"என்ன விஜயா... இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு...



பரவாயில்லை?"

"சார்..." என்ற விஜயா கலவரமாய் விழிகளை சுழற்றினாள். பார்த்திபன் கேட்டார் "யாரைத் தேடுறீங்க விஜயா?"

"அ... அ... அந்த மூணு பேர்...?"

"உங்களைத் தொரத்திட்டு வந்தவங்கதானே?"

"ஆ... ஆமா..."

"போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் இருட்டுல இறங்கி ஓடிட்டாங்க... தூரத்திட்டு போயும் அவங்களைப் பிடிக்க முடியவில்லை... அவங்க எல்லாம் யாருன்னு நீங்கதான் சொல்லணும். இப்ப நீங்க நாகர்கோவில் அரசு மருத்துவ மனையில் இருக்கீங்க. உங்களுக்கு ஏற்பட்டது அதிர்ச்சி மயக்கம் மட்டுந்தான். வேறு எதுவும் இல்லை. ஒரு மணி நேரம் மயக்கமா கிடந்து இப்பத்தான் கண் விழித்து பார்த்திருக்கீங்க. உங்ககிட்ட விசாரணை பண்ணிட்டு போலாம்னுதான் காத்திட்டிருந்தேன்."

விஜயா ஒரு ஐந்துநிமிட நேரத்தைச் செலவழித்து பைரவ், பலராம், தியாகு தன்னைக் கடத்தியது, துரத்தியது பற்றி சொல்லி முடித்தாள்.

"அதென்ன ரோஜா தோட்டம்?"

"தெரியலை சார்... அது ஏதோ ஒரு சங்கேத வார்த்தையாய் இருக்கலாம். நீங்க எப்படி சார் என்னைக் காப்பாத்தினீங்க? யாராவது நான் ஆபத்துல இருக்கிறதைப் பற்றி உங்களுக்குத் தகவல் சொன்னாங்களா?"

"இல்லை! நானும் சப்-இன்ஸ்பெக்டரும் அபிநாய கடத்தப்பட்ட வேனைத் தேடிக்கிட்டு ஜீப்ல வந்தோம்."

"அபிநயா கடத்தப்பட்டாளா... எப்படி சார்?"

"டெலிபோன் பூத்திலிருந்து யாரோ ரெண்டு பேராலே வேன் மூலமா கடத்தப்பட்டிருக்கா. வேனின் பின்புறம் ஒரு ரோஜாப் பூ படம் இருந்ததாய் அங்கிருந்த இளைஞன் சொன்னான். அந்த வேனைத் தேடிக்கிட்டுத்தான் நானும், சப்-இன்ஸ்பெக்டரும் ஜீப்பில் புறப்பட்டோம். சாலையோரமாய் நீங்க மயங்கி விழுந்திருக்க, உங்களை சூழ்ந்து நின்ற மூணு பேரையும் பார்த்தோம். மயங்கி விழுந்து கிடக்கிறது நீங்கதான்னு முதலில் தெரியலை. அப்புறம்தான் எங்களுக்குத் தெரிஞ்சது... அபிநயாவைத் தேடிக்கிட்டு வந்த எங்களுக்கு அதிருஷ்டவசமா உங்களைக் காப்பாற்றக்கூடிய வாய்ப்பு கிடைச்சது."

"சார்... அபிநயா எங்கே இருக்கான்னு கண்டு பிடிக்க முடியுஞ்சதா?"

"இல்லை... போலீஸ் அதுக்கான முயற்சிகளை எடுத்துக்கிட்டு இருக்காங்க... எப்படியும் அபிநயாவை விடியறதுக்குள்ளே கண்டு பிடிச்சுடுவோம்..."

"சார்... அபிநயா இப்போ ஆபத்தில் இருக்கிறதால உங்ககிட்டே சில உண்மைகளைச் சொல்லவேண்டியிருக்கு."

"என்ன உண்மைகள்?"

"சார்... அபிநயா வீட்ல ஒரு பாதாள அறை இருக்கு. அந்த அறைக்குள்ளே நான் இறங்கிப் பார்த்தேன். உள்ளே யாரும் இல்லை. ஆனா நெருப்பு அணைக்கப்படாத சிகரெட்டு துண்டு ஒண்ணு அங்கே கிடந்தது."

பார்த்திபன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருடைய உடம்பு முழுவதும் பரபரப்பு பற்றிக் கொண்டது.

## 19

அந்த நள்ளிரவில் அபிநயாவின் வீட்டுக்கு முன்பாய் போலீஸ் ஜீப் பிரகாசமான முகப்பு விளக்குகளின் வெளிச்சத்தோடு வந்து நின்றது.

இன்ஸ்பெக்டர் பார்த்திபனும், விஜயாவும் இரண்டு காவலர்களோடு ஜீப்பில் இருந்து இறங்கி வீட்டை நோக்கிப் போனார்கள். ஏற்கனவே அங்கு காவலுக்கு இருந்த போலீசார் 'சீல்' வைத்த பூட்டை உடைத்து கதவைத் திறந்துவிட்டார்கள். பார்த்திபன் கேட்டார்.

"கரண்ட் இன்னும் வரலையா...?"

"வரலை சார்... நேசமணி நகரில் இருக்கிற டிரான்ஸ்பார்மர் மழையில் போயிடிச்சு சார். நாளைக்குக் காலையில்தான் 'கரண்ட்' வரும்ன்னு சொல்லிட்டாங்க."

காவலரின் கையில் இருந்த பெரிய டார்ச்சை வாங்கிக் கொண்ட பார்த்திபன், அது கொட்டிய வெளிச்சத்தில் விஜயாவோடு உள்ளே போனார். இருட்டு விலகிப் போயிற்று. அறைக்குள் இருந்து பொருள்களை அடையாளம் காட்டியது.

சமையலறைக்குள் நுழைந்தார்கள். திட்டின் மேல் உட்கார்ந்திருந்த பூனை ஒன்று வெளிச்சம் தன் மேல் விழுந்ததும் மிரண்டு பாய்ந்து - உடனே மறைந்தது.

பார்த்திபன், விஜயாவிடம் கேட்டார்.

"அந்த சுரங்கப்பாதை எந்த அறையிலிருந்து தொடங்குது...?"

"அந்த அறையில் சார்... வாங்க..." விஜயா, முதல் ஆளாய் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

தட்டுமுட்டு சாமான்களால் மறைக்கப்பட்டிருந்த அந்த நிலத்தடி பலகையைக் காட்டினாள்.

"இந்த இடம்தான் சார்..."

காவலர்கள் அந்த பலகையைத் தூக்கினார்கள். பார்த்திபன், கையில் வைத்து இருந்த 'டார்ச்'சைத் தாழ்த்தி உள்ளே வெளிச்சத்தை அனுப்பினார். மரப்படிகள் தெரிந்தன.



தோல் உறைக்குள் தூங்கிக் கொண்டிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்ட பார்த்திபன், அதைக் கவனமாய் உயர்த்திப் பிடித்தபடி முதல் படிக்கட்டில் காலை வைத்து இறங்கினார். அவரைத் தொடர்ந்து விஜயாவும் - விஜயாவுக்குப் பின்னால் இரண்டு காவலர்களும் தொடர்ந்தார்கள்.

'யாராவது உள்ளே இருக்கலாம்...?' என்கிற எச்சரிக்கை உணர்வோடு துப்பாக்கியின் டிரிக்கரில் விரலை வளைத்தபடி பார்த்திபன், மெல்ல இறங்கி தளத்துக்கு வந்தார்.

மெல்லிய மின்சார வெளிச்சம் பரவியிருந்தது.

பார்த்திபன், விஜயாவைப் பார்த்தார்.

"இங்கே மட்டும் எப்படி வெளிச்சம்...?"

"தெரியலை சார்..."

"நீங்க இந்த சுரங்க அறைக்குள்ளே வந்தபோது நெருப்பு அணைக்கப்படாத சிகரெட் துண்டைப் பார்த்ததாய் சொன்னீங்க... அது எந்த இடம்...?"

விஜயா கை காட்டினாள், "அதோ... அந்த இடம் தான்...!"

பார்த்திபன், விஜயா கை காட்டிய அந்த இடத்துக்கு பார்வையைக் கொண்டு போனார். ஒரு மில்லி மீட்டர் நீளத்தில் அந்த சிகரெட் துண்டு கிடந்தது. காவலர்களுக்கு கண்ணைக் காட்ட, அவர்கள் அதை எடுத்து ஒரு சிறிய காகிதத்தில் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

தொடர்ந்து நடந்தார்கள். சுரங்கப் பாதையை அடைத்துக் கொண்டு அந்த அறை குறுக்கிட்டது. அறை கதவில் பெரிய பழங்கால இரும்புப் பூட்டு.

பார்த்திபன், பூட்டை நெருங்கி இழுத்துப் பார்த்தார். அது அசையாமல் அடம்பிடித்தது. எல்லோரையும் விலகி நிற்கும்படி சொல்லிட்டு கையிலிருந்த துப்பாக்கியின் வாயை பூட்டின் வாயோடு பொருத்தினார். டிரிக்கரை அழுத்தினார். "ட்டூமீல்ல்ல்..." கதவு அதிர்ந்தது கனமான அந்த இரும்புப் பூட்டு தெறித்து விழ - கதவைத் தள்ளினார் பார்த்திபன்.

கதவு திறந்து கொண்டது. உள்ளே மங்கலாய் மின்சார வெளிச்சம்.

நுழைந்தார்கள். பார்த்திபன், வியப்பில் உறைந்தார். அந்த அறை குளிர்ச்சியோடு, ஒரு நட்சத்திர ஓட்டலின் அந்தஸ்தோடு இருந்தது. அலங்கார வேலைப்பாட்டுடன் கட்டில். பக்கத்து சுவரில் இருந்த கதவு கண்ணில்பட, பார்த்திபன் தள்ளிப் பார்த்தார்.

குளியலறைக்கு சலவைக்கல் பதிக்கப்பட்டது தெரிந்தது. தண்ணீர் குழாய்கள் தங்க நிறத்தில் டாலடித்தன.

விஜயாவுக்கு வியப்பில் மூச்சு திணறியது.

"என்ன... சார்... பூமிக்கு கீழே இப்படியொரு சொகுசு அறையா?"

"அபிநயாவும் அவளுடைய கணவன் மோகனும் ஏதோ சட்ட விரோதமான காரியத்தைப் பண்றதுக்காக இந்த அறையைப் பயன்படுத்தி இருக்கலாம்னு நினைக்கிறேன்..."

"அவங்க அப்படிப்பட்டவங்க இல்லை சார்..."

"அதை எப்படி சொல்றீங்க விஜயா...? அபிநயா உங்களுக்கு போன் பண்ணி ஒரு சூட்கேசை கொண்டு வரச் சொன்னாள் இல்லையா?"

"ஆமா..."

"அதில் என்ன இருந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது...!"

"எனக்கு அந்த சூட்கேஸ் முக்கியம். என்னோட எதிர்கால வாழ்க்கையே அந்த சூட்கேசுக்குள்ளேதான் இருக்குன்னு அபிநயா உங்ககிட்டே சொன்னாளா? இல்லையா...?"

"ஆமா... சொன்னாள்!"

"அந்த சூட்கேஸ்ல இருந்தது உறுதியா நல்ல விஷயம் கிடையாது. கெட்ட விஷயமா இருக்கப் போய்த்தான் அபிநயா உங்ககிட்டே எதுவும் சொல்லலை."

பார்த்திபன் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த சத்தம் கேட்டது. 'ர்ர்ர்' ரென்று வண்டு ரீங்காரம் செய்வது போன்ற சத்தம்?"

விஜயா, கதவோரமாய் போய் நின்று உற்று கேட்டுவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

"சார்... சத்தம் இதுக்குள்ளே இருந்துதான் வருது."

பார்த்திபன் வேகமாய்ப் போய் ஒரு கதவைப் பிடித்து இழுத்துப் பார்த்தார். அது கொஞ்சமாய் நெகிழ்ந்து கொடுத்தது. காவலர்கள் உதவிக்கு வந்து இழுக்க, கதவு பெரிய சத்தத்துடன் நகர்ந்தது.

பார்த்திபன், உள்ளே பார்வையைச் செலுத்தினார். மூலையில் நான்கு அங்குல நீளத்தில் எதுவோ பளபளபாய் மின்னியது. 'ர்ர்ர்' ரென்ற சத்தம் அதிலிருந்துதான் வந்து கொண்டிருந்தது.

எச்சரிக்கை உணர்வோடு அந்த பளபளப்பான பொருளை நெருங்கி, பார்த்திபன் குனிந்து பார்த்தார்.

அது, பெண்கள் அணியும் கடிகாரம், நடுப்பகுதி 'ரேடி'யத்தில் மின்னியது. மெல்ல கையில் எடுத்தார். சத்தம் நின்று போயிற்று.

அலாரம் பொருத்தப்பட்ட கடிகாரம் அது.

"விஜயா! இந்த கடிகாரம் யாரோடதுன்னு சொல்ல முடியுமா?"



விஜயா, வாங்கிப் பார்த்து "தெரியாது" என்று சொல்லி மறுபடியும் கடிகாரத்தை பார்த்திபனிடம் கொடுக்க முயன்றபோது அதை உற்றுப் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறீங்க விஜயா?"

"இதில் மணல் மாதிரி ஏதோ ஒட்டியிருக்கு."

பார்த்திபன், பதற்றமாய் வாங்கிப் பார்த்துவிட்டு லேசாய் முகம் மாறினார். "இது மணல் கிடையாது விஜயா."

"பின்னே...?"

"இரத்தக்கறை... உறைந்து போன ரத்தம் பொருக்குக் கட்டிப் போய் மணல் மாதிரி தெரியுது"

விஜயாவின் கண்களில் கலவரம், "அப்படின்னா இந்த அறையில் யாருக்கோ ஆபத்து ஏற்பட்டிருக்கு."

"இருக்கலாம்" சொன்ன பார்த்திபன், அந்த அறையை பார்வையால் சுழுவிக் கொண்டே மெல்ல சுற்றி வந்தார். குளியலறைக்குள் போய் எட்டிப் பார்த்து அங்கே இரத்தக் கறைகள் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு மறுபடியும் பார்த்தார். கட்டிலை ஒட்டி நடந்தபோது - அவருடைய பூட்ஸ் காலுக்கு கீழே ஏதுவோ 'கரக்' என்றது. விலகி நின்று பார்த்தார்.

விரல் அளவில் அந்த கறுப்பு நிற சலவைக்கல் சிதறல் பார்வைக்கு சிக்கியது. கையில் எடுத்தார்.

அதை அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே காவலர்களில் ஒருவர், பக்கத்தில் வந்து நின்றபடி சொன்னார் -

"சார்... இதே கறுப்பு நிற கல்லைத்தான் இந்த அறையோட தரைப்பரப்புக்கு போட்டு இருக்காங்க."

"ஆமா! இப்படியொரு கல்லின் சிதறல் இந்த அறைக்குள்ளே இருக்குன்னா, தரைப்பரப்பை யாரோ சேதப்படுத்தி இருக்கணும். எங்கே சேதமாகி இருக்குன்னு பாருங்க."

காவலர்கள் இரண்டு பேரும் பார்வைகளைக் கீழே போட்டபடி அறையைச் சுற்றி வந்தார்கள். பத்து நிமிடத் தேடலுக்குப் பின் பார்த்திபனிடம் வந்தார்கள்.

"சார்... தரை எங்கேயும் உடைபடலை... நல்லா பார்த்துட்டோம்!"

"பின்னே இந்தக் கல் எப்படி வந்திருக்கும்?"

விஜயா குறுக்கிட்டாள் "சார்... என் மனசுக்குள்ளே இருக்கிற ஒரு சந்தேகத்தைச் சொல்லட்டுமா?"

"உம்... சொல்லுங்க!"

"இந்தக் கட்டிலைத் தள்ளிட்டு கட்டிலுக்கு அடியில் பாருங்க... அதுல ஏதாவது ஒரு கல் உடைபட்டு இருக்கணும்."

பார்த்திபன், காவலர்களுக்கு கண்களாலேயே கட்டளை

கொடுக்க, அவர்கள் அந்தப் பெரிய கட்டிலை கஷ்டப்பட்டு நகர்த்தினார்கள்.

அது அங்குலம் அங்குலமாய் நகர்ந்து தரைப்பரப்பைக் காட்டியபோது எல்லோர் முகங்களிலும் அதிர்ச்சி பரவியது.

கட்டிலுக்கு அடியில் இருந்த சலவைக் கற்கள் தோண்டி எடுக்கப்பட்டு மறுபடியும் அதே இடத்தில் பதித்ததற்கு அடையாளமாய் மணல் சிதறியிருந்தது. புதிதாய் சிமெண்டு பூச்சு தெரிந்தது. ஒரு கல்லின் முனை உடைபட்டு மொக்கையாய் இருந்தது.

"விஜயா உங்க சந்தேகம் சரிதான்! கட்டிலுக்கு கீழே இருக்கிற கற்களை எடுத்துட்டு கீழே எதையோ போட்டு புதைச்சு இருக்காங்க."

விஜயா, அந்த இடத்தையே பயமாய் பார்த்துக் கொண்டிருக்க... பார்த்திபன், காவலர்களை நோக்கித் திரும்பினார்.

"இந்த இடத்தைத் தோண்டுங்க."

## 20

கட்டிலுக்கு கீழே இருந்த கிரானைட் கற்களை இரண்டு காவலர்கள் கடப்பாரை உதவியோடு நெம்பி எடுக்க அவை சுலபமாய் நெகிழ்ந்து கொடுத்தன. அப்படியே தூக்கி சுவரோரமாய் நிறுத்தினார்கள். கீழே ஆழமாய் சதுரப்பரப்பில் குழியொன்று தெரிய, நீளமாய் மரப்பெட்டி பார்வைக்கு கிடைத்தது. சவப்பெட்டி மாதிரியான வடிவம்.

இன்ஸ்பெக்டர் பார்த்திபனும், விஜயாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். விஜயாவின் குரல் நடுங்கியது.

"சார்... மரப்பெட்டிக்குள்ளே யாரையோ வைச்சி கீழே புதைச்சி இருக்காங்க."

'இருக்கலாம்! ஏதோ வாடை வர்றமாதிரி தெரியுது...'

பார்த்திபன், தன்னுடைய கைக்குட்டையை எடுத்து மூக்கையும், வாயையும் மறைக்கிற மாதிரி கட்டிக் கொண்டார். விஜயாவும் சேலைத் தலைப்பால் சுவாசத்தை தவிர்த்தாள். காவலர்கள் குழியில் இறங்கி - பக்கத்துக்கு ஒருவராக நின்று கொண்டு பெட்டியின் மேல் மூடியைத் திறந்தார்கள்.

பெரிய பெரிய பாலிதீன் பைகளில் ஏதோ எலக்ட்ரானிக் கருவிகள் அடைசலாய் தெரிந்தன. அவை வெளியே எடுக்கப்பட்டு குழிக்கு மேலே வந்தன. பார்த்திபன், அந்த பாலிதீன் பைகளை பிரித்து உள்ளேயிருந்த கருவிகளை எடுத்தார். பார்த்ததும் புரிந்தது.

வீடியோ படம் எடுக்கும் காமிராக்கள். இன்னொரு பாலிதீன்



பையில் கம்ப்யூட்டர் டிஸ்க்குகள் நூற்றுக்கணக்கில் தெரிந்தன.

பார்த்திபன், காவலர்களிடம் கேட்டார்.

"பெட்டிக்குள்ள வேற என்ன இருக்கு?"

"வேற ஒண்ணுமில்ல சார்."

"ஏதோ ஒரு மோசமான வாடை வருது... குழிக்குள்ளே நல்லாப் பாருங்க..."

காவலர்கள், மரப்பெட்டியைத் தூக்கி கீழே குனிந்து பார்த்துவிட்டு பார்த்திபனிடம் நிமிர்ந்தார்கள்.

'சார்... இங்கே ஒரு எலி செத்துக் கிடக்கு... அதுதான் வாடை."

"அது மேல மொதல்ல மண்ணை போட்டு மூடுங்க... இல்லேன்னா இந்த அறைக்குள்ளே நிக்க முடியாது" பார்த்திபன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர் சட்டைப் பாக்கெட்டில் இருந்த செல்போன் உயிர்ப்பித்து கூப்பிட்டது. எடுத்து காதுக்குக் கொடுத்தார், பார்த்திபன்.

"அலோ..."

"இன்ஸ்பெக்டர்... நான் டாக்டர் மகாலிங்கம் பேசுறேன்."

"சொல்லுங்க டாக்டர்."

"அபிநயாவோட கணவர் மோகனை, ஆஸ்பத்திரியில் காணோம்..."

"டாக்டர்! நீங்க என்ன சொல்றீங்க... மோகன் எப்படி காணாம போனார்?"

"தெரியலை... நான் வழக்கம் போல ராத்திரி மோகனோட அறைக்கு போனபோது அவர் இல்லை."

"மோகன் சுயநினைவு இல்லாமதானே இருந்தார்? அவர் எப்படி தானாக எந்திரிச்சி போயிருக்க முடியும்?"

"அவரா போயிருக்க முடியாது. யாரோ வந்து கடத்திகிட்டு போயிருக்காங்க."

"எப்படி டாக்டர்?"

"புரியலை... இன்னிக்கு ஆஸ்பத்திரியில மூணு பேர் ஆபரேஷன் முடிஞ்சி வீட்டுக்குப் போனாங்க. 'ஸ்டிரெச்சர்'கள் மாறி மாறி மேலேயும் கீழேயும் போயிட்டு இருந்ததால கொஞ்சம் குழப்பமான சூழ்நிலை இருந்தது. அதை உபயோகப்படுத்திகிட்டு யாரோ மோகனை கடத்திகிட்டு போயிருக்காங்க."

"பக்கத்தில இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் கொடுத்துட்டீங்களா?"

"கொடுத்துட்டேன்."

"நான் இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே வந்து உங்களைப் பார்க்கிறேன்" பார்த்திபன், செல்போனில் பேசிவிட்டு விஜயாவிடம் திரும்பினார்.

"அபிநயாவைக் கடத்திகிட்டு போன மாதிரியே மோகனையும் கடத்திகிட்டு போயிருக்காங்க. இதெல்லாம் எதுக்காகன்னு புரியலை..."

"சார்..." காவலர்களில் ஒருவர் குறுக்கிட்டார். "இந்த கம்ப்யூட்டர் டிஸ்க்குகளுக்கு மத்தியில் ஒரு கடிதம் இருந்தது. அது என்னான்னு பாருங்க சார்..."

பார்த்திபன் வாங்கிப் பார்த்தார்.

கம்ப்யூட்டரில் ஆங்கிலத்தில் தயாரான கடிதம். பார்த்திபன் படிக்கப் படிக்க மனசுக்குள் தமிழாக்கம் ஓடியது.

'இத்துடன் 257 ரோஜா அனுப்பியுள்ளோம். இதில் சில ரோஜாக்கள் அதிக வாசனை கொண்டவை. எந்த ரோஜாவுக்கு வாசனை அதிகம் என்பதை ஒரு நட்சத்திரக் குறி வைத்துச் சொல்லியுள்ளோம். இந்த ரோஜாக்களை உடனடியாகப் பயன்படுத்த வேண்டாம். மூன்று மாதம் கழித்து பயன்படுத்தினால் பலன் கிடைக்கும். 'எண்!' என்று குறிப்பிட்டுள்ள ரோஜாவை முதலில் பயன்படுத்துங்கள் எல்லா விபரங்களும் கிடைக்கும்.

பார்த்திபன் விஜயாவிடம் அந்தக் கடிதத்தைக் கொடுக்க அவள் வாங்கி படித்துப் பார்த்துவிட்டு குழப்பமான குரலில் கேட்டாள்.

"சார்... இந்த ரோஜா என்கிற வார்த்தை சி.டின்னு சொல்லப்படுகிறது இந்த கம்ப்யூட்டர் டிஸ்க்குன்னு நினைக்கிறேன்..."

"ஆமா...! மோகனும் ஆஸ்பத்திரியில் சுய உணர்வு திரும்பி வாக்கு மூலம் கொடுத்தபோது 'ரோஜா' என்கிற வார்த்தையைச் சொன்னார்."

"என்னைக் கடத்திக்கிட்டு போனவங்களும் 'ரோஜா தோட்டம்' வாங்க வந்தியான்னு கேட்டதுக்கு இப்பத்தான் அர்த்தம் புரியுது."

"இந்த கம்ப்யூட்டர் டிஸ்க்குகளில் அப்படி என்ன இருக்குன்னு தெரியலையே... ஒரு கம்ப்யூட்டர் இருந்தா போட்டுப் பார்த்துக்கலாம்..."

"சார்... அபிநயாவோட படுக்கையறையில் ஒரு கம்ப்யூட்டரைப் பார்த்த மாதிரி எனக்கு ஞாபகம்..."

"அப்ப பிரச்சினை இல்லை. இந்த டிஸ்க்குகளையெல்லாம் அங்கேயே கொண்டு போய் பார்த்துடலாம்... எல்லா சி.டிக்களையும் பத்திரமா எடுத்து வை...ங்க..."

பார்த்திபன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - அந்த அறையின் மூலையில் இருந்த ஒரு கதவு சின்ன சத்தத்துடன் திறக்க, எல்லோருடைய பார்வையும் விருட்டென்று அந்த திசை நோக்கிப் போயின.



விஜயாவின் கண்கள், திகைப்பை அள்ளிக் கொண்டன. கதவிலிருந்து அபிநயா வெளிப்பட்டாள். கையில் சிறியதாய் ஒரு இயந்திரத் துப்பாக்கி, ஜீன்ஸ் பேண்டு, பனியனில் ஒரு இளைஞனைப்போல் தெரிந்தாள்.

"அபி...!" விஜயா கத்திக் கொண்டே அவளை நோக்கி நகர முயல, அபிநயா இயந்திரத் துப்பாக்கியை உயர்த்திப்பிடித்து, "விஜயா! பக்கத்தில் வராதே...!" என்றாள்.

விஜயா அப்படியே நின்றாள். "யாரும் என் பக்கத்தில் வரக்கூடாது. நான் சொல்றபடி கேட்டா இந்த சுரங்க அறையிலிருந்து உயிரோடு வெளியே போகலாம். இல்லேன்னா நீங்க இதே குழிக்குள்ளே சமாதியாக வேண்டியதுதான்...!"

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் ஏதோ பேச முயல அபிநயா கர்ஜித்தாள்..

"இன்ஸ்பெக்டர்...! நீங்க பேசக்கூடாது. நான் என்ன சொல்றேனோ அதை நீங்க செய்தா போதும். உங்க இடுப்பில் இருக்கிற துப்பாக்கியை எடுத்து அந்தக் குழிக்குள்ளே போடுங்க..."

பார்த்திபன் தயங்க... அபிநயாவின் கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கி, ஒரு பாம்பின் தலை போல் உயர்ந்து எல்லோரையும் மாறி மாறி குறி பார்த்தது.

"இன்ஸ்பெக்டர்...! உங்களுக்கு ஒரு நிமிசம் மட்டும் அவகாசம். துப்பாக்கிதான் உங்களுக்கு முக்கியம்ன்னா நான் விஜயாவைச் சுட்டுத்தள்ள வேண்டியிருக்கும்... பரவாயில்லையா...? விஜயா, ஒரு காலத்துல எனக்கு உயிர்த் தோழி. ஒண்ணா படிச்சோம். இன்னிக்கு அவ எனக்கு உயிர்த் தோழி கிடையாது. என்னோட எதிரி விஜயாவைப் பற்றி உங்களுக்கு ஒரு புதுத் தகவல் சொல்லட்டுமா...? நீங்க நினைக்கிற மாதிரி அவ அப்பாவிப் பொண்ணு கிடையாது."

"அப்படின்னா...?"

"அவ உங்ககிட்ட சொன்ன 'அக்காவோட கல்யாண'க்கதை, பொய். கல்யாணத்துக்காக என்கிட்டே பணம் கேட்க வந்ததும் பொய். அவ கோயமுத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு என்னைத் தேடி வந்ததுக்கு காரணம் தெரியுமா...? அவ பார்க்கிற வேலை அப்படி. போலீசின் புலனாய்வுத் துறையில் நிழல் பிரிவு படை இருக்கு. அந்தப் பிரிவில் வேலை பார்க்கிற ஒரு அதிகாரிதான் விஜயா. வெளியுலகத்துக்குத் தெரியாத இந்த நிழல் பிரிவு போலீஸ் அதிகாரியான விஜயா, சுட்டுக் கொல்லப்படணும்ங்கிறது உங்க விருப்பமா இருந்தா துப்பாக்கியை அப்படியே வெச்சுக்குங்க..."

பார்த்திபன், விஜயாவை அதிர்ச்சியாய் பார்த்துக்

கொண்டே தன் கையில் இருந்த துப்பாக்கியைக் குழிக்குள் எறிந்தார்.

அபிநயாவின் பார்வை இப்போது விஜயாவின் மேல் நிலைத்தது. "விஜயா...! நீ என்னை வேவு பார்க்க வந்த ஒரு போலீஸ் அதிகாரி என்கிற விஷயம் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் எனக்குத் தெரிஞ்சது. முன்னாடியே எனக்குத் தெரிஞ்சிருந்தா உன்னை அனுப்பி தலையணை உறைக்குள் இருந்த பெட்டியை எடுத்து வரச் சொல்லி இருக்கமாட்டேன்."

"அபி...! இப்ப... அது...?"

"கவலைப்படாதே விஜயா... எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் மூலமா அந்தப் பெட்டி என்கைக்கே வந்துடுச்சு. அதுல என்ன இருந்ததுன்னு நீ கேட்கலாம். அத்தனையும் ரோஜாக்கள்தான். எங்க பாஷையில் ரோஜா என்கிற வார்த்தைக்கு கம்ப்யூட்டர் டிஸ்க்ன்னு அர்த்தம். இந்த கம்ப்யூட்டர் டிஸ்க்குள்ளே என்ன இருக்குன்னு உங்கள்ல யாருமே தெரிஞ்சுக்க முடியாது. ஏன்னா நீங்க யாருமே உயிரோடு இருக்கப் போறது இல்லை."

பார்த்திபன், விஜயாவுடன் இரண்டு காவலர்களும் கலக்கமான பார்வைகளோடு பின்வாங்க, அபிநயா சிரித்தாள்.

"உங்களையெல்லாம் சுட்டுக் கொல்லக்கூடிய மனோ தைரியம் எனக்கு இல்லாததால அந்தக் காரியத்தை இப்போ வேறு ஒருத்தர் செய்யப் போகிறார். அவரும் உங்களுக்கு அறிமுகமானவர்தான்..." சொன்ன அபிநயா, பின்பக்கம் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தாள்.

அடுத்த விநாடி -

இன்னொரு கதவைத் திறந்து கொண்டு மோகன் வெளிப்பட்டான்.

அவன் கையிலும் ஒரு இயந்திரத் துப்பாக்கி.

## 21

மோகன் கையில் துப்பாக்கியோடு வெளிப்பட்டதைப் பார்த்து இன்ஸ்பெக்டர் பார்த்திபனும், விஜயாவும் அதிர்ந்து போனவர்களாய் இரண்டடி பின்னுக்கு நகர்ந்தார்கள்.

அபிநயா புன்னகைத்தாள்.

"இன்ஸ்பெக்டர்! உங்க போலீஸ் துறை எவ்வளவு திறமையாய் செயல்பட்டாலும் சரி... நாங்க அதுக்கும் ஒருபடி மேலே செயல்படுவோம்... இந்த பாதாள அறைக்கு ரெண்டு பக்கம் வரப்போக வழி இருக்கு. நாங்க ரெண்டு பேரும் ஒரு பத்து நிமிசத்துக்கு முன்னால் வேறு வழியா வந்திருந்தா இந்தத் தளம் உடைபட்டு உண்மைகள் வெளியே வவந்திருக்காது. கொஞ்சம் தாமதம் பண்ணிட்டோம்." அபிநயா சொல்லி நிறுத்த, மோகன்



தொடர்ந்தான்.

"உண்மைகள் வெளியே வந்தாலும் அது இந்த பாதாள அறையைவிட்டு வெளியே போகப் போவதில்லை. அந்த உண்மைகளைப் போலவே நீங்களும் உயிரோடு வெளியே போகப் போவது இல்லை..."

எல்லோரும் திகைத்தனர்.

"அபி...!"

"என்னங்க...!"

"நீ உன்னோட தோழி விஜயாவையும் ஒரு போலீஸ்காரனையும் சுட்டுத் தள்ளு. நான் என்னோட பங்குக்கு இன்ஸ்பெக்டரையும் போலீஸ்காரனையும் சுட்டுத்தள்றேன்... குழிகூட தோண்ட வேண்டியது இல்லை. கட்டிலுக்கு கீழே இருக்கிற குழியிலேயே போட்டு சமாதி பண்ணிடலாம். கம்ப்யூட்டர் டிஸ்க்குகளையும் காமிராக்களையும் எடுத்துக்கிட்டு நாம வந்த வழியே போயிடலாம்..."

விஜயா, உள்ளுக்குள் கலவரப்பட்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் துணிச்சலோடு பேசினாள்.

"இதோ பார் அபி...! நாங்க போலீஸ் துறையில் என்னிக்கு வேலைக்கு சேர்ந்தோமோ அன்னிக்கே உயிர் மேல இருக்கிற ஆசையை மறந்துட்டுதான் காக்கி சீருடை போட்டுக்கிட்டவங்க. நானோ மிஸ்டர் பார்த்திபனோ எங்ககூட வந்து இருக்கிற இந்த போலீசாரோ உயிரை விடுறதுக்கு தயாரா இருக்கோம். ஆனா, உன்னால தப்பிக்க முடியாது. நீ மட்டும் இல்லை... உன் ரோஜா தோட்டக் கும்பலில் இருக்கிற யாருமே தப்பிக்க முடியாது. இது போலீசோட உள் வளையம். இதிலிருந்து தப்பிச்சுட்டாலும் போலீஸ் போட்டிருக்கிற இன்னொரு வளையத்திலிருந்து தப்பிக்க முடியாது...!"

அபிநயா சிரித்தாள். "அந்தக் கவலை உனக்கு வேண்டாம் விஜயா. தமிழ்நாட்டு போலீஸ் ஒரு காலத்துல ஸ்காட்லாண்டு போலீசுக்கு இணையானதாக இருந்தது. இப்போ அப்படி கிடையாது. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா விஜயா! எங்க ரோஜா தோட்டக் கும்பல்ல போலீஸ் அதிகாரிங்க ரெண்டு பேர் இருக்காங்க... அதே மாதிரி வேறு மூணு அதிகாரிகளும் எங்க தொழிலுக்குப் பக்க பலமா இருக்காங்க... போலீஸ் ரகசியமா என்ன நடவடிக்கை எடுத்தாலும், அதே நிமிஷம் அது எங்க காதுக்கு வந்துடும். போலீஸ் எங்களைப் பிடிக்கிறதுக்காக எத்தனை வளையம் போட்டாலும் சரி, நாங்க மாட்டமாட்டோம். ஏன்னா அவங்க பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்."

"அபி!" ஏதோ சொல்ல முற்பட்ட விஜயாவை அபிநயா, கையமர்த்தினாள்.

"இதோ பார் விஜயா... உன்கிட்டே கதை பேசிட்டிருக்க இது நேரம் கிடையாது. எங்களை மோப்பம் பிடிச்சுட்ட உங்களை மாதிரியான நேர்மையான காக்கி சட்டைகளுக்குத் தோட்டாக்களைக் கொடுத்துட்டு கொஞ்ச நாளைக்குத் தலைமறைவா இருந்துட்டு அப்புறம் ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு போயிடலாம்ங்கிறது எங்க திட்டம்... அந்த திட்டத்துக்கு அடிக்கல் நாட்டத்தான் இப்போ வந்திருக்கோம். உங்களைச் சுட்டுத் தள்ள வேண்டிய கட்டாயம் இப்போ எங்களுக்கு."

அபிநயா, கையில் வைத்து இருக்க அந்தச் சிறிய இயந்திரத் துப்பாக்கியை உயர்த்தினாள்.

"விஜயா! உன்கூட பழகின நாட்கள் ஞாபகத்துக்கு வந்து மனசுக்கு கஷ்டத்தைக் கொடுத்தாலும் மனசைக் கல்லாக்கிட்டு..."

அபிநயா பேசிக்கொண்டிருக்கும்போதே

விஜயா, தன் வலது காலுக்குப் பக்கத்தில் கிடந்த அந்தச் சிறிய கிரானைட் துண்டு கல்லை கால் விரல்களால் கவ்வி - விநாடிக்கும் குறைவான நேரத்தில் காலை உயர்த்தி வீசினாள். போலீஸ் பயிற்சியில் கற்றுக் கொண்ட பயிற்சி அது!

"ர்ர்ர்ர்ப்ப்ப்ப்...!"

கிரானைட் துண்டுக்கல் ஒரு தோட்டாவாய்ப் பறந்து அபிநயாவின் முகத்தைத் தாக்க -

'ஆ...' வென்ற பெரிய பெரிய அலறலோடு நிலை குலைந்து பின்னுக்குச் சாய்ந்தாள், அபிநயா. அவளைத் தாங்கிப் பிடிக்க முயன்ற மோகன், இயந்திரத் துப்பாக்கியை கீழே நழுவ விட்டான்.

அந்த மைக்ரோ விநாடி நேரத்தைப் பயன்படுத்திக் கொண்ட பார்த்திபன், பாய்ந்து அந்த துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டார்."

நெற்றியில் வழியும் ரத்தத்தோடு அபிநயா சுதாரித்து எழ முயல, விஜயா அவளுடைய இடுப்பை உதைத்து மறுபடியும் கீழே விழ வைத்தாள்.

மல்லாந்து விழுந்தவளின் தலை, பக்கவாட்டு சுவரில் மோத, அப்படியே சுருண்டாள். பாதி உயர்வற்ற நிலையில் கீழே கிடந்தவளின் கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கியை நிதானமாய்ப் பறித்துக் கொண்டாள் விஜயா.

மோகனை இரண்டு போலீசார் மடக்கிப் பிடித்திருக்க - பார்த்திபனின் கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கி அவனையே முறைத்தது.



காவல் நிலையம்.

கைதிகளின் அறை.

நெற்றியில் மருந்துக் கட்டோடு அபிநயா, தலை குனிந்து உட்கார்ந்திருக்க - பக்கத்தில் மோகன், பனியன் உள்ளாடையோடு உட்கார வைக்கப்பட்டிருந்தான்...

சுற்றிலும் காவல் துறை அதிகாரிகள். அவர்களுக்கு மையமாய் விஜயா - பார்த்திபன்.

மோகனிடம் பார்த்திபன் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அந்த கம்ப்யூட்டர் டிஸ்க்குகளையெல்லாம் போட்டுப் பார்த்துட்டோம். எல்லாமே ஆபாசப்படங்கள். பெரிய பெரிய குடும்பத்துப் பெண்கள் எல்லாம் அதுல இருக்காங்க... அதெல்லாம் எப்படி எடுக்கப்பட்டது?"

மோகன் மௌனமாய் இருக்க - பார்த்திபன் தன் கையில் வைத்திருந்த பெட்ரோல் நனைத்த பஞ்சை மோகனின் வலது பக்க காதுக்குள் திணித்தார். காதுக்கு வெளியே பஞ்சு நீட்டிக் கொண்டிருந்தது.

மோகன் திகிலாய் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பார்த்திபன் தீக்குச்சியை எடுத்தார்.

"இதோ பார் மோகன்...! போலீஸ் பிடிக்குள்ளே வந்துட்டா உண்மையைப் பேசியாகணும். இப்படி மௌனமாய் இருந்துகிட்டு எதுவும் பேசாமே இருந்தா இந்த தீக்குச்சிக்குப் பிடிக்காது. இப்போ காதுக்கு வெளியே நீட்டிக்கிட்டு இருக்கிற பஞ்சை கைக்கு எட்டுகிற தூரத்துலதான் இருக்கு. தீக்குச்சியை பற்ற வைச்சா என்னாகும் தெரியுமா? காதுக்குள்ளே நெருப்பு போய் எல்லாமே தீய்ஞ்சு... தீக்காயமாயிடும்... பரவாயில்லையா?"

பார்த்திபன் கேட்டுக் கொண்டே தீக்குச்சியை மோகனின் காதுக்குப் பக்கத்தில் கொண்டு போனார்.

மோகன் விடாப்பிடியாய் மௌனம் சாதிக்க, பார்த்திபன், தீப்பெட்டியில் குச்சியை உரசினார். அது நெருப்பு ஜுவாலை ஒன்றை உதிக்க வைத்து பெட்ரோல் பஞ்சு இருந்த மோகனின் காதுக்குப் பக்கத்தில் போனது.

அபிநயா வீறிட்டாள்.

"வே... வேண்டாம்... அவரை ஒண்ணும் பண்ணாதீங்க. உங்களுக்கு என்ன விபரம் வேணுமோ அதை நானே சொல்லிடுறேன்."

பார்த்திபன் புன்னகைத்தார்.

"இதுதான் உண்மையான பதிபக்தி! சொல்லம்மா உன்னோட ரோஜா தோட்டம் பற்றி!"

அபிநயா தெளிவாய் - நிதானமாய் - தீர்க்கமாய் பேசினாள்.

"எனக்கு யோகா கலையைக் கற்றுக் கொடுத்தது என்னோட

அம்மா. அவங்கதான் எனக்கு குரு. அதுல ஒரு கலை நித்திர யோகா. இந்த நித்திர யோகாவைக் கத்துக்க கடுமையான பயிற்சி வேணும். நான் இந்த நித்திர யோகாவைக் கத்துகிட்டேன். அதைப் பயன்படுத்தி நாம விரும்புகிற வரைக்கும் ஒருத்தரை எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் தூங்க வைக்கலாம். அந்த அரிய கலையைப் பயன்படுத்தி முதலில் தூக்கம் வராமல் அவதிப்படும் பணக்காரர்களையும், கடுமையான நோய்களால் கஷ்டப்படும் நோயாளிகளையும் தூங்கச் செய்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில்தான் மோகன் எனக்குப் பழக்கமானார். புற்று நோயால் கஷ்டப்பட்டுகிட்டு இருந்த அவரோட அப்பாவைக் தூங்க வைக்கிறதுக்காக அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப் போன போது எங்களுக்குள்ளே பழக்கம் ஏற்பட்டது. அது காதலாக மாறி கல்யாணத்துல முடிந்தது. மோகனோட அப்பா இப்போ உயிரோடு இல்லை."

பேச்சை சில விநாடிகள் நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள் அபிநயா.

"மோகன் ஒரு கட்டிடக்கலை என்ஜினியராக வேலை பார்த்தாலும், கம்ப்யூட்டரில் அவருக்கு நல்ல அறிவுத்திறமை இருந்தது. அவரோட சித்தப்பா மகன் ஒருத்தன் கலிபோர்னியாவில் சாப்ட்வேர் என்ஜினியராக இருந்தான். அங்கே அவன் இண்டர்நெட்டில் ஒரு செக்ஸ் வெப்சைட்டைத் தொடங்கி அதை ஒரு தொழிலாகப் பார்த்துட்டிருந்தான். ஒரு தடவை அவன் இந்தியாவுக்கு வந்தபோது எங்களை சந்திச்சான். எங்ககூட மூணு நாள் தங்கியிருந்த போது எனக்குத் தெரிஞ்ச அந்த நித்திர யோகா கலையைக் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டான். இந்தக் கலையை வேறு விதமா பயன்படுத்தினால் கோடிக் கணக்கில் வருமானம் சம்பாதிக்க முடியும்னு சொன்னான்."

"அப்புறம்..."

"அதாவது அழகான பெண்களை நித்திர யோகா மூலம் நீண்ட தூக்கத்துக்கு உட்படுத்தி, அவங்களுக்கு தெரியாமலே ஆபாசப்படம் எடுத்து கம்ப்யூட்டர் டிஸ்க்குகளை தயாரித்து இண்டர்நெட்டில் வெளியிடலாம்னு முடிவு பண்ணினோம். முதலில் இதை நான் மறுத்தாலும் மோகன் தொடர்ந்து கட்டாயப்படுத்தவே ஒத்துகிட்டேன். எங்க வேலை தொடங்கியது. அழகான பெண்கள், பெரிய வீட்டுப் பெண்கள், கல்லூரி மாணவிகள்னு இனம் பிரிச்சு தொழிலைச் சிறப்பா பண்ணினோம். கம்ப்யூட்டர் டிஸ்க்குகளைத் தயாரிக்கிற வேலையைபிரதான அறையில் வைச்சுட்டோம். தொழில் அமோகமா நடந்து டாலர் மழையில் நனைஞ்சோம். ஆடம்பர



வாழ்க்கை வாழ்ந்தால் அது எல்லோருக்கும் சந்தேகத்தை வரவழைக்கக்கூடும் என்கிற காரணத்தால் அடக்கி வாசிச்சோம்..."

விஜயா குறுக்கிட்டாள்.

"என்னைக் கடத்திகிட்டு போனவங்க யாரு?"

"எங்க தொழிலைப் பற்றி தெரிஞ்சுகிட்ட ஒரு கூட்டம் அது நாங்க கஷ்டப்பட்டு தயாரிச்ச கம்ப்யூட்டர் டிஸ்க்குகளை உரிச்ச வாழைப்பழம் மாதிரி கொண்டுபோகத் திட்டம் போட்டாங்க. நாங்க இல்லாத நேரத்துல வீட்டுக்குள்ளே வந்து தேடிப் பார்க்கிறதும், வசதியா நாங்க மாட்டினா, எங்களைத் தாக்குறதும் அந்தக் கூட்டம்தான்! போலீஸ்காரர் பீட்டரை கொலை செய்ததும் அந்த ஆட்கள்தான். என்னைக் கண்டு பிடிக்க அந்தக் கூட்டம் ஒரு வாரமா முயற்சி பண்ணிகிட்டு இருந்தது. உனக்கு நான் இருக்கிற இடம் தெரிஞ்சு இருக்கலாம்னு நினைச்சுத்தான் உன்னைக் கடத்திகிட்டு போனாங்க.. என்னோட கணவர் மோகனையும் அந்தக் கூட்டம் தான் தாக்கி விஷ ஊசி போட்டுக் கொலை பண்ண முயற்சி செஞ்சது. டாக்டர் மகாலிங்கம் கொடுத்த சிகிச்சையின் காரணமா பிழைச்சுட்டார். மறுபடியும் டாக்டர் மூலமா கொல்லப் பார்த்ததும் அந்த நர்ஸ் உதவியால் தப்பிச்சுகிட்டார்."

விஜயா கேட்டாள்.

"உன்னோட கணவர் மோகனுக்கு மனநிலை சரியில்லைன்னு உன் வீட்ல ஒரு மருத்துவ அறிக்கை இருந்தது. அது உண்மையா?"

"உண்மைதான். பாதாள அறை படிக்கட்டுகளில் ஒரு தடவை தவறி விழுந்துட்டார். மூளைப் பகுதியில் அடிபட்டு லேசா சித்தம் கலங்கிய நிலையில் இருந்தார். சிகிச்சை எடுத்ததுல குணம் தெரிஞ்சது இருந்தாலும், சில சமயங்களில் அவரோட நடவடிக்கைகள் வித்தியாசமா இருக்கும். நடு ராத்திரியில் எழுந்து கோழியை அறுப்பார். சில சமயங்களில் காரணமில்லாமே நாயை பெல்ட்டால் அடிப்பார். வீட்ல வளர்த்த ரெண்டு நாயும் இவர்கிட்ட பெல்ட் அடி வாங்கியே உயிரை விட்டுவிட்டன. டாக்டர் கிட்டே இதைப் பற்றி சொன்ன போது நாளடைவில் சரியா போயிடும்னு சொன்னார்."

பார்த்திபன் கேட்டார்,

"டெலிபோன் பூத்திலிருந்து நீ எனக்கு போன் பண்ணி பேசி முடிந்ததும் உன்னை யாரோ ரெண்டு பேர் கடத்திகிட்டு போனதாக அந்த பூத் இளைஞன் சொன்னான். உன்னைக் கடத்திகிட்டு போனது யாரு?"

"அவங்க என்னோட ஆட்கள்தான்! போலீசுக்கு என்மேல் எந்த சந்தேகமும் வந்துடக்கூடாதுங்கிறதுக்காக நானே ஒரு ஆபத்துல இருக்கிற மாதிரியான நிலைமையை உருவாக்கத்தான் அப்படியொரு கடத்தல் நாடகம் போட்டேன். மூத் இளைஞனுக்கும் பணம் கொடுத்தோம்."

"சில விநாடி நோத்துக்குப் பிறகு விஜயா, அபிநயாவை நெருங்கி, அவளுடைய தோளின்மேல் கையை வைத்தாள்.

"அபி... நான் இப்போ போலீஸ் அதிகாரியா உன்கிட்ட பேசலை. உன் பழைய தோழியாக பேசுறேன். கல்லூரி நாட்களில் பெண்மையைப் பற்றியும் கற்பைப் பற்றியும் ரொம்பவும் உயர்வாய் பேசித்தான் உனக்குப் பழக்கம். மேலே துப்பட்டா போடாமல் வரும் பெண்களை நீ நிறுத்தி வைச்சு திட்டி இருக்கே... உன்னை உரசிட்டு போன ஆண்களுக்கு செருப்பை எடுத்துக் காட்டி இருக்கே... அப்போப்பட்ட நீயா இப்படியெல்லாம் பண்ணினே... என்னால் நம்ப முடியலை அபி... நம்ப முடியலை... நீ இப்படி மாற என்ன காரணம் சொல்லு."

அபிநயா, விஜயாவையே பார்த்தாள். அவளுடைய உதடுகள் மெல்ல அசைந்தன.

"சொல்லட்டுமா?"

"சொல்லு."

"காரணம் - சின்னதுதான்... ஆசை பெரிசா வரும்போது மனசு சின்னதாகி விடுகிறது. மனசு சின்னதாகும்போது அதன் செயல்பாடுகளில் சாக்கடை வாடைதான் வரும்... யோகா ஒரு நல்ல கலை. அதை உன்னதமான முறையில் பயன்படுத்தியிருந்தால் நான் உயரத்துக்கு போயிருப்பேன். இப்போ..."

பேச முடியாமல் கண்ணீரோடு தத்தளிக்கும் தன் பழைய தோழியைப் பதிலுக்குக் கண்ணீரோடு பார்த்தாள், விஜயா.

இந்தச் சதிகாரக் கூட்டம் தப்பிக்க முடியாது. வெளியே திரளாய் போலீசார்.

(முற்றும்)

